www.padippakam.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
நவம்பர் 2005 ■ ரூ. 6
Volume : 3 - Issue : 1



## மரண தண்டனை

### நீதியை நிலைநிறுத்தும் கொலை!

படிப்பகம்

www.padippakam.com

பாபாசாகேப் பேசுகிறார்

# நாடாளுமன்ற ஜனநாயகம் தோல்வியடைந்தது ஏன்?

மனித சமூகத்தின் அரசாங்கம், மிகவும் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை அடைந்துள்ளது. கொடுங்கோல் மன்னர்களின் எதேச்சதிகாரத்தை, மனித சமூகத்தின் அரசாங்கம் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. நீண்ட நெடிய ரத்தப் போராட்டத்திற்குப் பிறகு இந்த அமைப்பு தூக்கியெறியப்பட்டு, அந்த இடத்தில் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற புதிய அரசமைப்பு அமர்ந்தது. அரசாங்கக் கட்டமைப்பில் இதுதான் முடிந்த முடிவு என்றும் கருதப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும், சுதந்திரத்தையும், சொத்துரிமையையும், நல்வாழ்வையும் அளிக்கும் புத்துலகத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையை அது ஏற்படுத்தியது. இத்தகைய நம்பிக்கைகளுக்குப் போதிய ஆதாரங்களும் இருந்தன.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மக்களின் குரலை எதிரொலிக்க சட்டமன்றம் இருக்கிறது. அந்தச் சட்டமன்றத்திற்குக் கீழ், அதன் ஆணைக்கு உட்பட்டதாக நிர்வாகத் துறை இருக்கிறது. சட்டமன்றத்திற்கும், நிர்வாகத் துறைக்கும் மேல் - அவை இரண்டையும் கண்காணிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் அவற்றை வைத்திருக்கவும் - நீதித்துறை இருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் ஒரு மக்கள் அரசாங்கத்திற்குரிய எல்லா அம்சங்களையும் பெற்றுள்ளது. அதாவது, மக்களால் - மக்களைக் கொண்டு - மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்கம் என்ற தன்மையை அது கொண்டிருக்கிறது. இந்நிலையில், நாடாளுமன்ற ஜனநாயகம் உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு நூற்றாண்டு முடிவதற்குள்ளாகவே அதனை எதிர்த்துக் குரல் எழுப்பப்பட்டு வருவது, ஓரளவு வியப்புக்குரிய செய்தியாகவே இருக்கிறது.

இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து வருகின்றனர். மேலும், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிராக அதிருப்தியடையாத நாடுகள் வெகு குறைவாகவே உள்ளன என்றுகூடச் சொல்லலாம். நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிரான இத்தகைய அதிருப்திக்கும், மனக்குறைவுக்கும் காரணம் என்ன? இது, ஆய்வுக்குரிய கேள்வியாகும். இப்பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டிய அவசர அவசியம், வேறு எந்த நாட்டையும்விட இந்தியாவில்தான் அதிகம் உணரப்படுகிறது. ஏனெனில், இந்தியாவில்தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்வதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. "நாடாளுமன்ற ஜனநாயகம் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். வெளியே தெரிவதைப் போல, அது சிறப்பான ஒன்றல்ல" என்று இந்தியர்களிடம் சொல்வதற்கு, மிகுந்த துணிச்சலுடன் ஒருவர் பெரிதும் தேவைப்படுகிறார்.

நாடாளுமன்ற ஜனநாயகம் தோல்வியுற்றது ஏன்? சர்வாதிகாரிகள் உள்ள நாட்டில் அது தோல்வி அடைந்ததற்கு, அது மெதுவாக இயங்கியதே காரணம். எத்தகைய விரைவு நடவடிக்கையையும் அது தாமதப்படுத்துகிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில், நிர்வாகத் துறைக்கு சட்டமன்றம் முட்டுக்கட்டைப் போடக்கூடும். நிர்வாகத் துறையின் பாதையில் சட்டமன்றம் குறுக்கிடாமல் இருந்தாலும், நீதித்துறை குறுக்கிட்டு, அதன் சட்டங்களைச் செல்லாதவை என்று அறிவிக்கக் கூடும்! அதே நேரம், சர்வாதிகாரம் சுதந்திரமாகச் செயல்படவும், நாடாளுமன்ற ஜனநாயகம் அனுமதிப்பதில்லை. இதனால்தான் சர்வாதிகாரிகள் ஆளும் இத்தாலி, ஸ்பெயின், ஜெர்மனி போன்ற நாடுகளில் - நாடாளுமன்ற ஜனநாயகம் மதிப்பிழந்த ஒரு கோட்பாடாகக் கருதப்படுகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை சர்வாதிகாரிகள் மட்டுமே எதிர்த்தால், அது பற்றி நாம் கவலைப்பட ஒன்றுமில்லை. ஏனெனில், நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிரான அவர்களது சாட்சியம் - உண்மையில் ஒரு சாட்சியமே அல்ல. உண்மையில், நாடாளுமன்ற ஜனநாயகம் சர்வாதிகாரத்திற்கு ஒரு வலிமையான தடை அரணாக இருக்கும் என்பதால், அது வரவேற்கப்படவே செய்யும். எனினும், சர்வாதிகாரத்தை எதிர்க்கும் மக்கள் வாழும் நாடுகளில்கூட, கெட்ட வாய்ப்பாக நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிராக மிகுந்த அதிருப்தியே நிலவுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் குறித்து பெரிதும் வருத்தத்திற்குரிய செய்தி இது...

ஒன்றை மட்டும் பொதுவான முறையில் கூறலாம். சுதந்திரத்திற்கும், சொத்துரிமைக்கும், நல்வாழ்வுக்குமான உரிமையை பெருந்திரளான மக்களுக்கு உறுதி செய்ய அது தவறிவிட்டதே - இந்த அதிருப்திக்கு முக்கிய காரணம் என்று கூறலாம். இது உண்மை எனில், இந்தத் தோல்விக்கான காரணங்களைத் தெரிந்து கொள்வது முக்கியமாகும். இந்தத் தோல்விக்கு தவறான சித்தாந்தமோ அல்லது தவறான அமைப்பு முறையோ அல்லது இவை இரண்டுமே காரணமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. நாடாளுமன்ற ஜனநாயகத்தைச் சிதைத்துச் சீர்குலைத்துவிட்ட தவறான சித்தாந்தத்திற்கு, இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறினால் போதும் என்று நினைக்கிறேன்.

- தொடரும்

B R Ambedkar

*அகில இந்தியத் தொழிற்சங்கத்தின் சார்பில், 1943 செப்டம்பர் 8 முதல் 17 வரை டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், இறுதி நாள் ஆற்றிய உரையிலிருந்து...*



**"நாடாளுமன்ற ஜனநாயகம், மூன்று திசைகளில் முன்னேறி இருக்கிறது. சமத்துவ அரசியல் உரிமைகள் என்னும் கருத்தை விரிவுபடுத்தி அது முன்னேறி இருக்கிறது. சமூக, பொருளாதார சமத்துவ வாய்ப்பை அது அங்கீகரித்திருக்கிறது. மூன்றாவதாக, சமூக விரோதத் தன்மை கொண்ட நிறுவனங்கள் அரசை செயலற்றதாக முடமாக்கிட முடியாது என்பதை அது ஏற்றிருக்கிறது. இருப்பினும், ஜனநாயகத்தைப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ள நாடுகளில் கூட, நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிராகக் கடும் எதிர்ப்பு உருவாகி இருக்கிறது."**



படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி

புகைப்படம் : 'இந்து'



அக்டோபர் 14 அன்று, அம்பேத்கர் பவுத்தத்திற்கு மாறிய நிகழ்வை நினைவுகூறும் வகையில் - நாக்பூரிலுள்ள தீக்ஷா பூமியில் பத்து லட்சம் மக்கள் திரண்டனர்

தொலைந்த உருவங்களின் மீது
சேகரிக்கப்பட்ட நெருப்புகளை
கிளர்த்தி வளர்த்த நெடுந்தீயில்
பொசுங்கி அவிந்தது
ஜென்மாந்திரங்களின் அடிமைத்தனம்

யுகவிடுதலைக் கீற்றாய்
அண்ணலின் சிந்தனைத் தீயில்
மலர்ந்தது மதமாற்றம்

யாருமறியாத சூத்திரங்களில் கிழிந்த
முதுகு வளைந்த வாழ்வின்மீது
சூட்டுக் கம்பியால் சுழிக்கப்பட்ட
வலி நிவாரண வடிவம் தீட்சாபூமியில்
திரள்கிற மானுடவெள்ள அலைகளில்
தழும்புகிறது விடுதலைக்கான தொனி

கொத்தித் திரியும் பருந்தென
சுழலும் இந்து மதத்திலிருந்து
பெற்ற விடுதலையே
தலித் விடுதலை



படிப்பகம்

www.padippakam.com




மண்ணுரிமை மீட்போம்............................7

நீதியைப் பெற நெடும் போராட்டம்
ச. பாலமுருகன்............................................8

புரட்சியை உலகமயமாக்குவோம்!.............12

"மதம் மாறிய தலித் - ராவுத்தர் ஆகலாம் ஆனால், அய்யங்காராக ஆகமுடியுமா?"
கொடிக்கால் ஷேக் அப்துல்லா..................16

மீள்கோணம்
அழகிய பெரியவன்.................................20

மரண தண்டனை - நீதியை நிலைநிறுத்தும் கொலை!
கோ. சுகுமாரன்........................................22

அழித்தலில் இருந்து திமிறி எழுதல் வரை
அலோக் முகர்ஜி.......................................28

மந்தை ஜனநாயகம்
யாக்கன்.....................................................32

இருளர் வாழ்வு இன்னும் இருளிலா?
விழி.பா. இதயவேந்தன்...........................35

தங்க வயலின் தனிப்பெரும் தலைவர் க. பூசாமி
ஏபி. வள்ளிநாயகம்................................37


அண்மையில், ஜம்முவில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை எடுத்துச் செல்லும் சிறுவன்


- முன்னட்டை ஓவியம் : Paul Lachine
- அட்டை வடிவமைப்பு : யாக்கன்
- இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ், பிரேமா
- அலுவலக ஒருங்கிணைப்பு : ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்




படிப்பகம்

www.padippakam.com

தலித் முரசு
Volume : 3 Issue : 1
நவம்பர், 2005
9 - 10

ஆசிரியர்
புனித பாண்டியன்

ஆசிரியர் குழு
இளங்கோவன்
அழகிய பெரியவன்
யாக்கன்
காவ்யா
விழி.பா. இதயவேந்தன்

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

தொடர்பு முகவரி
203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094
பேசி : 2374 54 73
E-mail : ambedkar@md4.vsnl.net.in

# எதிர்க்க மறுப்பதேன்?

இது, குற்றவாளிகளின் காலம். ஆம், கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட சங்கராச்சாரி, தன்னுடைய வழக்கை தமிழ் நாட்டில் விசாரிக்கக் கூடாது; வேறொரு மாநிலத்தில் விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்க, நீதிமன்றமும் உடனே வழக்கைப் புதுவைக்கு மாற்றியுள்ளது. தன் மீதான வழக்கு எங்கு விசாரிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை 'கிரிமினல்' குற்றவாளிக்கு வழங்கி, தவறான முன்னுதாரணத்தை நீதிபதி லகோத்தி தலைமையிலான 'பெஞ்ச்' ஏற்படுத்தியுள்ளது. அண்மையில், இடஒதுக் கீட்டுக்கு எதிராகவும் இவர்தான் தீர்ப்பளித்தார். இவர், இடஒதுக்கீட்டுக்கு எதிராகத் தீர்ப்பளித்ததற்கான காரணம், தற்பொழுது அம்பலமாகியுள்ளது.

அடுத்து, கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, அதற்குரிய சிறைத் தண்டனையையும் அனுபவித்து, வரலாற்றில் முதுகுளத்தூர் உள்ளிட்ட பல சாதிக்கலவரங்களுக்குக் காரணமான முத்துராமலிங்கத் (தேவருக்கு) - ஒவ்வொரு ஆண்டும் 'குருபூசை' ஏறக்குறைய அரசு விழாவாகவே நடைபெற்று வருகிறது. 1996 - 2000 வரை 'குருபூசை' நடைபெறும் போதெல்லாம் சாதிக் கலவரங்களும் நடைபெற்றன. தென்மாவட்டங்களில் சாதிக்கலவரங்கள் உருவாகக் கூடும் என்று பத்திரிகைகள் எச்சரித்து வருகின்றன. இருப்பினும், அ.தி.மு.க. அரசு - ஒரு சாதி சார்புடன் நடந்து கொள்வது, வன்மையான கண்டனத்திற்குரியது.

இன்றைக்கு இந்த 'குருபூசை'யில் போட்டிப் போட்டுக் கொண்டு பங்கேற்பதை, எல்லா கட்சிகளும் பெருமையாகவும் - வழக்கமாகவும் கொண்டுள்ளன. ஆனால், சாதிவெறியை எதிர்த்து வெகுண்டெழுந்த இம்மானுவேல் சேகரன், இன்றளவும் தீண்டத்தகாதவராகவே கருதப்படுகிறார். 'தாழ்த்தப்பட்டோருக்காகவும் முத்துராமலிங்கம் உழைத்ததாக', தற்பொழுது திட்டமிட்டப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இது, உண்மையானால், அவரது வழித்தோன்றல்கள், தலித்துகளுக்கென சட்டரீதியாக அளிக்கப்பட்ட தலைவர் பதவியை, சட்டத்திற்குப் புறம்பாக எதிர்ப்பது ஏன்? அரசு மற்றும் பிற கட்சிகளின் சாதியப் போக்கே - பாப்பாபட்டியில் ஜனநாயகம் மலரத் தடையாக இருக்கின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு சிறை வைத்து அவமதிக்கும் தமிழக அரசு, முத்துராமலிங்கம் சிலைக்கு மரியாதை அளிக்கிறது. நாடாளுமன்றத்திலும் அவருக்குச் சிலை! ஆனால், சாதியை ஒழிக்கப் போராடிய தந்தை பெரியாருக்கு நாடாளுமன்றத்தில் சிலை இல்லை. திராவிடக் கட்சிகளின் சாதி அரசியலுக்குப் பெரியாரையே அவர்கள் பலியாக்கத் துணிந்துவிட்டனர். இதைவிட வெட்கக் கேடு வேறென்ன? அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்காகவும் போராடிய அம்பேத்கர், சாதித் தலைவராகச் சுருக்கப்படுவதும், சாதி வெறியரான முத்துராமலிங்கம், பிற சாதியினருக் காகவும் பாடுபட்டவராகப் போற்றப்படுவதும் அயோக்கியத்தனம் இல்லையா?

ஜாதி - ஒருபோதும் மக்களை முன்னேற்றாது. அது அடக்குமுறைகளை மட்டுமே கட்ட விழ்த்துவிடும். சாதியால் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மக்கள், தங்கள் உரிமைகளைப் பெற பிற்படுத்தப்பட்டோராக, தாழ்த்தப்பட்டோராக அணிவகுப்பதையும், தங்களுக்கான உரிமைகளைக் கோருவதையும் நாம் வரவேற்கிறோம்; அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கோருவதையும் ஆதரிக்கிறோம். ஆனால், இன்று நடந்து கொண்டிருப்பது என்ன? ஒட்டு மொத்த ஆட்சி அதிகாரத்தையும் ஆக்கிரமித்திருக்கும் பார்ப்பனர்களை, இவர்கள் எதிர்ப்ப தில்லை. தனக்குக் கீழ் இருக்கும் சாதிகளின் இடஒதுக்கீடை எதிர்த்தல்லவா சாதிச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன?

''சாதிப் பெயரைச் சொல்லி திட்டுபவர்களுக்கு முன்ஜாமீன் கிடையாது. விசாரணை யின்போதே கைது செய்யலாம்'' என்ற வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளை ரத்து செய்ய முடியாது என்று அண்மையில் (17.6.2005) சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது. ஆனால், இன்றைக்கு மிக வெளிப்படையாகவே தேவர் சாதியைச் சார்ந்த நடிகர்கள் கூட்டம் போட்டு, தங்கள் சாதிப் பெருமைகளைப் பேசுகிறோம் என்ற பெயரில், தேர்தல் நேரத்தில் கலவரங்களுக்கு வழிவகுக்கின்றனர். இது, அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டும். வன்முறைக்கு வித்திடும் இதுபோன்ற கூட்டங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

ஒருபுறம், சாதி ஒழிப்பை முன்னிறுத்தி - தலித் இயக்கங்கள், சமூக நீதி அமைப்புகள், இடதுசாரி, தமிழ்த் தேசிய, முற்போக்கு இயக்கங்கள் இயங்கி வருகின்றன. மறுபுறம், ஆழமாக சாதி அரசியல் வேரூன்றப்படுகிறது; தேர்தல் நேரத்தில் அது கொழுந்துவிட்டு எரியும். அதற்கு அரசியல்வாதிகளும் ஊடகங்களும் அரண்சேர்க்கின்றன. 'இந்துத்துவ தொழிற்சாலைகள்' அரசு அங்கீகாரத்துடன் சாதியை பலப்படுத்த ஆயுதங்களைகூர் தீட்டுகின்றன, கோயில் போன்ற சாதி உற்பத்திக் கேந்திரங்கள் அதற்குத் துணை நிற்கின்றன. சாதியை முற்றாக மறுப்ப வர்களின் குரல் மட்டும் காற்றில் கரைந்து கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

"ஏழைப் பிரிவினரிடையே பசியும் பட்டினியும் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மட்டும் 40 கோடி மக்களுக்கும் மேல் பட்டினியால் அல்லலுறுகின்றனர். உணவு மற்றும் விவசாயத்திற்கான அய்க்கிய நாடுகள் அவையின் அமைப்பு - '19 நாடுகளில் நிரந்தரமாக பட்டினி கிடப்போர் எண்ணிக்கை 8 கோடியாக உயர்ந்துள்ளது' என்று சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவில் 1996 - 97 இல் இது 1கோடியே 90 லட்சமாக உயர்ந்திருக்கிறது. புள்ளிவிவரங்களைவிட உண்மை நிலை கூடுதலாகவே இருக்கும். 1 கோடியே 90 லட்சம் என்பது, ஏறக்குறைய ஆஸ்திரேலியா கண்டத்தில் உள்ள மக்கள் தொகைக்கு இணையானது. உலகத்தில் ஒவ்வொரு 5 நொடிகளிலும் ஒரு குழந்தை பசியால் இறக்கிறது. இதில் பெருமளவு குழந்தைகள் இந்தியர்கள்! ஆனால், இத்தகைய அதிர்ச்சியூட்டும் செய்திகள் - ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை.

*பி. சாய்நாத்*, புகழ் பெற்ற பத்திரிகையாளர்,
'அவுட்லுக்' பத்தாம் ஆண்டுச் சிறப்பிதழில்

அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன், வேலை நியமனத் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தது. ஒரு புறத்தில் அரசுப் பணிக்கு ஆள் எடுக்காமல் இருப்பதற்கு சட்டம் ஒன்றை நிறைவேற்றி நடைமுறைப்படுத்துகிற ஜெயலலிதா அரசு, மறுபுறத்தில் பணியாளர் தேர்வாணையத்திற்குப் பவளவிழா கொண்டாடுவது வெட்கக் கேடானது. தமிழ் நாடு முழுவதும் 1 லட்சத்து 86 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மறுபுறத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு, பணிக்காகக் காத்திருப்போர் எண்ணிக்கை 60 லட்சத்தைத் தொட்டு நிற்கிறது. அரசுப் பணியிடங்களை நிரப்பக் கூடாது என்ற உலக வங்கியின் ஆணைக் கேற்பவே அ.தி.மு.க. அரசு, புதிதாகத் தேர்வு நடத்தி அரசுப் பணிக்கு ஆள் எடுப்பதைத் தவிர்த்து வருகிறது. உண்மையிலேயே தமிழக மக்களின் மீது அக்கறை இருக்குமானால், தேர்வாணையத் தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்த, ஜெயலலிதா அரசு முன்வர வேண்டும். அதை விடுத்து வெறும் விழா நடத்துவது, தேர்வாணையத்திற்கு இரங்கல் பாடுவதாகவே அமையும்.

*'தீக்கதிர்'* நாளேட்டின் (14.10.2005) தலையங்கத்திலிருந்து

சென்னையில் இயங்கிவரும் இந்தியத் தொழில் நுட்பக்கழகம் (அய்.அய்.டி), தமிழ் நாட்டுக்கும் - தமிழர்களுக்கும் தொடர்பே இல்லாத முழுக்க முழுக்கப் பார்ப்பனர்களே ஆதித்தியம் செலுத்தும் தனித்தீவாகவே இயங்கி வருகிறது. அய்.அய்.டி.யில் 18 துறைகள் இயங்கி வந்தாலும், தாழ்த்தப்பட்டோருக்கோ, பிற்படுத்தப்பட்டவர்களுக்கோ துறைத் தலைமை கிடையாது. இட ஒதுக்கீடு என்ற காற்றுப் புகாத பார்ப்பனக் கோட்டையாக அது இறுமாப்புடன் நடந்து வருகிறது. போராடிப் போராடி தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் ஒடுங்கி விட்டனர்.

பன்னூறு கோடி ரூபாய் முதலீட்டில், மத்திய அரசின் சார்பில் இயங்கிவரும் இந்த உயர் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில், துணைவேந்தர் முதல் பதிவாளர், டீன்கள், துறைத் தலைவர்கள் அனைத்தும் அக்கிரகாரமயமாக இருக்கிறது. அடிமட்டப் பணிகளில்தான் பார்ப்பனர் அல்லாதார் என்ற வர்ணாசிரம நிலை அங்கு நிலவுகிறது. மத்திய அரசின் மனித வளத் துறையின் கீழ் இயங்கி வரும் இந்த நிறுவனத்தை, மத்திய அரசு வழியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை அய்.அய்.டி.யின் சமூக நீதிக்கு விரோதமான, சட்ட விரோதமான போக்குகள், ஊழல்கள் குறித்து விசாரணை நடத்திட ஆவன செய்யக் கோருகிறோம்."

*கி. வீரமணி*, தலைவர், திராவிடர் கழகம், அய்க்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கு 14.10.2005 அன்று எழுதியுள்ள கடிதத்தில்







'டெக்கான் க்ரானிக்கல்'






படிப்பகம்

www.padippakam.com

# மண்ணுரிமை மீட்போம்

பஞ்சமி நிலமீட்பு மாநாடு 10.10.2005 அன்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில், மண்ணுரிமைப் போராளிகள் ஜான்தாமசு - ஏழுமலை திடல், மாமல்ல புரத்தில் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சி யோடு மாநாடு தொடங்கியது. காஞ்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ந. இளஞ் செழியன் மாநாட்டுக்குத் தலைமை தாங் கினார். இணைப் பொதுச்செயலாளர்கள் பெ. ஆற்றலரசு மற்றும் கு. செல்வப் பெருந்தகை, இ. தலையாரி, ஏ.சி. பாவரசு, பொதினிவளவன், உஞ்சை அரசன், தீபன் சக்கரவர்த்தி, சு. நடராசன் உள்ளிட்ட பலர் சிறப்புரையாற்றினர்.

இறுதியில், பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் நிலவுரிமை மற் றும் ஆட்சியுரிமை ஆகியவற்றை வென் றெடுப்பதற்கான தேவையை வலியுறுத்தி எழுச்சி உரையாற்றினார். தொடக்கத்திலே, மாநாட்டுத் தீர்மானங்களை மக்களின் ஆரவார வரவேற்புக்கிடையில் பொதுச் செயலாளர் முன்மொழிந்தார். நிறைவேற் றப்பட்ட தீர்மானங்களில் சில :

❖ சுமார் இரண்டரை லட்சம் ஏக்கர் நிலங்கள் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்ற போதிலும் - 16,704 ஏக்கர் மட்டும் தான் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதில் இதுவரை சுமார் 687 ஏக்கர் நிலம் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆகவே, தமிழ் நாடெங்கும் உள்ள பஞ்சமி நிலங்களைக் கண்டறியவும், அவற்றின் சட் டப்பூர்வமான உரிமையாளர்கள் யாரென் பதைக் கண்டறியவும் 'சிறப்பு ஆணையம்' ஒன்றைத் தமிழக அரசு உடனே அமைக்க வேண்டும். அவ்வாணையம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அத்தகைய பஞ்சமி நிலங்களைக் கண்டறிய வேண்டுமென பணிக்கப்பட வேண்டும்.

**" சுமார் இரண்டரை லட்சம் ஏக்கர் நிலங்கள் பிறரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது என்ற போதிலும், 16,704 ஏக்கர் மட்டும்தான் பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு ஒப்புக் கொண் டுள்ளது. அதில் இதுவரை சுமார் 687 ஏக்கர் நிலம் மட்டுமே மீட்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. "**



பஞ்சமி நில மீட்பு மாநாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் அறைகூவல்

❖ தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வரும் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தில், தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர் களுக்கு வழங்க வாய்ப்பில்லாத இடங்களில் மட்டுமே - தொழில்துறையினர் உள்ளிட்ட பிறருக்கு தரிசு நிலங்களைத் தரலாம் என்ற நிலையை மேற்கொள்ள வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

❖ 'தாட்கோ' மூலம் தாழ்த்தப்பட்ட பெண்கள் விவசாய நிலங்களை வாங்குவதற் குக் கடனுதவி வழங்கப்படுகிறது. தற்போது நிலவும் நிலத்தின் 'சந்தை விலை'யோடு ஒப்பிடும்போது, வழங்கப்படும் கடன் தொகை போதுமானதாக இல்லை. எனவே, அந்தக் கடன் தொகையை உயர்த்த வேண் டும். அது மட்டுமின்றி, அதற்கென தமிழக அரசு ஒதுக்கியுள்ள நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருப்பதால், இத்திட்டத்தின் கீழ் அதிகமான பேர் பயன்பெற முடியாத நிலை யுள்ளது. எனவே, பயனாளிகளின் எண் ணிக்கையை அதிகரிக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டை இருமடங்காக உயர்த்திட வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

❖ நிலங்கள், மரங்கள், ஏரி, குளங்கள் உள்ளிட்ட அரசுக்குச் சொந்தமான பொதுச் சொத்துகளை அரசு ஆண்டுதோறும் ஏலம் அல்லது குத்தகைக்கு விட்டுவருகிறது. ஆனால், அப்படி குத்தகை எடுப்பவர்களில் தலித் மக்கள் ஒரு சதவிகிதம்கூட இல்லை யென்பது வேதனைக்குரியது. சாதி ஆதிக் கம் காரணமாக அவர்கள் ஏலம் கேட்க முடி யாத நிலை உள்ளது. அதையும் மீறி ஏலம் கேட்டால், தலித் மக்கள் படுகொலை செய் யப்படுகின்றனர். சென்னகரம்பட்டி சம்ப வம் அதற்கு ஒரு சான்றாகும். எனவே, அரசு சொத்துகள், பொதுச் சொத்துகள் ஆகியவை தொடர்பான குத்தகையில் மக் கள் தொகைக்கிணையான விழுக்காட்டை தலித் மக்களுக்கென ஒதுக்கீடு செய்யும் வகையில் சட்டமியற்ற வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

❖ சிறப்புக் கூறுகள் திட்டத்தின்படி, மாநில அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஆண்டுதோறும் செலவிடும் தொகையில் மக்கள் தொகை சதவிகிதத்திற்கிணையான தொகையை, தலித் மக்களுக்கு ஒதுக்க வேண்டும் என சட்டம் இருந்தாலும், அதனை எந்தவொரு மாநிலமும் நடைமுறைப்படுத்து வதில்லை. தலித் மக்களுக்குச் சேரவேண்டிய பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி, பிறதிட்டங்களுக்காக மாநில அரசால் திருப்பி விடப்படுகிறது. இந்த மோசடியை உடன டியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அந்த நிதியில் கால்பகுதியை தலித் மக்களுக்குக் கூட்டுப் பண்ணைகள் அமைத்திடப் பயன் படுத்த வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



இட்லரின் நாஜி வதை முகாம் போன்ற அதிரடிப் படையினரின் 'ஒர்க்ஷாப்' சித்ரவதை முகாம்

# நீதியைப் பெற நெடும் போராட்டம்...

■ ச. பாலமுருகன்

கனத்த துயரங்களைச் சுமக்கும் இதயங்கள். நம்பிக்கையை இழந்த கண்கள். இடையிடையே எழுந்து ஓயும் கடந்தகால வதையின் பீதியுடன் நடுங்கும் உடல்கள் என, சந்தன வீரப்பன் தேடுதல் வேட்டையில் காவல் துறையின் கொடூரத்தால் சிதைக்கப்பட்டவர்களை - தமிழக கர்நாடக மலை கிராமங்களில் நாம் காணலாம். வீரப்பன் தேடுதல் வேட்டையில் காவல் துறை வீரப்பனைப் பிடிப்பதாகச் சொல்லி, மக்கள் மீது பயங்கரவாதத் தாக்குதலை நிகழ்த்தியது. தமிழக - கர்நாடக எல்லை கிராமங்கள் 500க்கும் மேற்பட்டவற்றில் மக்கள் மீது இத்தகைய கொடூரத் தாக்குதல்கள் அரங்கேறின.

சந்தேகப்படும் மனிதர்களை அதிரடிப்படை போலிசார், தங்களின் சித்திரவதை முகாம்களுக்குத் தூக்கிச் செல்வது; மாதக் கணக்கில் சட்டவிரோதமாகச் சிறைப்படுத்துவது; அம்மனிதர்களின் உடல் துவாரங்கள் உள்ள மென்மையான பகுதிகளில் மின் அதிர்வைப் பாய்ச்சுவது; தலைகீழாய் தொங்கவிட்டு அடிப்பது; பெண்கள் என்றால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது என, வக்கிரமும் வன்முறையும் மக்கள் மீது ஏவப்பட்டன. அவ்வப்போது சட்ட விரோதமாகப் பிடித்து காவலில் அடைத்து, அவர்களுக்குப் பச்சை வண்ண உடை மாற்றி - வனப்பகுதிக்குக் கூட்டிச் சென்று சுட்டுக் கொன்று, வீரப்பனுடன் நடந்த சண்டையில் கூட்டாளிகள் கொல்லப்பட்டதாக செய்திகளை ஊடகங்களில் வெளிப்படுத்திய அநீதியும் நடந்தேறின.

மொத்தத்தில், வீரப்பன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த தமிழக, கர்நாடக சிறப்பு அதிரடிப்படை காவலர்களிடம் குவிந்திருந்த எல்லையற்ற அதிகாரம், மக்கள் மீது அதிகார அத்துமீறலை நிகழ்த்தின. பல அப்பாவிகள் மீது வீரப்பனின் கூட்டாளிகள் எனப் பழி சுமத்தப்பட்டு, 'தடா' வழக்குகளின் கீழ் பல ஆண்டுகள் சிறைப்படுத்திய துயரங்களைச் சொல்லி மாளாது. இச்சித்திரவதைகள் 1993 முதல் 1998 வரை நீண்டன. ஊடகங்கள் - வீரப்பனின் தாக்குதலையும், காவல்துறையின் 'மறுதாக்குதல்' என்ற போலி மோதல் சாவுகளின் பட்டியலையுமே வெளியிட்டு வந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு இயக்கங்கள்தான் இப்பிரச்சனைக்குக் குரல் கொடுத்து வந்தன.

தமிழகப் பழங்குடி மக்கள் சங்கம், மக்கள் சிவில் உரிமைக் கழகம் போன்றவை, 1994 முதல் இப்பிரச்சினைகளைத் தீர்க்க சில முயற்சிகளை முன்னெடுத்தன. 1998 ஆம் ஆண்டு மக்கள் கண்காணிப்பகம், சோக்கோ அறக்கட்டளை, சிக்ரம் - பெங்களூர் ஆகியவற்றுடன் மேற்கண்ட இயக்கங்கள் இணைந்து, பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளுக்கான கூட்டு இயக்கமாக மாற்றப்பட்டது. கர்நாடக ஓய்வு பெற்ற நீதிபதி சதாசிவா மற்றும் தமிழகத்தைச் சார்ந்த முன்னாள் சி.பி.அய். இயக்குநர் சி.வி. நரசிம்மன் ஆகியோர் கொண்ட விசாரணைக் குழுவை, தேசிய மனித உரிமை ஆணையம் அமைத்தது. இதன் விசாரணை, 2000 சனவரியில் தொடங்கியது. கூட்டு இயக்கத்தினர் கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில், காவல் துறை அச்சுறுத்தலையும் மீறி விசாரணைக் குழுவில் - பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சியமளித்தனர்.

விசாரணைக் குழுவின் இரண்டாம் அமர்வு விசாரணை, கொளத்தூரில் நடைபெற்றது. இவ்விசாரணையில் அதிரடிப்படைத் தலைவராக இருந்த தேவாரம் மீது பாலியல் வன்முறைப் புகார்கள் எழுந்தன. காவல் துறையினரின் பாலியல் வன்முறைகள் பதிவானது. விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பலர் சுட்டுக் கொலை செய்யப்

**“ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்குப் பரிசும் பாராட்டும் - அக்குற்றச்சாட்டு விசாரித்து முடிக்கப்படும் காலம் வரை தரக் கூடாது என்ற தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலை - தமிழக அரசு முற்றாகப் புறக்கணித்தது. ”**



படிப்பகம்

www.padippakam.com

பட்டது தெரிய வந்தது. இவ்விசாரணைக் குழு தன் மூன்றாவது அமர்வை கர்நாடக மாதேஸ்வரன் மலைப் பகுதியில் நடத்தத் திட்டமிட்டது. அப்போது, தேசிய மனித உரிமை ஆணையம் ஓராண்டுக்குள் நிகழ்ந்தேறிய மனித உரிமைப் புகார்களை மட்டுமே விசாரிக்க முடியும் என்று கூறி, கர்நாடக காவல் துறையினர் - அம்மாநில உயர் நீதிமன்றத்தில் தடைபெற்றனர். இத்தடைக்குப் பிறகு விசாரணையில் ஓராண்டு கால தாமதம் ஏற்பட்டது.

இறுதியில், முழு விசாரணைக்குப் பிறகு நீதிமன்றம் சதாசிவா விசாரணைக்கு விதித்த தடையை விலக்கியது. அதன் பிறகு மாதேஸ்வரன் மலை, மைசூர், பெங்களூர் என விசாரணைகள் நடைபெற்றன. பாதிக்கப்பட்ட மக்கள், குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள், மனித உரிமை ஆர்வலர்கள் என மொத்தம் 192 சாட்சியங்கள் பதியப்பட்டன. இவ்விசாரணை முடிந்து நீதிபதி சதாசிவா விசாரணைக்குழு 2.12.2003 அன்று, தேசிய மனித உரிமை ஆணையத்திடம் இறுதி அறிக்கையை அளித்து விட்டது. இவ்வறிக்கை குறித்து தங்களின் கருத்துகளைக் கூற தமிழக, கர்நாடக மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. ஆனால், தமிழக, கர்நாடக அரசுகள் இவ்வறிக்கை குறித்து எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் அமைதி காத்தன.

சந்தன வீரப்பன் சுடப்பட்ட பிறகு தமிழக அரசு, சதாசிவா விசாரணை முன்பு குற்றம் சுமத்தப்பட்ட தேவாரம் உள்ளிட்டப் பல நூறு காவல் துறையினருக்கு கோடிக்கணக்கான ரூபாய் பரிசுகளைக் கொடுத்துப் பெருமைப்படுத்தியது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்குப் பரிசும் பாராட்டும் - அக்குற்றச்சாட்டு விசாரித்து முடிக்கப்படும் காலம் வரை தரக் கூடாது என்ற தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலை - தமிழக அரசு முற்றாகப் புறக்கணித்தது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பெண்கள் பல்வேறு சமூகப் பிரச்சனைகளை எதிர்கொண்டனர். பாலியல் வன்முறை, பொய்வழக்கு, சித்திரவதை, சிறை என அனுபவித்து - இறுதியில் அப்பாவிகள் என விடுதலையாகி வந்த பல பெண்கள், தங்களின் சொந்த குடும்பத்தாராலேயே புறக்கணிக்கப்பட்டனர். மேட்டூர் வட்டம் மேட்டுப்பாளையூரைச் சார்ந்த வள்ளியம்மா, தன் கணவன் சாம்புவுடன் விசாரணைக்காக கர்நாடக காவல் துறையால் அழைத்துச் செல்லப்பட்டார். மாதேஸ்வரன் மலையில் உள்ள காவல் துறையின் கொடூர வதை முகாமான 'ஒர்க்ஷாப்' என்ற இடத்தில் சித்திரவதை செய்யப்பட்டார். அவர் கண் முன்பே அவர் கணவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பிறகு வள்ளியம்மாள், காவல் துறையினரால் பலநாள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டார். இறுதியில், 'தடா' வழக்கில் எட்டாண்டுகள் மைசூர் சிறையிலிருந்து வெளியே வந்தார். சிறைக்குப் பிறகு தன் குழந்தையைக் காண தாய் வீடு சென்றார். அங்கு அவரை அவரது தாய் ஏற்க மறுத்தார். ஓர் இடிந்த குடிசையில் ஆதரவின்றி தனித்து வாழ வேண்டிய அவல நிலைக்கு வள்ளியம்மாள் தள்ளப்பட்டார்.

தங்கம்மாள் பல நாட்கள் காவல் துறை உயர் அதிகாரியால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டார். சிறைத் தண்டனை உள்ளிட்ட பல்வேறு இன்னல்களை அனுபவித்து வந்த பிறகு, தன் சொந்த மகன் கூட தன்னைக் காண வருவதில்லை என கண்ணீர் சிந்துகிறார். தன் கணவன் முன்பே காவல் துறை அதிகாரியால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான குன்றியைச் சார்ந்த மஞ்சுளா, தன் கணவன் மற்றும் உறவினரால் கைவிடப்பட்டு, விரட்டப்பட்ட சோகத்தை முன் வைக்கின்றார். அதைப் போலவே கொடுமையான வதையின் காரணமாக முடமாக்கப்பட்ட ஆண்கள், தங்களின் குடும்பத்திற்குப் பாரமாக மாறிப்போயினர். பிறப்புறுப்புகளில் மின் அதிர்வுகள் வைக்கப்பட்டதால் ஆண்மை இழந்த பலர், தம் குடும்ப வாழ்வை இழந்து கூனிப் போகும் அவலமும், வேறு வகையான உறவுச் சிக்கல்களும் எழத் தொடங்கின.

வீரப்பன் தேடுதல் வேட்டையில் நடந்து முடிந்த அரச வன்முறையின் மனித உரிமை மீறல்கள், பல சமூகச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. இச்சூழலில், மறுவாழ்வு என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிக முக்கியமானதாக மாறியுள்ளது. மேலும், சித்திரவதையின் கணங்கள், இம்மக்களின் மனதில் ஆழமான உளவியல் பாதிப்பை உருவாக்கியுள்ளன. இதனைப் போக்க உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட வேண்டியது மிகமிக அவசியமானது. பாதிக்கப்பட்ட மக்களின் சமூகச் சூழல் பெரும் சோகத்தைத் தருவதாக மாறியுள்ள நிலையில், நீதிபதி சதாசிவா விசாரணைப் பரிந்துரைகள் ஒன்றே அவர்களுக்கு அணைந்து போன நம்பிக்கையை மீட்டுத் தருவதாக இருக்கிறது. ஆனால், பல்வேறு



அதிரடிப்படையினரால் கடும் பாதிப்பிற்குள்ளான பெண்கள் - புதுதில்லியில் செய்தியாளர்களிடையே



படிப்பகம்

www.padippakam.com

போராட்டங்களுக்குப் பிறகும் தேசிய மனித உரிமை ஆணையம், 2003 டிசம்பரிலிருந்து இவ்வறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிகழ்வுகளில் பங்கெடுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச் செயலர் சி. மகேந்திரன், இந்திய தேசிய மாதர் சம்மேளனத்தையும், இப்போராட்டத்துடன் இணைத்து உதவினார். மதுரையில் கடந்த செப்டம்பரில் நடைபெற்ற இவ்வமைப்பின் மாநில மாநாட்டில் பங்கெடுத்த பாதிக்கப்பட்ட பெண்கள், தங்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை எடுத்துக் கூறினர். இம்மாநாட்டில் பங்கெடுத்த அதன் பொதுச் செயலர் ஆனி ராஜா, இப்பிரச்சனையை டெல்லியில் எழுப்ப உறுதி கூறினார். இதன் தொடர்ச்சியாக, 14.10.2005 அன்று டெல்லியில் ஒரு பொது விசாரணைக்கு அவர் ஏற்பாடு பதிலுரைக்காக வெகுகாலம் தேசிய மனித உரிமை ஆணையம் காத்திருக்காது; மாற்றுத் தீர்வுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார். இறுதியில், ஆணையத்தின் தலைவர் நீதிபதி ஏ.எஸ். ஆனந்தையும் சந்தித்தனர்.

அதே தினத்தன்று நடைபெற்ற பொது விசாரணையில், ஏராளமான பெண்கள் பங்கெடுத்தனர். மனித உரிமைப் போராளிகளான நீதிபதி ராஜேந்திர சச்சார், ரவி நாயர், உமா சக்ரவர்த்தி, லும்பா, பேராசிரியர் கமல் மித்ரா ஆகியோர் நடுவர்களாயிருந்தனர். தங்கள் மீது நிகழ்ந்தேறிய மனித உரிமை மீறல்களையும், கொலை செய்யப்பட்ட தங்களின் கணவர் மற்றும் குழந்தைகளின் மரணத்திற்கும் நியாயம் கேட்டனர். தங்கள் ஒரே குடும்பத்தில் ஏழு பேரை காவல் துறை சுட்டுக் கொன்ற அநீதியை முனி தான் கேட்பதாக உறுதியளித்தார். இது போன்ற சம்பவங்கள், எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க முயற்சி எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

நாடு முழுவதும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கென தனி நிதியம் ஏற்படுத்தவும், வீரப்பன் தேடுதல் வேட்டையில் மனித உரிமை மீறல் குற்றம் புரிந்த காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவும் பிரதமரிடம் கோரப்பட்டது. இது வரை பாதிக்கப்பட்ட மக்களை குற்றவாளிகளாகச் சித்தரித்து, அவர்களின் வாழ்வில் இருளை உருவாக்கிய தமிழக, கர்நாடக அரசுகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக 'பாதிக்கப்பட்டவர்கள்' என அங்கீகரித்து, அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் பிரதமரின் மனித நேயமிக்க



அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்ட பெண்களுடன் து. ராஜா - புதுதில்லியில் செய்தியாளர்களிடையே

செய்திருந்தார். தேசிய மனித உரிமை ஆணையத்தின் கதவுகளைத் தட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மக்கள் கண்காணிப்பகம், தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கம், பி.யூ.சி.எல்., சோக்கோ அறக்கட்டளை, சிக்ரம் - பெங்களூர், இந்திய தேசிய மாதர் சம்மேளனம் உள்ளிட்ட அமைப்பினருடன் பாதிக்கப்பட்ட 18 பேர் அடங்கிய குழு, அக்டோபர் 14 அன்று டெல்லி சென்று தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினரான நீதிபதி சிவராஜ் பாட்டிலை முதலில் சந்தித்தது. நீதிபதி சிவராஜ் பாட்டிலின் சந்திப்பு, மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இருந்தது. துயரம் மிக்க இம்மக்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளைக் கேட்டு வேதனையடைந்த நீதிபதி, தமிழக கர்நாடக அரசுகளின் யம்மாவும், பெரமாயியும் எடுத்துக் கூறினர். தமிழக கர்நாடக அதிரடிப்படை காவலர்களின் உண்மை முகம் ஊடகங்களில் அம்பலமானது.

காவல் படைகளின் வன்முறைக்குப் பொதுமக்கள் குறிப்பாகப் பெண்கள் பலியாக்கப்படுவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அதன் பிறகு 17.10.2005 அன்று, பிரதமர் மன்மோகன் சிங் தன் கையில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட சூழலிலும் இம்மக்களைச் சந்திக்க நேரம் ஒதுக்கினார். பிரதமரிடம் இம்மக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் து. ராஜா வழி நடத்தினார். பிரதமர் மன்மோகன் சிங், பெண்களின் பாதிப்புகளைக் கேட்டு வேதனையடைந்தார். தேசிய மனித உரிமை ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அணுகுமுறை, அம்மக்களின் பாதிப்புகளுக்கு ஆறுதலாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருந்தது.

மனித உரிமை மீறல் குற்றங்கள் நடைபெறும்போதெல்லாம் - அதிகாரத்தைக் கைப்பற்ற போட்டிப் போடும் பெரிய அரசியல் கட்சிகள், தங்களுக்கு அப்பிரச்சனையில் துளியும் தொடர்பில்லாதது போல ஒதுங்கி நிற்கும் அவலம் தொடர்கிறது. ஆனால், அரசியல் கட்சிகளுக்கு மக்களின் கண்ணீரைத் துடைக்கும் கடப்பாடு உள்ளது. இப்போதாவது அவை பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்க முன் வரவேண்டும். 'ஒர்க் ஷாப்' உள்ளிட்ட அதிரடிப்படையினரின் பழைய சித்திரவதை முகாம்கள், இட்லரின் நாஜி வதை முகாம்கள் நினைவுச் சின்னமாக மாற்றப்பட்டது போல மாற்றப்பட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com




## பழங்குடியினர்

கதை கவிதை கட்டுரைகள்

விலை ரூ.30

"தமிழகப் பழங்குடியினரைக் குறித்து புரிந்து கொள்ளுதலுக்கான முகாந்திரமாக - இச்சிறிய புத்தகம் வெளிவருவது, பழங்குடி இன மக்களின் பண்பாட்டு, கலாச்சார முன்னேற்றத்தினை முன்னறிவிப்பதாக மட்டுமின்றி - தங்களைக் குறித்த புரிந்து கொள்ளுதலை நோக்கி நகர்ந்துள்ளனர் என்பதும் ஒரு புறம் இருக்க, முதன் முறையாக அவர்களின் வாழ்நிலைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்பது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது."

■ தொகுப்பாசிரியர் : விழி.பா. இதயவேந்தன் ■ வெளியீடு : பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம், 7, பாரதிதாசன் நகர், கல்லூரி சாலை, திண்டிவனம் - 604 001 ■ பக்கங்கள் : 112



●●

## நமது சுதந்திரத்திற்கு என்ன வழி?

விலை ரூ.30

"உங்கள் அனைவருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடச் சொல்ல விரும்புகிறேன். மதம் என்பது மனிதனுக்காகவே அன்றி மனிதன் மதத்துக்காக அன்று. நீங்கள் மனிதர்களாய் நடத்தப்படுவதற்கு முதலில் மதம் மாறுங்கள். ஒன்றுபடுவதற்காக மதம் மாறுங்கள். பலம் வாய்ந்தவர்களாய் விளங்க மதம் மாறுங்கள். சமத்துவத்தைப் பெற மதம் மாறுங்கள். விடுதலையைப் பெற மதம் மாறுங்கள். மதம் மாறுவதால் உங்களுடைய இல்லற வாழ்வு மகிழ்ச்சியானதாய் அமையும். உங்களை மனிதர்களாய் நடத்தாத இந்து மதத்தில் நீங்கள் ஏன் இருக்கின்றீர்கள்?"

■ ஆசிரியர் : டாக்டர் அம்பேத்கர் ■ வெளியீடு : தென்னாட்டு அம்பேத்கர் தளபதி எம். கிருஷ்ண சாமி சமூக விடுதலைக் கல்வி அறக்கட்டளை, பள்ளிகொண்டா - 635 809 ■ பக்கங்கள் : 52



●●

## அனுபவ சித்த மருத்துவர்கள் சங்கம்

மாநாட்டு மலர் - 2005

விலை ரூ.50

"சித்தர்கள் பெரும்பாலும் மறைந்து வாழ்ந்தனர். தமிழ் மக்களுக்குப் பயன்படும் விதத்தில் இருந்த சுவடிகள் அனைத்தும் காலத்தால் அழிந்து போயின. மீதியுள்ளவை போகிநெருப்பில் போட்டு எரிக்கப்பட்டன. எஞ்சியவை ஆற்றில் கொட்டி அழிக்கப்பட்டன. பழைய பொருட்களைக் கட்டாயம் எரித்தாக வேண்டும் என்றும், இல்லாவிடில் 'சுவர்க்கத்தில்' இடம் கிடைக்காது என்றும் நயவஞ்சகமாகக் கற்பிக்கப்பட்டதை நம்பிய தமிழர்கள் தங்கள் அறிவியலைத் தாங்களே அழித்தனர். எஞ்சியவை பெயர்த்தெடுக்கப்பட்டபோது, அவை சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டன."

■ வெளியீடு : நம்பகம், 61/58, பனந்தோப்புத் தெரு, மயிலாடுதுறை - 609 003 ■ பக்கங்கள் : 192






## குரலின் வலிமை

பிடல் காஸ்ட்ரோவைப் பற்றி

விலை ரூ.10

"அலுவலகங்களில் முடங்கிக் கிடக்கும் சுபாவம் உடையவர் அல்ல பிடல். பிரச்சனைகள் இருக்கும் இடங்களில் எல்லாம் தீர்வு காண்பதற்கு அங்கு தோன்றிடுவார், தனது ஒற்றை வாகனத்தில். அவர் பயன்படுத்தும் வாகனத்தை மோட்டார் சைக்கிள்களின் அணிவகுப்போ அல்லது மிகுந்த ஒலி எழுப்பும் வாகனங்களோ என்றும் பின் தொடர்ந்தது இல்லை - அது எந்தப் பொழுதாக இருந்தாலும் சரி, அதிகாலையோ அல்லது புழுதி ஏறிய வெயிலின் உக்கிரத்திலோ, இந்த வாகனம் தனித்தே பயணிக்கும். இந்த எளிய குணம் தான் அவரை அசாதாரண உச்சங்களை நோக்கி உயர்த்திச் சென்றுள்ளது."

■ ஆசிரியர் : கேபிரியேல் கார்சியா மார்க்வஸ் ■ வெளியீடு : வாசல் வெளியீட்டகம், 40 டி/4, முதல் தெரு, வசந்தா நகர், மதுரை - 625 003 ■ பக்கங்கள் : 32




●●

## ஏலேய்! - கவிதைத் தொகுப்பு

விலை ரூ.40

"பாம்பு புடுங்குனாலும் பத்தியம் பாக்காம... தேளு கொட்டுனாலும் தேச்சிவுட்டுட்டு... பாடுபட்டு பாடுபட்டு உங்க பட்டா சாலையில கொண்டுவந்து கொட்டக் கொட்ட... அவுச்சி ஆவாட்டியாக்கிக் குந்தாணியில போட்டு குத்திக்குத்திக் கொடுத்தா... பொடச்சிக் கொடுக்கச் சொல்லி படைக்கிறமாதிரி பாவன காட்டிபுட்டு.. பருப்பும் நெய்யுமா போட்டு நல்லா மூக்கப்புடிக்க முழுங்கிட்டு... அதக்கி அதக்கிக் குசுவ விட்டுகிட்டே நீங்க எழுதனததானடா இலக்கியங்கிலக்கியம்னுட்டு எகிறிக் குதிக்கிறிங்க. எங்ககிட்ட இல்லாத இலக்கியமாடா உங்ககிட்ட... மாருலருந்து பாலு சுரக்கற மாதிரி மனசிலேருந்து பாட்டு சுரக்கற பரம்பரடா எங்களது."

■ ஆசிரியர் : வே. ராமசாமி ■ வெளியீடு : மதிநிலையம், 4(39), தணிகாசலம் சாலை, பிருந்தாவன் அடுக்ககம், தியாகராயர் நகர், சென்னை - 17 ■ பக்கங்கள் : 96




●●

## மனிதம்

விலை ரூ.10

"ஒவ்வொரு கவிதையும் கதையும் நாடகமும் பத்திரிகை செய்தியும் ஓர் அரசியலை நடத்துகின்றன. பெரும்பாலும் இவை செய்யும் அரசியல் சமூகத்தின் பெரும் பகுதி, மக்களுக்கு விரோதமாக உள்ளது. எனவே, இவற்றை விமர்சிப்பது, விவாதத்திற்கு உட்படுத்துவது காலத்தின் தேவை என உணர்ந்து, தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் - இதையே மய்யப் பொருளாகக் கொண்டு கருத்தரங்கம் நடத்தியது. கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் நம்மைச் சிந்திக்கத் தூண்டும்; விவாதிக்கச் செய்யும், விமர்சிக்க வைக்கும்."

■ தொகுப்பாசிரியர் : பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு ■ வெளியீடு : தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், 26, வெங்கடாசல (நாயக்கன்) 3 ஆவது சந்து, திருவல்லிக்கேணி, சென்னை - 5 ■ பக்கங்கள் : 120



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியை உலகமயமாக்குவோம்!



நூல் : எதிர்ப்பும் எழுத்தும்
ஆசிரியர் : துணைத் தளபதி மார்க்கோஸ்
தமிழில் : எஸ். பாலச்சந்திரன்
வெளியீடு : விடியல்
11, பெரியார் நகர்,
மசக்காளி பாளையம்
வடக்கு, கோவை
பக்கம் : 880
விலை : ரூ. 350

துணைத் தளபதி மார்க்கோசின் 'எதிர்ப்பும் எழுத்தும்' நூல் விமர்சனக் கருத்தரங்கு, அக்டோபர் 9 அன்று ஈரோட்டில் உள்ள பெரியார் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. குமாரபாளையம் 'சுமர்ப்பா கலைக் குழு'வின் கலை நிகழ்ச்சியுடன் தொடங்கிய இக்கருத்தரங்கம், இடதுசாரி சிந்தனைகளை விவாதிக்கும் ஓர் மாநாடாகவே நடந்தேறியது. முன்னூறுக்கும் மேற்பட்டோர் காலை முதல் இரவு பத்து மணிவரை அரங்கை விட்டுச் செல்லாமல், இறுதியில் ஜபடிஸ்டா புரட்சி பற்றிய ஆவணத் திரைப்படத்தைப் பார்த்துவிட்டே கலைந்து சென்றனர்.

''எதிர்ப்பும் எழுத்தும் நூலின் மொழி பெயர்ப்பாளர் எஸ். பாலச்சந்திரனின் முன்னுரை, மெக்சிகோ நாட்டு வரலாற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. மெக்சிகோவிலுள்ள சியாபாஸ் மாநிலத்தில் தொடங்கிய ஜபடிஸ்டா விடுதலை இயக்கம் - ஜனநாயகம், சுதந்திரம், நீதி எனும் முழக்கங்களோடு அப்பகுதியிலுள்ள பழங்குடி மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி வருகிறது. மெக்சிகோவில் நடக்கும் நிகழ்வுக்கும், நம் நாட்டில் நடக்கும் நிகழ்வுக்கும் பல பொதுத் தன்மைகள் உள்ளன. எனவே, இந்நூல் நமக்குப் பல்வேறு படிப்பினைகளை வழங்குகிறது'' என காலை அமர்விற்குத் தலைமை வகித்த ஓடை துரையரசன் குறிப்பிட்டார்.

தமிழகக் குடியுரிமைப் பாதுகாப்பு நடுவத்தைச் சார்ந்த மா. செந்தில், ''வறுமையினால் சாவு அதிகமானால், சாவுக்குப் பதிலாகக் கலகத்தை அறுவடை செய்'' என மார்க்கோஸ் குறிப்பிடுகிறார். மெக்சிகப் புரட்சியாளர் மார்க்கோஸ் தன் நாட்டின் வளங்கள் குறித்துத் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார். அந்நாட்டிலுள்ள மரம், மூலிகை, பட்டாம் பூச்சி உட்பட அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்கானப் போராட்டமாகத் தனது போராட்டத்தை மார்க்கோஸ் சித்தரிக்கிறார். இவரது எழுத்துகள், சேகுவேராவின் எழுத்துகளைவிட அடர்த்தி மிக்கவை'' என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் அமைப்பின் மய்யக்குழு உறுப்பினர் வீ. சங்கர், தனது கருத்துகளை ஒரு கட்டுரையாக எழுதி வந்து வாசித்தார்: ''இந்நூல் தமிழகத்தில் ஒரு புதிய விவாதத்தைத் தொடங்கி வைத்துள்ளது. சனவரி 1, 1994. வட அமெரிக்கத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மகிழ்ச்சியில் மெக்சிகோ ஆட்சியாளர்கள் திளைத்துக் கொண்டிருந்தபோது, மார்க்கோசின் ஜபடிஸ்டா விடுதலைப் படை - சியாபாசின் முக்கிய நகரங்களைக் கைபற்றியது. மார்க்கோசைப் பற்றி அன்றுதான் உலகம் அறிந்து கொண்டது. லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்திலும் பொம்மை அரசுகளை நிறுவ முயன்ற அமெரிக்க வல்லரசு, மெக்சிகோவிலும் அதன் வல்லாண்மையை நிறுவியது. இதை எதிர்த்து மாவோவின் கெரில்லா போராட்ட முறை, சேகுவேராவின் சமூக மாற்றத்திற்கானப் போராட்டம் ஆகியவற்றால் புத்தெழுச்சிப் பெற்ற போராளிகளின் குழு, துணைத் தளபதி மார்க்கோசின் தலைமையில் மெக்சிகோவில் தனது போராட்டத்தைத் தொடர்கிறது. அரசு அதிகாரத்தைக் கைப்பற்றாமலேயேகூட, சமூகத்தை மாற்ற முடியும் எனும் மார்க்கோசின் கருத்து, அறிவியல் பூர்வமாக இல்லை.''

'தமிழ் நேயம்' இதழாசிரியர் கோவை ஞானி, ''மார்க்கோஸ், தன்னை ஒரு மார்க்சியவாதி என்று எங்கும் அழைத்துக் கொள்ளவில்லை. தம் மக்களுக்கு முகம் இல்லாததால், முகவரி இல்லாததால், தாம் முகமூடி அணிந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார். இருப்பினும், மெக்சிகோவின் மய்ய அரசுக்கு எதிராக மார்க்கோஸ் எதுவும் சொல்லவில்லை. அதை எதிர்த்துப் போராடினார் என்றாலும், எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருக்கிறது. இருப்பினும், மார்க்சிய சொல்லாடல்களை அவர் பயன்படுத்தவில்லை. இதனால் அவர் மார்க்சியர் அல்லர் என்றும் கூறிவிட முடியாது'' என்றார்.




வ. கீதா, கோவை ஞானி, கி. வெங்கட்ராமன், ஓடை துரையரசன்

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் மய்யக்குழு உறுப்பினர் கி. வெங்கட்ராமன், ''மார்க்கோஸ், மாவோவைப் போல மரபான தொன்மங்களைத் தனது எழுத்தில் பெருமளவு பயன்படுத்துகிறார். பழங்குடி மக்களின் பெருமதிப்பு மிக்க வரலாற்றை மீட்டெடுக்க முயல்கிறார் அவர். தனது அமைப்பு ஒரு கட்சி யல்ல என்கிறார். இருப்பினும், அவ்வ



படிப்பகம்

www.padippakam.com



மைப்பு கட்சியின் கூறுகள் பலவற்றைக் கொண்டிருக்கிறது. தாராளமயத்தை எதிர்த்து உலகெங்கும் நடைபெறும் போராட்டத்தை நான்காவது உலகப் போர் என்கிறார். சர்வதேசியம், தேசியத்தின் மூலம்தான் வெளிப்பட முடியும். மார்க்கோசிடம் அதை நாம் காண்கிறோம். மொழியை ஆயுதமாக வைத்து ஒரு புரட்சியை அவர் முன்னெடுக்கிறார்.

உலகமயத்திற்கு இன்றைக்கு முதல் பலியாவது தேசிய அரசுகள்தான். தற்போது முதலாளிகளே நேரடியாக அரசியலில் குதித்து விட்டார்கள். இந்திய நாடாளுமன்றத்தின் 22 உறுப்பினர்கள் முதலாளிகள். வரலாற்றில் வர்க்கக்கூறு, இனக்கூறு என இரண்டு கூறுகள் உள்ளன. இனக்கூறு என்பது குறித்து மார்க்சியர்கள் உரிய கவனம் செலுத்தவில்லை. வரலாற்றின் ஓட்டத்தில் இனக்கூறு என்பது, சில சமயம் வர்க்கக்கூறுக்கு இணையான அழுத்தத்தைக் கொண்டுள்ளது. அத்தருணங்களில் மொழி என்பது ஓர் உற்பத்தி சக்தியாகவே உருக்கொள்கிறது என்பதை மார்க்கோசிடம் காண்கிறோம். மார்க்கோசை மதிப்பிடுவதைவிட, அவரிடமிருந்து படிப்பினைகள் பெறுவதே முக்கியமானது'' என்றார்.

முதல் அமர்வின் இறுதியாகப் பேசிய எழுத்தாளர் வ. கீதா, ''மார்க்சியத்திற்கு முன்பிருந்த நீதி, சமத்துவம் போன்ற சோசலிச மரபுகள் பற்றி மார்க்கோஸ் பேசுகிறார். தாம் ஒரு போராளியாக மாறியது பற்றி வருத்தமே என மார்க்கோஸ் குறிப்பிடுகிறார். இருப்பினும், மரணத்தைவிட வாழ்வதுதான் புரட்சி என்கிறார். புரட்சி என்பதை ஆக்கரீதியாக விதை - செடி - மரம் என்றே மார்க்கோஸ் குறிப்பிடுகிறார். மார்க்கோசின் கவித்துவம் குறிப்பிடத்தக்கதோர் கூறாகும். அது வெறும் நடை மட்டுமல்ல; அது ஒரு மனநிலை, ஓர் உலகப் பார்வை. அறவியலையும் அரசியலையும் மார்க்கோசின் கவிமனம் ஒன்றிணைக்கிறது. மேலும், காரணகாரிய நிலையிலிருந்து மட்டுமே அரசியலைப் பார்க்க வேண்டியதில்லை என்கிறார் மார்க்கோஸ். அது மட்டுமல்ல, புரட்சிக்கு ஒரு முறைதான் உண்டு; ஒரு வழிதான் உண்டு என்பதை மார்க்கோஸ் ஏற்கவில்லை.

புதிய தாராளவாதம் பற்றிப் பேசும் போது, மார்க்கோசின் மனநிலை மார்க்சின் மனநிலை போன்றே இருக்கிறது. 'மூலதனத்தில்' பணம் உருவாக்கும் சீரழிவு குறித்து மார்க்ஸ் எழுதும் வாசகங்கள், ஒரு தீர்க்கதரிசியின் வாசகங்களைப் போன்றிருக்கும். மார்க்சின் அந்தச் சீற்றத்தை, மார்க்கோசிடமும் காண முடிகிறது. மார்கோசின் அரசியல், அடையாள அரசியலாக இருந்தாலும், அடையாள அரசியலுக்குள் அவர் தன்னை கரைத்துக் கொள்ளவில்லை. உலகத்தையே தனது அடையாள அரசியலின் பிரதிபிம்பமாகவும் அவர் காணவில்லை. அவரவர் தன்னிலை பற்றிப் புரிந்து, மற்ற வர்களிடமும் பேச முன்வர வேண்டும் எனும் மார்க்கோசின் ஆக்கரீதியான அணுகுமுறை குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் ஒரு கீறலை ஏற்படுத்த மட்டுமே விரும்புகிறேன் எனத் தன்னடக்கத்தோடு மார்க்கோஸ் குறிப்பிடுவதை நாம் ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும்'' என்றார்.

பிற்பகலில் நடந்த இரண்டாம் அமர்விற்கு கண. குறிஞ்சி தலைமை வகித்து உரை நிகழ்த்தினார் : ''பழங்குடியினத்தைச் சேர்ந்தவருக்கும் ஸ்பானியருக்கும் பிறந்த 'மெஸ்டிசோ'வான மார்க்கோஸ், 1983 இல் சியாபாசுக்கு தேசிய விடுதலைப் படை வீரராக வந்து சேர்கிறார். பழங்குடியினரைத் திரட்டி, அவர்களை அரசியல்மயமாக்கி, ஜபடிஸ்டா விடுத்லை இயக்கத்தைக் கட்டுகிறார். இக்கள அனுபவத்தின் அடிப்படையில், குறிப்பிடத்தக்க வித்தியாசமான படிப்பினைகளை அவர் விடுதலை இயக்கங்களுக்கு வழங்குகிறார். போராட்டத்தின் லட்சியங்களைப் போலவே, வழிமுறையும் முக்கியமானவை என மார்க்கோஸ் குறிப்பிடுகிறார். 'லட்சியம், வழிமுறையை நியாயப்படுத்தும் என நாங்கள் கருதவில்லை. லட்சியங்களுக்கான வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, லட்சியங்களைக் கட்டமைக்கிறோம்' என்கிறார்.



தியாகு

1962 இல் விடுதலை இறையியல் எனும் கருத்தாக்கத்தின் அடிப்படையில், சாமுவேல் ரூபாஸ் என்ற கிறித்துவப் பாதிரியார், மெக்சிக்கோவின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆயுதந்தாங்கிய போராட்டத்தைத் தொடங்கினார். அம்மக்களுக்குச் சில உரிமைகளையும் பெற்றுத் தந்தார். ஆனால், கிழக்கு அய்ரோப்பிய வீழ்ச்சிக்குப் பிறகு, ஆயுதப் போராட்டத்தின் மீது நம்பிக்கை இழந்து, அதைக் கைவிட்டு விடுகிறார். அச்சமயத்தில் மார்க்கோஸ் ஆயுதப் போராட்டத்தின் தேவை குறித்து வலியுறுத்தி, பழங்குடி மக்களிடையே நம்பிக்கையை விதைக்கிறார். ஆனால், அந்த ஆயுதப் போராட்டத்தை ஜனநாயகப்படுத்த வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்துகிறார். ஆயுதக் குழுக்கள் ஜனநாயகப்படுத்தப் படாவிட்டால், அது பாசிசமாக மாறும் என எச்சரிக்கிறார். மாறிவரும் உலகச் சூழலில், ஊடகங்களுக்கெதிரான வீரியமிக்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்கிறார் மார்க்கோஸ்.

பல்வேறு நாட்டுப் போராளிகட்குக் கடிதம் எழுதுகிறார். புரட்சிகர சக்திகளின் அய்க்கியத்தை வலியுறுத்திக் கையொப்பம் பெறுகிறார்; விடுதலைப் போராட்டங்களுக்குப் பழங்குடி மக்கள் சார்பாக உதவிகள் வழங்குகிறார். நிதி, உலகமயமாகிவிட்டதால் புரட்சியையும் உலகமயமாக்க வேண்டும் என்கிறார். இப்போரில் பழங்குடிப் பெண்களை நேரடியாகப் பங்கேற்க வைக்கிறார். சமகாலத்தில் அதிகார நீக்கம் பற்றிய விழிப்புணர்வோடு விடுதலை இயக்கங்கள் செயலாற்ற வேண்டியதன் தேவையை மார்க்கோஸ் வலியுறுத்துகிறார்.''

'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியன், ''சேகுவேரா பிறந்த நாளில் இக்கருத்தரங்கு நடைபெறுகிறது. இன்று, சாதி அடக்குமுறைக்கு எதிராக வெகுண்



படிப்பகம்

www.padippakam.com

டெழுந்த மாவீரன் இம்மானுவேல் சேகரன் பிறந்த நாளுமாகும். 'விடியல்' பதிப்பகத்தின் இந்நூலை 'தலித் முரசு' சிறப்பாக அறிமுகப்படுத்தியது. ஏனெனில், விடியல் பதிப்பகத்தின் இப்படிப்பட்ட நூல்கள் - மாற்று அரசியலுக்கான, மக்கள் அரசியலுக்கானப் படைக்கலன்களாகத் திகழ்கின்றன. சியாபாஸ் பழங்குடி மக்களின் போராட்டம், நமக்கு என்னவிதமான படிப்பினைகளை வழங்கியுள்ளது எனப் பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியம். எப்படி கறுப்பர்கள் போராட்டம், தலித்துகளுக்கு உத்வேகம் தந்ததோ, அது போல் மெக்சிகப் போராட்டமும் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

ஆனால், இத்தகைய போராட்டங்களை அப்படியே பெயர்த்து இங்கு நட முடியாது. மண்ணுக்கேற்ற வகையில்



தியாகு, கண. குறிஞ்சி, சி. மகேந்திரன், எஸ். பாலச்சந்திரன்

அதில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம். படிநிலைப்படுத்தப்பட்ட இந்தியச் சமுதாயத்தில், சாதி அமைப்பைத் தகர்க்காமல் எந்தப் புரட்சியையும் இங்கு ஏற்படுத்திவிட முடியாது. இடதுசாரி அமைப்புகளும் தலித் இயக்கங்களில் சிலவும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றன. சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பங்கேற்பது மட்டும் அரசியல் அதிகாரத்தைத் தந்துவிடாது. மக்களை, சமூகத்தை ஜனநாயகப்படுத்த வேண்டும் என அம்பேத்கர் குறிப்பிட்டார். ஆனால், சாதி அமைப்பு அதற்குத் தடையாக இருக்கிறது. அதைத் தகர்க்காமல், எந்த அதிகாரம் பெற்றும் பயனில்லை. அப்படிப்பட்ட போராட்டத்திற்கு, சிந்தனைப் புரட்சித் தேவை. அரசியல் அதிகாரம் என்பது ஒரு மாயை; சமூக ஜனநாயகம்தான் உடனடித் தேவை என அம்பேத்கர் வழிகாட்டினார். அதை அடிப்படையாகக் கொண்டு, உலகப் புரட்சிகர இயக்கங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற வேண்டும்'' என்றார்.

'தாமரை' இதழின் ஆசிரியர் சி. மகேந்திரன், ''மெக்சிகோவிலுள்ள சியாபாஸ் மாநிலத்தில், பழங்குடி மக்களுக்கு நிலம் கிடைக்க வேண்டும் என மார்க்கோஸ் போராடினார். அதே போல் இங்கு தலித்துகளும் நிலம் பெறுவதன் மூலமே, அவர்களது விடுதலை சாத்தியமாகும். சமத்துவத்திற்கான இயக்கங்கள் காலந்தோறும் மாறிவருகின்றன. ஒற்றைப் பாதை, ஒற்றைப் பார்வை போதாது. பன்முக அணுகுமுறை, இன்றைய காலத்தின் கட்டாயமாகும். அதேவேளை, மண்ணுக்கேற்ற முறையில் மார்க்சியம் வடித்தெடுக்கப்பட வேண்டும். உலகமயமாக்கலுக்கு எதிரான கலகக் குறியீடுதான் மார்க்கோஸ். கிராம்சியின் குடிமைச் சமூகம் எனும் கருத்தாக்கம், மார்க்கோசால் விரிவுபடுத்தப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது. அவரது எழுத்துகள், போர்க்குணத்தை வளர்க்கிறது. மார்க்கோஸ் தனி மனிதரல்ல - கூட்டு இதயம்'' என்றார்.

தமிழ்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு: ''மெக்சிகோவின் 17 மாநிலங்களில் சியாபாசும் ஒன்று. அங்கு 20 வகையான பழங்குடிகள் உள்ளனர். அவர்களது மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. இப்பழங்குடிகளைத்தான் அமைப்பாக்கி, மார்க்கோஸ் விடுதலைப் போரை முன்னெடுக்கிறார். சோசலிசம் செத்துவிட்டது என கொக்கரிக்கப்பட்ட காலகட்டத்தில், மார்க்கோஸ் சோசலிசப் பதாகையை உயர்த்திப் பிடித்தார். 1911 ஆம் ஆண்டில் சன்யாட்சென் வைத்த முழக்கங்களை, சீனப் புரட்சியின் போது மாவோ பயன்படுத்திக்கொண்டார். அதே போல் 'ஜபட்டா' எனும் பழங்குடித் தலைவனது முழக்கத்தை, மார்க்கோஸ் வழிமொழிந்து இயக்கங் கட்டினார்.

உலகில் எந்த இரண்டு புரட்சியும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொரு புரட்சியும் ஒவ்வொரு விதமாக இருக்கும். மார்க்கோஸ் அதைப் புரிந்து கொண்டு, உலகப் புரட்சிகர இயக்கங்களிலிருந்து படிப்பினைகளைக் கற்றார். வியட்நாம் மற்றும் தமிழீழப் போராட்டங்களில்தான் பெண்களின் பங்களிப்பு அதிகம். அதேபோல் மார்க்கோசின் ஜபடிஸ்டா விடுதலைப் படையிலும் பெண்களின் பங்களிப்பு அதிகம். இத்தகைய ராணுவம் சிலசமயம் தோல்வி அடைகிறது. இந்த ராணுவத் தோல்வியைக் கூட, மார்க்கோஸ் அரசியல் வெற்றியாக மாற்றிக் காட்டுகிறார். அரசியலின் நீட்சிதான் போர் என்பதை அவர் புரிந்து வைத்திருக்கிறார்.

**❝ வியட்நாம் மற்றும் தமிழீழப் போராட்டங்களில் தான் பெண்களின் பங்களிப்பு அதிகம். அதேபோல் மார்க்கோசின் ஜபடிஸ்டா விடுதலைப் படையிலும் பெண்களின் பங்களிப்பு அதிகம். ❞**

ஆயுதப் போராட்டம், வெகுமக்களின் எழுச்சி இரண்டின் சரியான - சமமான கலவைதான், மார்க்கோசின் போர் வழி. அதேசமயம் அரசியல் சட்டத்திலுள்ள உரிமைகளையும் பயன்படுத்திக் கொள்ளும் ராஜதந்திரம் மார்க்கோசிடம் காணப்படுகிறது.''

நூல் மொழிபெயர்ப்பாளர் எஸ். பாலசந்திரன் ஏற்புரையாற்றினார்: ''உலகப் புரட்சிகர மாற்றத்திற்கான கையேடு அல்ல இப்புத்தகம். இது ஒரு நடைமுறைச் சித்தரிப்பு மட்டுமே. எனவே, மரபான சூத்திரங்களை இதில் பொருத்திப் பார்ப்பது சரியானதல்ல. புறவயமான சூழலை புறவயமான ஆய்வின் வழி அணுகுவதுதான் மார்க்சியம். அவ்வகையில் சியாபாஸ் இயக்கம், நமக்கு நிறைய படிப்பினைகளைத் தருகிறது. மற்ற உலகப் புரட்சிகர இயக்கங்களிலுள்ள சில முக்கிய பலவீனங்கள், ஜபடிஸ்டா விடுதலை இயக்கத்திற்கு இல்லை என்பதுடன், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் தீவிரமும் இருக்கிறது.''

கருத்தரங்கிற்குப் பிறகு, கோபி தாய்த் தமிழ்ப் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மெக்சிகோவில் தற்பொழுது நடைபெற்று வரும் ஜபடிஸ்டா புரட்சி பற்றிய ஆவணப் படம் திரையிடப்பட்டது. இக்கருத்தரங்கையொட்டி, மதுரை முத்துக் கிருஷ்ணன் தொகுத்த சேகுவேரா பற்றிய 'வாழ்வின் நிமிடங்கள்' எனும் நிழற்படக் காட்சியும், நடைபெற்றது. ஏராளமான பார்வையாளர்கள் கருத்தரங்கிலும், நிழற்படக் காட்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். •



படிப்பகம்

www.padippakam.com

# விடியலின் 2005 டிசம்பர் வெளியீடுகள்




## மால்கம் எக்ஸ் : என் வாழ்க்கை

விடியல் பதிப்பகம் தொடர்ந்து வெளியிட்டு வரும் அமெரிக்கக் கருப்பினப் போராளிகள் மற்றும் அமெரிக்கப் பழங்குடித் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களின் வரிசையில், இப்போது மால்கம் எக்ஸ் (1925 - 1965). தமிழ்ச் சூழலில் தலித் அரசியலின் முன்னோடியாகவும், இசுலாமியவாதியாகவும் சுருக்கப் பட்டிருக்கும் மால்கம் எக்ஸின் வாழ்க்கை - சந்தை வாசகர்களுக்கான 'திருப்பங் களும் சாகசங்களும் நிரம்பிய நாடகம்' அல்ல. 'சாயல்கள் எதுவுமின்றி' மால்கம் எக்ஸின் வாழ்க்கையை அவரது வார்த்தைகளிலேயே மிகவும் விரிவாக, அலெக்ஸ் ஹேலியின் உதவியுடன் முன்வைக்கிறது இந்நூல். பக்கங்கள்: 732

## ஈரான் : ஒரு குழந்தைப் பருவத்தின் கதை

சாகச நாயகர்களையும், நகைச்சுவை நாயகர்களையும் கொண்டதாகத்தான் தமிழில் அறியப்பட்டு வந்திருக்கிறது சித்திரக்கதை என்ற வடிவம். இந்நிலையில் வரலாற்றை, அரசியலை, அனுபவங்களை, வாழ்க்கை வரலாற்றை, வரைபடத்தின் நுட்பத்துடனும் - எழுத்தின் தீவிரத்துடனும் சேர்த்து முன்வைக்கும் வரைபட இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்றாக, தமிழில் முதன் முதலில் வெளி வருகிறது மர்ஜானே சத்ரபியின் இந்நூல். ஈரானில் ஒரு சோஷலிச சமூக அமைப்பை நிறுவுவதற்கானப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் மரபில் வந்த முற்போக் கான குடும்பத்தில் பிறந்து, இசுலாமியப் புரட்சி நடைபெற்ற காலத்தில், அங்கு தனது குழந்தைப் பருவத்தைக் கழித்த ஒரு பெண் என்ற முறையில் சத்ரபியின் அனுபவங்களைச் சித்திரிக்கிறது இது. மத அடிப்படைவாதம், மதவெறி, பயங்கர வாதம் ஆகியவற்றுடன் இணைத்தே முன்வைக்கப்படும் ஈரான் பற்றிய பிம்பங் களை உடைத்தெறிகிறது இந்நூல். முதல் பாகம். பக்கங்கள்: 160

## மாவோ : வாழ்வும் புரட்சியும்

மாவோவின் ஆளுமையையும், அரசியல் வாழ்வையும் அவற்றின் பின்னணியையும் விவரிக்கின்ற இந்நூல், சீன மொழி அறிந்த மிகச் சில மேற்கத்திய வரலாற்றாய்வாளர்களில் ஒருவரான பிலிப் ஷார்ட் எழுதியது. 'உண்மையின் முன் நடுநிலை என்பது இல்லை' என்ற கருத்தை அடித்தளமாகக் கொண்டு இயங்குகிறது இந்நூல். மாவோ குறித்து இதுவரை வெளிவந்துள்ள, அனைத்து ஆங்கில நூல்களிலுள்ள தகவல்களையும் உள்ளடக்கிய பதிப்பு இது. பக்கங்கள் : 960

### எமது பிற புதிய வெளியீடுகள்

1. சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும்
2. ஆகஸ்ட் 15 : இன்பநாள் துக்கநாள்
3. மக்களை ஆயுதபாணியாக்குவோம் - கியாப்
4. மரண தண்டனைச் சிறையில் - மூமியா அபு - ஜமால்
5. நாசகார சமூகம் - எம்.என். ராய்
6. உலக முதலாளியமும் தலித்தியமும் - எஸ்.வி. ராஜதுரை
7. விசித்திரத் தோட்டங்கள் (நாவல்) - மிஷேல் க்விந்த்
8. பிரெஞ்சுப் புரட்சியும் பாஸ்டில் சிறையுடைப்பும்

விடியல் பதிப்பகம்
11, பெரியார் நகர்,
மசக்காளிபாளையம் வடக்கு
கோயம்புத்தூர் - 641 015
தொலைபேசி : 2576772




படிப்பகம்

www.padippakam.com

# ''மதம் மாறிய தலித் - ராவுத்தர் ஆகலாம் ஆனால், அய்யங்காராக ஆகமுடியுமா?''

கடந்த இதழில் வெளிவந்த **கொடிக்கால் ஷேக் அப்துல்லா** அவர்களின் பேட்டி, இந்த இதழிலும் தொடர்கிறது...

**இஸ்லாமை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்கான வேறு சமூக நிகழ்வுகள் உண்டா?**

இன்னொரு செய்தியையும் நான் உங்களுக்குச் சொல்கிறேன். தேனி மாவட்டத்தில் ஒரு பெரிய ஜாதிக் கலவரம் நடந்தது. இதில் தலித்துகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அங்குள்ள துரைராஜபுரம் என்ற கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு அறிக்கை வெளியிடுகிறார்கள். 'எங்க ஊர்ல ஒட்டுமொத்தமாக நாங்க எல்லோரும் முஸ்லிமாக மாறப் போறோம்' என்று அதில் பிரகடனப்படுத்தி இருந்தார்கள். இந்தச் செய்தி, தமிழ்நாட்டின் பிரபலப் பத்திரிகைகளில் வெளிவந்தது. அப்போது நாங்கள் அம்மக்களுடன் இணைந்து களப்பணிகளைச் செய்து வந்தோம். இந்தச் செய்தி வந்ததும் நாங்கள் அந்த இடத்திற்கு விரைந்தோம். அங்கு பத்திரிகையாளர்கள் குவிந்திருந்தனர். பத்திரிகையாளர்கள் மதமாற்றம் பற்றி பல்வேறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்கெல்லாம் ஒரு வயசான அம்மா பதில் சொல்லிக் கொண்டே இருந்தார்கள் : ''அய்யா எங்க காலத்தில நாங்க இந்த அழுக்குத் துணியை கட்டிக்கிட்டு எப்படியோ காலத்தைக் கழிச்சிட்டோம். ஆனால், எங்கள் பிள்ளைகள் காலேஜிக்குப் போகுதுங்க. பள்ளிக்கூடத்திற்குப் போகுதுங்க. அதுக எல்லாம் வெள்ள துணி கட்டணும், பேண்ட் போடணும், செருப்புப் போடணும்னு நினைக்கிறாங்க. ஆனால், இந்த ஊர்ல அதப் போடக்கூடாதுண்ணு சொல்றாங்க. இந்தத் துணிமணிகள நாங்க யாருக்கிட்டயும் போய் கேக்கல; வாங்கல. நாங்க உழைக்கிறோம்; உடுத்தணும்னு ஆசைப்படறோம். குழந்தைங்க நல்ல துணி உடுத்தணும்னு ஆசைப்படறாங்க. ஆனால், குழந்தைங்க இப்படி நல்ல துணி போடக்கூடாதுன்னு சொல்றாங்கய்யா!''

''சரி, இதெல்லாம் நீங்கள் முஸ்லிமாக மாறினால் கிடைச்சிருமா?''ன்னு பத்திரிகைகாரங்க அந்த அம்மாவ கேட்கிறாங்க. அப்போ அந்தம்மா சொன்னாங்க, 'எங்க சொந்த பந்தங்கள் இதுக்கு முன்னால சில ஆண்டுகளுக்கு முன்னால முஸ்லிமுக்குப் போயிருக்காங்க' என்று தேனீ மாவட்டத்தில் சில ஊர்களைக் குறிப்பிட்டு, அந்தம்மா பதில் சொன்னாங்க. 'அப்படி மாறினவங்க எல்லாம், முட்டிக்குக் கீழே வேட்டி கட்டுறது, செருப்புப் போடுறது என்றெல்லாம் மாறியிருந்தாங்க' என்று சொன்னாங்க. நாங்க எதெல்லாம் எதிர்பார்க்கிறோமோ அதெல்லாம் அங்கு கிடைக்கிறது என்று சொல்லிவிட்டு, ஒரு சுவையான செய்தியை அந்தம்மா சொன்னாங்க. 'எங்க ஊர்ல ஒரு பெண்ணை கற்பழிச்சுக் கொன்ற பிறகுதான் அதை யொட்டி கலவரம் நடந்திச்சு. முஸ்லிமா மாறினா இதெல்லாம் நடக்காதான்னு நீங்க கேட்கிறீங்க. நீங்க இந்த ஊருக்கு வந்து மொதல்ல என்ன செஞ்சீங்க? நாங்க எல்லாம்

**❝ அந்த டீக்கடை பாய் அல்லா பிச்சை, மூன்று வருஷத்திற்கு முன்னால, எங்க சமூகத்தில எங்க பக்கத்து வீட்ல இருந்த ஆளு. அவரும் அவருடைய குடும்பமும் இப்ப முஸ்லிமா மாறிட்டாங்க. அவரு கடையில எல்லாரும் டீ குடிப்பாங்க. அவருடைய கூட பிறந்த தம்பிதான் இன்னொரு கடை வைச்சிருக்காரு - பேரு துரைப்பாண்டி. அவர் கடையில் நாங்களும் எங்க சமூகத்தைச் சேர்ந்தவங்களும் டீ குடிக்கலாம்; வேற யாரும் டீ குடிக்க மாட்டாங்க. ❞**



கவனிச்சிக்கிட்டுதான் இருந்தோம். முதல்ல எங்க போனீங்க?' 'நாங்க அந்த டீக்கடையில் டீ குடிக்கப் போனோம்' என்றார்கள் நிருபர்கள். 'அந்த டீக்கடை யார் டீக்கடை தெரியுமா?' 'அது ஒரு முஸ்லிம் கடை' என்று சொன்னார்கள். 'அவரு பேரு உங்களுக்குத் தெரியுமா?' 'தெரியலையே' என்றார்கள் நிருபர்கள். அந்த டீக்கடை பாய்க்குப் பேரு அல்லா பிச்சை. அவர் மூன்று வருஷத்திற்கு முன்னால, எங்க



படிப்பகம்

www.padippakam.com

சமூகத்தில, எங்க பக்கத்து வீட்ல இருந்த ஆளு. அவரும் அவருடைய குடும்பமும் இப்ப முஸ்லிமா மாறிட்டாங்க. அவரு கடையில எல்லாரும் டீ குடிப்பாங்க. அவருடைய கூட பிறந்த தம்பிதான் இன்னொரு கடை வைச்சிருக்காரு - அவர் பேரு துரைப் பாண்டி. அவர் கடையில் நாங்களும் எங்க சமூகத்தைச் சேர்ந்தவங்களும் டீ குடிக்கலாம். ஆனால், வேற யாரும் டீ குடிக்க மாட்டாக. ஒரே தாய் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகள்தான். ஆனால், எவ்வளவு பெரிய வேறுபாடு பார்த்தீங்களா... இத நீங்க பார்த்து, கேட்டு, தெரிஞ்சி உண்மையின்னு உங்களுக்குப் பட்டா நீங்க உங்க பேப்பர்ல எழுதலாம். எழுதுவீர்களா?' என்று அந்த அம்மா ரொம்பவும் இயல்பாகக் கேட்டார்கள்.

**இஸ்லாத்திற்குச் சென்றவர்களுக்கு சம அங்கீகாரம், சம உரிமை கிடைக்கிறதா?**

இரண்டு செய்தியை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் மதம் மாறிட்டார் என்றால், அவர் முஸ்லிம் குடும்பத்தில்தான் திருமணம் செய்ய வேண்டும். மற்ற மதத்தில் அவர் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. சமூகம் ஏற்றுக் கொள்ளாது. ஆனால், முஸ்லிம் சமூகத்தில் யாரும் யாரையும் திருமணம் செய்து கொள்ளலாம். இங்கு இஸ்லாத்திற்குள் எந்தப் பாகுபாடும் இல்லை என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். சரத்த ராவுத்தர் என்பவர் மதம் மாறியவர்தான். உத்தமபாளையத்தில் இருக்கிறார். தலித்தாக இருந்தவர்தான். அவர் இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய இஸ்லாமியர்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கிறார். இவையெல்லாம் இந்த அய்ம்பது ஆண்டுகளுக்குள் நடந்த சம்பவங்கள்தான்.

தமிழ் நாட்டில் முதல் முதலாக மதம் மாறிய கிராமம் - ஒரு 63 ஆண்டுகளுக்கு முன்னால - சீலயம்பட்டி கிராமம்தான். இந்தக் கிராமத்திற்கு அய்யா பெரியார் போகிறார். மதமாற்றம் நடந்தது பற்றி கேள்விப்பட்டு, அந்த மக்களை எல்லாம் கூட்டிவைத்துப் பெரியார் பேசுகிறார். ரொம்ப உணர்வுப்பூர்வமாகப் பெரியார் பேசுகிறார் : 'நீங்கள் காட்டுமிராண்டி மாதிரி மயிர் வளர்த்து வைத்திருந்ததை எல்லாம் இன்றிலிருந்து மழுக்கிவிட்டு மனிதனாகி இருக்கிறீர்கள். நான் இதுவரை எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும் பெட்ரோலுக்கு காசு வாங்கிட்டுத்தான் பேசுவதற்குப் போவேன். ஆனால், இப்போது என்னுடைய சொந்தச் செலவில் நான் உங்களை வந்து பார்த்துப் பாராட்டிவிட்டுப் போக இங்கு வந்திருக்கிறேன்' என்று மகிழ்ச்சியோடு



சொன்னார்கள். பெரியார், மனந்திறந்து பேசக்கூடிய மிகச் சிறந்த மனிதாபிமானி அல்லவா! சமூக விடுதலை பெற்ற அந்த மக்களைப் பார்ப்பதற்காகத் தனது வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு ஒரு மாமனிதன் - தன்னுடைய சொந்த செலவிலேயே அந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிறார் என்றால், ஆயிரம் விமர்சனங்கள் வந்தாலும், மனிதப் பண்புக்கு எடுத்துக்காட்டாகப் பெரியாரைத்தான் சொல்ல முடியும்.

எனக்கும் எனது குடும்பத்திற்கும் என்று சொந்தமாக நிலபுலன் இல்லை. ஆனால், ஒரு கோடீஸ்வரன் எப்படி வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறானோ, அதற்கு எந்தக் குறையும் இல்லாமல் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நாம் வந்த இடத்தில் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்துதான் நமக்கு மதிப்பும் மரியாதையும். இரண்டாவது, மற்றவர்கள் உதவி செய்வார்கள் என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? அப்படி எதிர்பார்த்தாலே நமது லட்சியம் தோற்றுப் போய்விட்டது என்று அர்த்தம். நானாக உருவாக்க வேண்டும், நானாக உழைக்க வேண்டும், நானாக முன்வந்து எல்லா காரியத்தையும் செய்ய வேண்டும். அதுக்குள்ள 'லைசென்ச' மதமாற்றம் வழங்கியது. ஒரு தலித் டீ கடை போட வேண்டும் என்றால், பலமுறை யோசிப்பார். ஏனெனில், அவருக்குப் பழக்கமும் பயிற்சியும் இல்லை. ஆனால், இஸ்லாம் சுய முயற்சிக்கான தன்னம்பிக்கையை, அந்த தைரியத்தைக் கொடுக்கிறது. இடஒதுக்கீட்டை வைத்துதான் இந்த தலித் சமூகம் ஓரளவுக்கு முன்னுக்கு வந்தது. இப்பொழுது, அதுவும் இல்லை என்று ஆனபிறகு, அவர்கள் வாழ்க்கையே கேள்விக்குறியாகி இருக்கிறது. நிலமும் நம்ம கையைவிட்டுப் போயிடுச்சி. அப்ப நிலமும் இல்லாமல் நீங்கள் எப்படி வாழ முடியும்?

ஆனால், முஸ்லிம் சமூகத்தைப் பார்த்தீர்கள் என்றால், நடைபாதையில் கடை வைத்திருப்பார்கள். சோப்பு, சீப்பு, கண்ணாடி, பிளாஸ்டிக் விற்பனை செய்வதற்கு ஒரு கடை வைத்திருப்பார். அதற்குப் பெரிய மூலதனம் வேண்டியதில்லை. ஒரு அய்ந்நூறு ரூபாய் இருந்தால் போதும். பெரிய நுணுக்கமான விஷயங்கள் எல்லாம் இந்த வியாபாரத்திற்குத் தேவையில்லை. ஆனால், துணிச்சலாக ஒரு கடையை பிளாட்பாரத்தில் போட்டுத் தன்னுடைய வாழ்க்கையை நடத்திவிட்டுப் போகிறான். இதில் நான் இங்கு குறிப்பிட விரும்புவது, இஸ்லாம் அந்தத் தன்னம்பிக்கையை அவனுக்கு அளிக்கிறது. அது ரொம்பவும் முக்கியமானது என்று சொல்ல வருகிறேன். நாடார் சமூகம்கூட இதைவிட மோசமான ஒரு நிலையில் இருந்த ஒரு சமூகம்தான். ஆனால், இன்றைக்குப் பொருளாதாரத்தில், அந்தஸ்தில், அரசியலில் அந்தச் சமூகம் முன்னேறி இருக்கிறது. திட்டமிட்ட ஒரு சமுதாய முன்னேற்றம்தான் அது.

**நாடார் சமூகம் மதம் மாறாமலேயே இந்தளவுக்கு முன்னேறியிருக்கிறதே?**

அதற்கு இன்னொரு முக்கிய காரணம் இருக்கிறது. அது ஒரு அடிமைச் சமுதாயம் அல்ல. பல 'மேல் சாதி' ஆதிக்கத்தினால் அவர்கள் பல கொடுமைக்கு ஆளானார்கள். ஆனால், நிலம் அவர்களிடம் இருந்தது. பல அரசுகள் குறிப்பாக காமராசர் ஆட்சி அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. அரசின் பல நல்ல திட்டங்களை அந்தச் சமூகம் உள்வாங்கி, முன்னேறி இருக்கிறது. ஆனால், தலித் சமூகம் பெரிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதிலிருந்து தலித்துகள் விடுபட வேண்டும் என்று தொலைநோக்குப்

**“மற்றவர்கள் உதவி செய்வார்கள் என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? நானாக உழைக்க வேண்டும், நானாக முன்வந்து எல்லா காரியத்தையும் செய்ய வேண்டும். அதுக்குள்ள 'லைசென்ச' மதமாற்றம் வழங்கியிருக்கிறது. இஸ்லாம் சுய முயற்சிக்கான தன்னம்பிக்கையை, தைரியத்தைக் கொடுக்கிறது.”**



படிப்பகம்

www.padippakam.com

பார்வையுடன் கூடிய திட்டங்கள் வகுக்கப் பட வேண்டும். இன்னும் பெரிய குற்றச் சாட்டு ஒன்றை நான் சொல்வேன். எந்த ஒரு அரசியல் கட்சியும் வளர்வதற்கு கொடி தூக்குவதும், அவர்களுக்குத் தொண்டூழியம் செய்யும் போக்கும் இன்னும் தலித்துகளிடம் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு சமூகப் புரட்சியை உண்டுபண்ணுவதற்கு - நீங்கள் எழுதணும், பேசணும், சிந்திக்கணும், சேரியில் போய் வேலை செய்யணும். இப்படியெல்லாம் செய்வதற்கு ஒரு பெரிய திட்டத்தைச் செய்வதற்கு - ஒருத்தர் இருவராவது துணிவுடன் முன்வந்தால்தான் ஏதாவது செய்ய முடியும். அரசாங்கம் இந்த மக்களைக் காப்பாற்றும் என்று நீங்கள் ஒருபோதும் நம்பாதீர்கள். இந்த மக்கள் இப்படியே காலங்காலமாக இருக்க வேண்டும்; நம்மிடம்



கையேந்த வேண்டும் என்று நினைக்கிறவர்கள்தான் ஆட்சியிலே இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அரசாங்கம் இதையெல்லாம் செய்யும் என்று நம்புவது எப்படிச் சரியாகும்?

**ராவுத்தர், மரைக்காயர் என்று முஸ்லிம்களிடையேயும் பாகுபாடுகள் நிலவுகின்றதே?**

தேனீ மாவட்டத்தில் தேவதானப்பட்டிக்குப் பக்கத்தில் துலுக்கன்பட்டி என்றொரு இடம் இருக்கிறது. இங்கு 700, 800 பேருக்கு மேல் மக்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் தலித் குடும்பமும் அங்கு இருந்தார்கள். அதில் ஒரு குடும்பம் அப்துல் காதர். அவரும் அவருடைய பிள்ளைகளும் இஸ்லாத்திற்கு வருகிறார்கள். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு நாங்கள் எல்லாரும் போயிருந்தோம். அப்போது முஸ்லிம்களில் ஒருவர் சொன்னார், 'அய்யா பெயர் வைக்கிறதும் வைக்கிறீங்க... அப்துல் காதர், ராவுத்தர் என்று வைங்கோ' என்றார். அவர் இன்றைக்கும் அப்துல் காதர் ராவுத்தர்தான். அவருடைய பிள்ளைகள் 'இமாமு'க்குப் படித்து, இப்பொழுது பல இடங்களில் 'இமாமாக' இருக்கிறார்கள். திருநெல்வேலியில இருக்கக்கூடிய பெரிய ஜமாத்தில் அவர் பையன் 'இமாமாக' இப்பொழுது இருக்கிறார். நீங்கள் யார் கள ஆய்வுக்குச் சென்றாலும், இந்தக் குறிப்பை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, இந்த மனிதர்களை எல்லாம் அவசியம் சந்திக்க வேண்டும்.

**ராவுத்தர், மரைக்காயர் என்பது எதைக் குறிக்கிறது?**

ராவுத்தர் என்றால் குதிரை வியாபாரம் செய்தவர்கள்; குதிரையை வைத்திருந்தவர்கள் என்று பொருள். மரைக்காயர் என்றால், கடற்கரையோரம் மரக்கலங்களை தொழில் ரீதியாக வைத்து முன்னுக்கு வந்தவர்கள் என்று பொருள். ஆனால், கொடுத்தல் வாங்கலோ, பெண் கொடுத்து, பெண் எடுப்பதிலோ - இவர்களுக்குள் எந்தச் சிக்கலும் இல்லை. எனவே, மதம் மாறிய யார் வேண்டுமானாலும் ராவுத்தர், மரைக்காயர் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால், குற்றாலம் பிள்ளை என்றோ, சுப்பிரமணிய அய்யர் என்றோ, அய்யங்கார் என்றோ, நாடார் என்றோ பெயர் வைக்க முடியுமா?

**ஒரு இஸ்லாமியர் இறந்து கிடந்தால், அவர் அனாதையாக இருந்தால்கூட, அதை வாரி அணைத்துக் கொள்ளும் சமூகம், அதேவேளை முஸ்லிம் அல்லாத ஒருவர் எவ்வளவு துயரத்தில் இருந்தாலும், அதைப் பொருட்படுத்தாத போக்கு இந்தச் சமூகத்திடம் காணப்படுகிறதே?**

அப்படி இருந்தால், அது முற்றிலும் தவறு. இந்தச் சமூகத்தில் இத்தகைய மனோபாவம் இருக்கிறது என்பதையும் நான் மறைக்கவில்லை. இதற்குக் காரணம், அவர்களின் அறிவின்மைதான்! குரான் இப்படியான மனோபாவம் தவறு என்றுதான் சொல்கிறது. நபிகள் நாயகம் ஒரு யூதரின் பிணம் போவதைப் பார்க்கிறார். அவர் உடனே எழுந்து நின்று அதற்கு மரியாதை செலுத்தினார். சாதாரண மக்கள், 'நீங்கள் ஏன் இந்தப் பிணத்திற்கு மரியாதை செலுத்துகிறீர்கள்?' என்று கேட்டதற்கு, 'இது அல்லாவின் படைப்பு' என்று நபிகள் நாயகம் பதில் சொல்கிறார். இதை எல்லாம் தெரிந்த பிறகும் சில முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றுதானே அர்த்தம். அறைக்குள்ளேயும், மதராசாவுக்குள்ளேயும், பள்ளிவாசல்களிலும் உட்கார்ந்து கொண்டும் - பேசிக்கொண்டும் இருந்தது போக, இப்பொழுது அடுத்த தலைமுறை - மக்கள் சமூகத்தோடு, அவர்கள் துன்ப துயரங்களில் பங்கெடுக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது. இப்பொழுதுதான் எழுத, பேச, களத்திற்கு வரத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த நிலை விரைவாக மாற வேண்டும்.

**பெரியார் முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்றொரு சர்ச்சை கிளப்பப்பட்டது குறித்து தங்கள் கருத்து என்ன?**

இஸ்லாமியர்கள் பெரியாரை மிகவும் உயர்வாக மதிக்கிறார்கள். இஸ்லாமின் பல கருத்துகளைப் பெரியார் பிரச்சாரம் செய்திருக்கிறார். திருமண உறவு, ஒப்பந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற இஸ்லாத்தின் கருத்தைப் பெரியார் வலியுறுத்தினார். திராவிட இயக்கம் பலப்படுவதற்கு இஸ்லாமியர்கள் பொருளாதார உதவி முதல் பல உதவிகளைச் செய்திருக்கிறார்கள்; தலித்துகள் அந்த இயக்கத்திற்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். பெரியார் மீது குற்றம் சுமத்துவதற்கு எந்தவித நியாயமும் இல்லை. இது, என்னுடைய அழுத்தமான கருத்து. அவர் உள்ளும் புறமும் தெளிவாக இருந்தார். பெரியார் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக இருந்தார் என்று கம்யூனிஸ்டுகள்கூட, அவர் மீது ஒரு காலத்தில் குற்றம் சுமத்தினர். ஆனால், இது அவர்களின் அனுமானம்தானே தவிர, அப்படி எந்த நிலப்பிரபுவுக்கும் அவர் ஆதரவாக இருந்தார் என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. பெரியார் கொள்கைகளை கம்யூனிஸ்டுகள்தான் பெருமளவில் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும். ஆனால், அதன் அவசியத்தை உணர்ந்து, அவர்கள் இன்று காலங்கடந்தாவது எடுத்திருக்கிறார்கள்.

**தலித் - இஸ்லாமியர் ஒற்றுமையை நீங்கள் வலியுறுத்துகின்றீர்களா?**

தலித்துகளிடம் நெருங்கி வருவதன் மூலம் மற்றவர்களின் கோபதாபங்களுக்கு ஆளாக வேண்டி வருமோ என்று முஸ்லிம்களிடையே ஒரு தவறான கருத்து நிலவுகிறது. தொழில் ரீதியாகவும், வியாபார ரீதியாகவும் முஸ்லிம்கள் மற்ற சமூகத்தினரிடம்தான் அதிகளவு தொடர்பு வைத்திருக்கிறார்கள். களத்தில் அவர்கள் தலித்துகளிடம் இணையாததற்கு இது ஒரு காரணம். ஆனால், இந்த உறவு பலப்படுத்தப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாறு



படிப்பகம்

www.padippakam.com

பட்ட கருத்து இருக்க முடியாது. தலித் - முஸ்லிம் கூட்டணியை எங்களைப் போன்ற வர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தனியொரு சாதியோ, மதமோ ஆட்சி அதி காரத்தைக் கைப்பற்ற முடியாது. வாய்ப்பு கள் மறுக்கப்பட்ட எல்லாரும் இணைந்து தான் அதைக் கைப்பற்ற முடியும். எனவே, இதை முஸ்லிம்கள் புரிந்து கொண்டு சில புதிய செயல்திட்டங்களை வகுக்கவில்லை எனில், நெருக்கடி நேரங்களில் அவர்கள் தவிக்க வேண்டிவரும்.

**இஸ்லாத்திற்குச் சென்ற பிறகு தங்களின் தாய்ச் சமூகமான ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு ஏதேனும் பணியாற்றி இருக்கிறீர்களா?**

1989 செப்டம்பர் மாதத்தில், தேனீ மாவட்டக் கிராமங்களில் நடைபெற்ற கல வரத்தில், தலித் மக்கள் மீதான வன்கொடுமை களைக் கண்டு - நேரில் சென்று களப்பணி யாற்றினேன். கண்டமனூர் கிராமத்தில் காவல் துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட தலித் இளைஞர்கள் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்தோம். வழக்குப் பதிவு செய்ய மறுத்த காவல் துறையை வழக்குப் பதிவு செய்ய வைத் தோம். அம்மாபட்டி கிராமத்தில், அருந்த திய சமூகத் தோழர்கள் 3 பேர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். அங்கெல்லாம் மக்களைச் சந்தித்து தேவையான உதவி களை செய்திருக்கிறேன். கொடியங்குளம் கலவரத்தில் யாருமே ஊருக்குள் செல்ல முடியாதபோது - நான் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி னேன். 2004இல் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் மதவெறி சக்திகளை வீழ்த்த முஸ்லிம் - தலித் ஒற்றுமையை வலியுறுத்தி, எஸ். நடராசன், ஏபி. வள்ளி நாயகம் ஆகியோருடன் இணைந்து சமூக விழிப்புணர்வு முகாம்களை நடத்தினோம். சுதந்திர இந்தியாவில் இஸ்லாமியர்களுக் காகவும், தலித்துகளுக்காகவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறேன். ●

நேர்காணல் : **பாண்டியன், யாக்கன்**

*திருத்தம் : சென்ற இதழில் வெளிவந்த பேட்டி யில், ''கன்னியாகுமரியில் நடைபெற்ற தனித் தமிழ் நாடு விடுதலைப் போராட்டத்தில், 1954 ஆம் ஆண்டு கலந்து கொண்டு சிறை சென்றேன்'' என்று பதிவாகி இருந்தது. இது தவறு. அது கன்னியாகுமரியை தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நடைபெற்ற போராட்டமாகும்.*

# ''உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளிலும் இடஒதுக்கீடு வேண்டும்''

முதுநிலை மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டு முறையை ரத்து செய்ய வேண்டும்; எட்டு இடங்களுக்கும் குறைவாக உள்ள முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். டி.எம்., எம்.சி.எச். போன்ற உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளிலும் இடஒதுக் கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்; இந்திய மருத்துவக் கவுன்சில் சட்டத் திருத்த மசோதா 2005அய் திரும்பப் பெற வேண்டும்; அரசு டாக்டர்கள் பணி நிய மனத்திற்காக கடந்த வாரம் நடைபெற்ற டி.என்.பி.சி. தேர்வை, விண்ணப்ப மனுவில் இருந்த குளறுபடிகளால் 2400 மருத்துவர்கள் எழுத முடியாத நிலை ஏற் பட்டுள்ளது. எனவே, அத்தேர்வை ரத்து செய்துவிட்டு, புதிதாக மீண்டும் தேர்வை



நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி, 'சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க'த்தின் சமூக நீதி மாநாடு - திருச்சியில் 23.10.05 அன்று, சங்கத்தின் துணைத் தலைவர் ஏ. சேப்பன் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டை டாக்டர் அருண் மித்ரா தொடங்கி வைத்தார். மாநாட்டுச் சிறப்பு மலரை திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி வெளியிட, முதல் பிரதியை மருத்துவர் தெய்வநாயகம் பெற்றுக் கொண்டார். சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத் தீர்மானங்களை முன்மொழிந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர் ரா. நல்லகண்ணு சிறப்புரையாற்றி னார். மாநாட்டில் 500க்கும் மேற்பட்ட மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர். ●




**மனிதர் கழிவை மனிதர் அள்ளுவதைத் தடை செய்யக் கோரி...**

25.11.2005 அன்று
மதுரை மாநகரில்
புரட்சிப் புலிகளின்
தலைமையில்

**அருந்ததியர்களின் தொடர் முழக்கப் போர்**

''அருந்ததியன் மலம் அள்ளுவதும்
ஆரியன் மட்டும் அர்ச்சகராவதும்
தலைகீழ் மாற்றம் காணட்டும்
தலித்துகள் தலை நிமிரட்டும்''

அனைத்து ஜனநாயக,
முற்போக்குச் சக்திகளையும்
அன்போடு அழைக்கிறோம்.


அருந்ததியர்
ஒருங்கிணைப்புக் குழு
தமிழ் நாடு

தொடர்புக்கு :
98650 - 03126; 93452 - 14239; 93448 - 04468; 98655 - 80327




படிப்பகம்

www.padippakam.com




**காவிரியின் கரையைக் கண்காணிக்க, பல அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருப்பதாக அரசு சொல்கிறது. வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட வர்களை கவனிக்க, அதே அளவு அதிகாரிகளை அரசு நியமிக்கிறதா?**

மழை - பல ஆண்டுகளுக்குப் பிறகு பாட்டம் பாட்டமாய்ப் பெய்கிறது. தமிழகத் தின் பெரும்பாலான பகுதிகள் எல்லாம் நீரிலே நனைந்தும், சில இடங்களில் மூழ்கியும் இருக்கின்றன. பல ஆண்டுகளாக நீர் இன்றி காய்ந்திருந்த ஏரிகளும், ஆறு களும், வெள்ளப் பெருக்கால் குதூகலித்துக் கொள்கின்றன. காவிரியின் கரையுடையும் படி வெள்ளம்!

எங்களூர் பக்கமிருக்கும் பாலாற்றில் இருகரை தொட்டு வெள்ளம் ஓடுகிறது இனிமேல் பாலாற்றில் வெள்ளமே வராது என்றிருந்தோம். இயற்கை அதை மாற்றி விட்டது. பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, வனவாசம் போய்த் திரும்பும் ஆர வாரத்தோடு, எங்களாற்றில் ஓடுகிறது நீர்.

இயற்கை மாற்றும் விதிகள் பல உண்டு. ஆனால், மாறாத விதியென இங்கு ஏழை களின் நிலையிருக்கிறது. மழையைப் பாடாத கவிஞன் இல்லை. மழையை எழு தாத எழுத்தாளன் இல்லை. மழையைப் படம் பிடிக்காத 'கேமரா' கலைஞன் இல்லை. மழையை அனுபவிக்காத, ரசிக் காத மனிதர் இல்லை. ஆனால், மழையின் போது ஏழைகளின் பாட்டை நினைத்துப் பார்க்கிறவர்கள் இங்கே யாருமில்லை. நீர் நிரம்பியதால் துளைகளைவிட்டு வெளி யேறிச் சாகும் மண் புழுக்களைபோல இருக் கிறார்கள் ஏழைகள்.

ஆற்றோரங்களிலும், ஏரிக்கரைகளி லும், மாநகரின் நடைபாதைகளிலும், வெள் ளம் புகும் தாழ்வான பகுதிகளிலும், கடற் கரையோரங்களிலும் வசிப்பவர்கள் யார்? தலித்துகளும், ஏழைகளும்தான். பிச்சைக் காரர்களும், நாடோடிகளான குறவர்களும் மழை பெய்யும்போது, எங்கே போகிறார் கள் என்பது யாருக்கேனும் தெரியுமா? வெள்ளப்பெருக்கில் காவிரியின் கரையைக் கண்காணிக்க, பல அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருப்பதாக அரசு சொல்கிறது. வெள்ளத் தால் பாதிக்கப்பட்டவர்களை கவனிக்க, அதே அளவு அதிகாரிகளை அரசு நியமிக் கிறதா? எல்லாருக்கும் போதிய நிவாரணம் போய்ச் சேருகிறதா?

மழை வந்தால் ஏழைகளின் வேலை போய்விடும். குடிசைகள் ஒழுகும். சில நேரங்களில் சுவர்கள் இடிந்து உயிர்களை மூடும். சாப்பிட ஒன்றும் இருக்காது. படுக்க, போர்த்திக் கொள்ள எதுவும் கிடையாது. கழிவறை வசதிகள் இல்லாததால், இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்வது இக் காலங்களிலே ஏழைகளின் பெரும்பாடு களில் ஒன்று. புதுத் தண்ணீர் எங்கெங்கிருந் தெல்லாமோ கழிவுகளையும் கசடுகளையும் கொண்டு வந்து நீர் நிலைகளில் சேர்த்து நோய் பெருக்கும். ஆற்றோரங்களிலும், ஏரியோரங்களிலும் கையகலம் இடம் பிடித்துப் பயிர் செய்யும் ஏழைகளால் அதுவும் முடி யாது. மணலோ, நீரோ நிரம்பிவிடும். பெரு மழை வெள்ளத்தின் மறுபக்கம் கொடூர மானது. இதில் பாதிக்கப்படுவது விளிம்பு நிலை மக்களே, தலித்துகளே, ஏழைகளே!

இயற்கைச் சீற்றங்களைச் சமாளிக்க தனித் துறையொன்றை நிறுவ இருப்பதாக அரசு சொல்லி வருகிறது. அதில் பூகம்பம், புயல், சூறாவளியோடு பெருமழை மற்றும் வெள்ளக் காலங்களையும் சேர்க்க வேண்டும். இக்காலங்களில் பாதிக்கப்படும் எல்லோ ருக்கும் உரிய நிவாரணமும், உதவிகளும் போய்ச்சேரும்படி பார்த்துக்கொள்ள வேண் டும். மழைக்காலங்களில் சுவர் இடிந்தால், அக்குடிசைகளைச் சீரமைக்க உதவிடும் திட் டம் ஒன்று நடைமுறையில் இப்போது இருக்கிறது. அதனோடு சேர்த்து உணவு மற்றும் பிற இன்றியமையாதப் பொருட் களை வழங்கவும் அரசு வகை செய்ய வேண்டும். இதே போன்றதொரு மழைக் காலத்தில் முன்பு எழுதிய என் கவிதை யொன்று நினைவுக்கு வருகிறது...

மழை வரும் போதெல்லாம்
அம்மா
வானம் எங்களுக்குப்
பிழை செய்வதாய் அழுவாள்

ஆடிக்காற்றிலே ஆடிப்போன வீட்டுக்கூரை
வாடிப்போன எங்களை வாய்திறந்து திட்டும்
வீட்டுக்குள்ளும் மழை பெய்யும்

அம்மா பாத்திரங்களைத் தேடி -
ஒழுகும் இடங்களிலெல்லாம்
ஓடி ஓடி வைப்பாள்
சின்னதம்பி மழை நிறைந்த பாத்திரங்களில்
கைவிடுவான்
சொன்ன பேச்சைக் கேட்க மாட்டான்

நானும் கருப்பனும்
காகிதக் கப்பல் செய்வோம்
பக்கங்களை இழந்த எங்களின்
பள்ளி ஏட்டுச் சுவடிகள்
சோகத்தில் இளைத்துப் போகும்

கப்பலையும், இருக்கும் ஒரு உடுப்பையும்
தொப்பலாய் நனைத்துக் கொள்வோம்
அப்பாவுக்கு போதை தெளிந்தபின்
எண்ணிக்கொண்டிருப்பார்
ஒழுகும் கூரையை மாற்ற

சோறு இருக்காது
வேர்க்கடலை வறுத்துத் தருவாள் அம்மா
முருங்கைக்கீரையும் அவித்துப் போடுவாள்
நான் தூக்கி வந்த நாய்க்குட்டி -
தன் பங்கைக் கேட்டு முனகும்

இரவில் ஒழுகாத ஓரத்திலே
ஒதுங்கிக் கொண்டபின்
அம்மாவின் பழம்புடவையைத்தான்
அனைவரும் போர்த்திக் கொள்வோம்

அம்மா
ராஜாக்களின் கதை சொல்வாள்!

●



படிப்பகம்

www.padippakam.com



மனிதத் தன்மையை கேள்விக்குள்ளாக்குகிற அனைத்து இழிவான நடைமுறைகளையும் ஒழித்தே ஆக வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. மானுட இழிவுகளைப் போக்க உழைத்த தலைவர்கள், தொடக்கக் காலம் முதலே இவற்றை வலியுறுத்தி வந்துள்ளனர். மனிதனை விலங்கிலும் கீழாய் கருதுகிற சாதி எனும் இழிவை ஒழித்தே ஆக வேண்டும் என்றார் அம்பேத்கர். தொடக்கக்கால தலித் தலைவர்கள் பலர், இழிவான செயல்களாகத் தாங்கள் கருதியவற்றைப் பட்டியலிட்டு, அதை ஒழிக்க சமூகக் கட்டுமானங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பறை அடிக்கக்கூடாது. சாவு சொல்லப் போகக்கூடாது. பிணம் புதைக்க குழிவெட்டக்கூடாது. பிணம் தூக்கவும், செத்த மாட்டைத் தூக்கவும் போகக்கூடாது என்று பல தீர்மானங்களைப் போட்டு, தலித் மக்கள் தமது இழிவுகளிலிருந்து தாங்களே விலக்கிக் கொள்ள வழி காட்டி இருக்கின்றனர். இந்த இழிவான செயல்களைச் செய்ய மறுத்த தலித்துகள் ஆதிக்கச் சாதியினரால் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும், கட்டாயப்படுத்தப்பட்டும் இருக்கிறார்கள். தொடக்கக்கால தலித் மக்களின் வரலாறுகள் இவற்றை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

இந்த இழிவு ஒழிப்பு நடவடிக்கைகள் இன்றும் தொடர்கின்றன. சாதி இந்துக்களால் புனித நூல்களாகக் கருதப்படும் வேதங்களிலும், இதிகாசங்களிலும் தலித்துகளை இழிவுபடுத்தும் பல பகுதிகள் உள்ளன. அவற்றை நீக்கிவிட்டு, அந்நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்று 'தேசிய எஸ்.சி./எஸ்.டி. ஆணைய'த் தலைவர் சூரஜ்பான் கோரிக்கை விடுத்துள்ளார்.

வேதங்களையும், இதிகாசங்களையும் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் அம்பேத்கர். அவைகளின் அடிப்படையே ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் கருத்தியல்தான். அந்நூல்களை சாதி நீக்கம் செய்து பதிப்பிப்பது என்பது, அழுக்குகளுக்கு ஒப்பனைகளை செய்து, அதன் தன்மைகளை மறைப்பது போலத்தான். அந்நூல்களை எரித்துப் போராட்டங்களை நடத்திய பெரும் தலைவர்களின் செயல்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளிவிடுகிறது போலாகும் இக்கோரிக்கைகள். இத்தகு நூல்களின் சாதியத்தன்மையைத் தோலுரித்து, அவைகளை சாதிய அதிகாரத்தளங்களில் மதிப்பிழக்கச் செய்வதே சரியானதாக இருக்கும்.

•

தீண்டாமையைக் குற்றமாக அறிவிக்கும் சட்டத்தின் வாசகத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று தேசிய எஸ்.சி., எஸ்.டி. ஆணையம் விருப்பம் கொண்டுள்ளது. இந்த ஆணையத்தின் தலைவரான சூரஜ்பான், அரசமைப்புச் சட்டப்பிரிவு 17இல் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று நாடாளுமன்றத்தைக் கோரியுள்ளார். அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது பிரிவு, தீண்டாமை இந்தியாவில் ஒழிக்கப்படுவதாகக் கூறுகிறது. இதில் சாதியும் ஒழிக்கப்படுவதாகத் திருத்த வேண்டும் என்கிறார் பான். அதன்படி சாதி முறையும், தீண்டாமையும் இந்தியாவில் ஒழிக்கப்பட்டுள்ளது என்று திருத்தம் அமையும். சாதிமுறையை சட்டப்படி ஒழிப்பது என்பது, மிகச் சரியானதே. தீண்டாமை மட்டும் ஒழிக்கப்பட்டு சாதியம் இருக்க வேண்டும் என்பது காந்தியப் பார்வை. தீண்டாமையும் சாதி முறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. அதிலும் தீண்டாமையின் அடிப்படையாக இருப்பதே சாதிதான். எனவே, கிளைகளை மட்டும் வெட்டிப் பயனில்லை. வேருடன் தோண்ட வேண்டும் என்கிறது சூரஜ்பானின் கருத்து.

அவர் இன்னொன்றையும் சொல்கிறார். இடஒதுக்கீடு கேட்காதீர்கள், மேற்கூறிய சட்டத் திருத்தத்தைக் கேளுங்கள் என்கிறார். இடஒதுக்கீட்டைக் கோராமலிருப்பது என்பது, நிகழ்கால எதார்த்தத்தில் தலித்துகள் தங்களையே இழப்புக்குள்ளாக்கிக் கொள்வதற்குச் சமம். இடஒதுக்கீட்டினைக் கேள்விக்குள்ளாக்கும் யுக்தியின் அடிப்படையிலான கோரிக்கையாக இச்சட்டத் திருத்தம் இருக்குமென்றால், நாம் இதை கவனமாய் பரிசீலிக்க வேண்டும்.

•

மனிதனை, மனிதன் கை ரிக்ஷாக்களில் வைத்து இழுத்துப் போகும் முறை, இன்னும் மேற்கு வங்கத்தில் இருக்கிறது. நீண்டகாலமாக அங்கே ஆண்டுவரும் கம்யூனிஸ்ட் அரசு, இதை ஏன் ஒழிக்கவில்லை என்று தெரியவில்லை. மனித உயர்வை, மாண்பைப் பேசும் கொள்கையைக் கொண்ட அந்த அரசு, இதை எப்போதோ செய்திருக்க வேண்டும். மிகத்தாமதமாக முடிவெடுத்திருக்கிறது. இன்னும் சட்டம் கொண்டு வரவில்லை. அப்படியே கொண்டுவந்தாலும், சில தேவைகளுக்கு மட்டும் கை ரிக்ஷாக்களை அனுமதிப்போம் என்றிருக்கிறார்கள். அது ஏனென்று தெரியவில்லை.

கை ரிக்ஷாக்களை வடிவமைத்தது ஒரு அமெரிக்க மிஷினரியாம் (ஏகாதிபத்திய நாட்டுக் கருவி என்று சீக்கிரம் சட்டம் கொண்டுவரலாம்)! தன் மனைவியை இழுத்துப் போக இதை வடிவமைத்திருக்கிறார். அவர் அப்போது ஜப்பானில் இருந்ததால், ஜப்பான் முழுவதும் இது பிரபலமாயிருக்கிறது (ஆண்டு 1874). ஜப்பானில் நவீன வாகனங்கள் அறிமுகமானபோது கை ரிக்ஷாக்கள் ஒழிந்துவிட்டன. கை ரிக்ஷா 1920 களில் சில சீன வணிகர்களால் கல்கத்தாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வரை அது நடைமுறையில் இருக்கின்றது. இன்று கல்கத்தாவில் 18 ஆயிரம் கை ரிக்ஷா தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.



இதை ஒழித்துவிட்டு, மாற்றுத் தொழிலையோ அல்லது நவீன வாகனங்களையோ அரசு அவர்களுக்கு வழங்கலாம். சுற்றுலா பயணிகளுக்காகவோ, கை ரிக்ஷா தொழிலாளர்களின் போராட்டத்துக்கு அஞ்சியோ இந்தத் தொழிலை விட்டு வைத்திருந்தால் அது தவறு. நுகங்களில் பூட்டப்பட்டு காளைகள் வண்டிகளை இழுப்பதுபோல், மனிதனும் சக மனிதனை இழுத்துப் போனால் கோட்பாடுகள் பேசிப் பயனில்லை. •



படிப்பகம்

www.padippakam.com






மரணம் மதிப்புடையதாக இருக்க வேண்டும். தீர்மானிக்கப்பட்டு செயல் படுத்தப்படும் மரணமே கொலை. நீதியை நிலைநாட்ட, அரசும் நீதி அமைப்புகளும் செய்யும் கொலையை, 'மரண தண்டனை' என்கிறது இந்திய அரசியல் சாசனம். எந்த உயிரையும் பறிக்கும் அதிகாரம், அரசுக்கும் நீதி அமைப்புகளுக்கும் கூடாது என்பதே மனித உரிமையின் அடிப்படை. காட்டுமிராண்டிக் காலத்தில் நிலவிய 'பழிக்குப் பழி' தற்பொழுதும் பின் பற்றப்படுவது - மனித நேயத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

சமூகச் சூழ்நிலையில் நிகழ்த்தப்பட்ட ஒரு குற்றத்திற்காக, சிறைக் கொட்டடியில் சட்டப்பூர்வமாக இன்னொரு குற்றம் நிகழ்வதை ஏற்க முடியாது. மரணத்தை எதிர்கொண்டே வாழும் சமூகத்திற்கு, மரணத்தை தண்டனையாக வழங்குவது ஒழிக்கப்பட வேண்டும்.

■ **கோ. சுகுமாரன்**

❝ மரண தண்டனைக் கைதிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதைவிட, அவர்களுக்கு மிகுந்த அன்பான ஈடுபாட்டுடன் ஆன்மீக வழிகாட்டுதலின்படி நல்வழிப் படுத்தலாம். மரண தண்டனைக் கைதிகளில் ஒருவருக்கு 75 வயதாகிறது. இனி அவர் விடுதலையானால், எவ்விதக் குற்றச் செயல்களிலும் அவர் ஈடுபடுவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, இது போன்ற கைதிகளை சுமையாகக் கருதாமல், மனிதச் சொத்தாகக் கருதி - நல்வழிப்படுத்த அரசு முயல வேண்டும்.

இதுபோன்ற கைதிகள், இனி இந்த உலகில் வாழும் எஞ்சிய நாட்களைத் தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும். முடிந்தவரை, பெரும்பாலானோர் விஷயத்தில் இதைக் கடைப் பிடித்து சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். ❞

குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இவ்வாறு கூறியிருப்பது, நீண்ட நாட்களாக நடைபெற்று வரும் மரண தண்டனை ஒழிப்புப் போராட்டத்திற்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது. உலக அளவில் மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவு பெருகி வரும் இவ்வேளையில், 'அகிம்சை'யை இடையறாது வலியுறுத்தும் இந்தியா போன்ற நாடுகள் - இத்தண்டனையை நீக்காமல் வைத்திருப்பது நேர்முரணானது. அண்மையில்கூட, தென்ஆப்பிரிக்க அரசியல்சாசனநீதிமன்றம் மரணதண்டனையை சட்ட விரோதம் என அறிவித்துள்ளது. பதினோரு நீதிபதிகள் ஒருமித்து வழங்கிய இத்தீர்ப்பினால், இருபது ஆண்டு காலமாகச் சிறையில் வாடும் 453 பேர் உயிர் தப்பியுள்ளனர்.

மரண தண்டனை வழங்குவது, மனித நாகரீகத்திற்கு எதிரானது; இந்திய அரசியல்சட்டம் வழங்கியுள்ள வாழ்வுரிமைக்கு முரணானது. மரண தண்டனை வழங்குவதன் மூலம் குற்றங்கள் குறையும் என்பதும், இது குற்றம் செய்பவர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதும் நிரூபிக்கப்படவில்லை. உலக அளவில் நடைபெற்ற பல்வேறு ஆய்வுகள் இதனை

### மரண தண்டனை நிறைவேற்றப்படும் முறைகள்


**சவுதி அரேபியா, ஈராக்:**
தலையை வெட்டுதல்

**அமெரிக்கா:**
மின்சாரத்தின் மூலம், கொடூரமான ஊசி மூலம்

**ஆப்கானிஸ்தான், ஈரான்:**
கல்லால் அடித்துக் கொல்வது

**எகிப்து, ஈரான், ஜப்பான், ஜோர்டான், பாகிஸ்தான், இந்தியா, சிங்கப்பூர்:**
தூக்குத் தண்டனை

**சீனா, கவுதமலா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து:**
கொடூரமான ஊசிமூலம், துப்பாக்கியால் சுடுவது




**பெலாரஸ், சோமாலியா, தாய்வான், உஸ்பெகிஸ்தான், வியட்நாம்:**
துப்பாக்கியால் சுடுவது



படிப்பகம்

www.padippakam.com



# ணடனை
## த்தும் கொலை!

## மரண தண்டனையிலும் வர்ணாசிரமம்!

மரண தண்டனை, எந்த விதத்திலும் குற்றத்தைத் தடுப்பதில்லை. இந்தியாவில் நிலவும் சமூக அமைப்பைக் கருத்தில் கொண்டு - சட்ட ரீதியான மரண தண்டனை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும். தீட்டு என்பதன் அடிப்படையில் இயங்கும் இந்திய சமூக அமைப்பின் உளவியல் - 'சதுர்வர்ணம்' என்ற கோட்பாட்டில், ஆழமாக வேரூன்றி இருக்கிறது. பசுவதையும், பார்ப்பன வதையும் செய்யக் கூடாது என்று இந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. இந்திய நீதிமன்றங்களில் செயல்பட்டுவரும் பெரும்பாலானவர்கள், இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். இதன் விளைவாக, காலனிய கால இந்தியாவிலும், சுதந்திர இந்தியாவிலும் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் - ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களே (பழங்குடியினர், தலித்துகள், இஸ்லாம், சீக்கிய மதச் சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள்).

மறுபுறத்தில், அதே குற்றத்தைச் செய்த ஆதிக்கச் சாதியினருக்கு குறிப்பாகப் பார்ப்பனர்களுக்கு மரண தண்டனை வழங்குவது என்பது, அரிதான ஒன்றாகவே இருந்திருக்கிறது. அமெரிக்காவில் ஒரே விதமான குற்றத்திற்கு வெள்ளையர்களைவிட, கருப்பர்களுக்குதான் அதிகளவில் மரண தண்டனை தரப்படுகிறது. அதுபோல, இந்தியாவில் சாதிய சமூக அமைப்பின் கீழ் மிக அதிகமான அளவுக்கு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களே!

**- முகுந்தன் சி. மேனன்,** *பொதுச் செயலாளர், மனித உரிமை அமைப்புகளின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு, கேரளா*

## மரண தண்டனை ஒழிக்கப்பட்ட நாடுகள்

'அம்னஸ்டி இன்டர்நேஷனல்' தகவல்களின்படி, 1990 இல் இருந்து 40 நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விட்டன. மொத்தத்தில் 120 நாடுகளில் மரண தண்டனை - சட்டத்திலிருந்தும், நடைமுறையிலும் ஒழிக்கப்பட்டுவிட்டது.

85 நாடுகள் எல்லா வகை 'கிரிமினல்' குற்றங்களுக்கும் மரண தண்டனையை ரத்து செய்திருக்கின்றன.

24 நாடுகள் நடைமுறையில் மரண தண்டனையை ரத்து செய்துள்ளன. சட்ட ரீதியாக இன்னும் ஒழிக்கவில்லை. இருப்பினும், கடந்த 10 ஆண்டுகளாக அவை மரண தண்டனையை யாருக்கும் அளிக்கவில்லை.



11 நாடுகள் போர்க்கால குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை அளிக்கின்றன.

உறுதி செய்துள்ளன. "எங்களைப் பொறுத்த வரையில், மரண தண்டனை வழங்குவதன் மூலம் குற்றங்கள் குறைவதில்லை. இதுபற்றி விரிவாக, ஆழமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என இந்திய சட்ட ஆணையத்தின் 35 ஆவது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மரண தண்டனைக்கு எதிரான உணர்வு, கற்றுத் தேர்ந்த நீதிபதிகளிடம் இருந்தது என்பதற்கு 1950இல் நடந்த இந்நிகழ்வே சான்று. மும்பையில் மாவட்ட நீதிபதியாக இருந்த காரேகாட்டுக்கு உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அப்போதெல்லாம் உயர் நீதிமன்ற நீதிபதிகள்தான் மரண தண்டனை வழங்க முடியும். உயர் நீதிமன்ற நீதிபதி பதவியை ஏற்றுக் கொண்டால், தான் மரண தண்டனை வழங்க நேரிடும் என அப்பதவியை உதறித் தள்ளினார் காரேகாட். ஆனால், இன்றைய நீதிபதிகளின் நிலையோ வெட்கக் கேடானது.

"எப்போதும் ஏழைதான், ஏமாளிதான், நீக்ரோதான், கறுப்பு மனிதன்தான் தூக்கிலிடப்படுகிறான். பணம் படைத்தவன், வெள்ளைக்காரன் தப்பித்துக் கொள்கிறான். இந்தப் பாகுபாட்டை நம்மால் சகித்துக் கொள்ள முடியாது" என அமெரிக்க கருப்பின நீதிபதி மார்ஷல் கூறியுள்ளது, மரண தண்டனை வழங்கப்படுவதன் சமூக - பொருளாதாரப் பின்னணியை விளக்குகிறது.

1981இல் ஒரே வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள், தனித் தனியே மேல்முறையீடு செய்ததில் அளிக்கப்பட்ட தண்டனைகள், மரண தண்டனை வழங்குவதை கேள்விக்குள்ளாக்குகின்றன. ஒரு குடும்பத்தினரை கொலை செய்த வழக்கில் மரண தண்டனை பெற்ற ஜீட்டா சிங், கஷ்மீரா சிங், அர்பன் சிங் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் தனித்தனியே மேல் முறையீடு செய்துள்ளனர். ஜீட்டா சிங்கின் வழக்கை விசாரித்த நீதிபதிகள், அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்தனர். அவர் தூக்கிலிடப்பட்டார். கஷ்மீரா சிங்கின் வழக்கை விசாரித்த நீதிபதிகள், அவருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனை வழங்கினர். அர்பன் சிங்கின் வழக்கை விசாரித்த நீதிபதிகள், மேற்சொன்ன தீர்ப்புகளை அறிந்த பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை குறைக்கப்பட வேண்டுமென்பதற்காக, குடியரசுத் தலைவருக்கு அவரது கருணை மனுவை அனுப்பி வைத்தனர்.

"மரண தண்டனை வழங்கப்படுவ



படிப்பகம்

தற்கான சிறப்புக் காரணங்கள் என்பது ஒவ்வொரு நீதிபதியைப் பொறுத்தும், அவர் கொண்டிருக்கும் மதிப்பீடுகளைப் பொறுத்தும், சமூக நீதி குறித்து அவர் வைத்திருக்கும் கருத்தைப் பொறுத்தும் மாறுபட்டே தீரும்'' என பச்சன் சிங் வழக்கில், மரண தண்டனை குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மாறுபட்டு கருத்துரைத்த நீதிபதிகள் கூறியுள்ளது, இங்கு மிகவும் பொறுத்தப்பாடுடையது. இதுபோன்ற தீர்ப்புகள் வழங்கப்படுவது, ''சமூக - அரசியல் அதிகாரம் அற்றவர்கள் மட்டுந்தான் மரண தண்டனை பெறுகின்றனர்'' என மனித உரிமை ஆர்வலர் டாக்டர் பாலகோபால் போன்றவர்கள் கூறுவதற்கு அணி சேர்க்கிறது.

அக்டோபர் 10: உலக மரண தண்டனை எதிர்ப்பு நாளையொட்டி குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள், இந்தியாவில் பல்வேறு சிறைகளில் தூக்குக் கயிறை எதிர்நோக்கி நாள்தோறும் செத்துக் கொண்டிருக்கும் 50 பேருக்கு மரண தண்டனையை ரத்து செய்து, மன்னிப்பு வழங்கலாம் என அறிவுறுத்தியுள்ளார். இந்திய அரசியல் சாசனப் பிரிவு 72 இன்படி, மரண தண்டனை அளிக்கப்பட்டவர்களின் கருணை மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் அமைச்சரவை விவாதித்து எடுக்கும் முடிவின் பரிந்துரையின் பேரிலேயே குடியரசுத் தலைவர் முடிவெடுக்க முடியும். இந்தியா முழுவதும் இருந்து மரண தண்டனை பெற்றவர்கள் 50 பேரின் கருணை மனுக்களைப் பரிசீலித்து, அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கலாம் என குடியரசுத் தலைவர் முடிவெடுத்து, உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். ஆனால், இதனை ஏற்றுக் கொள்ளாத உள்துறை அமைச்சகம், இந்த 50 பேரில் 20 பேர் கொடிய குற்றம் புரிந்தவர்கள் என்று கூறி, அவர்கள் தண்டனையைக் குறைக்கக் கூடாது எனக் கூறியுள்ளது. 'இந்தியா மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென' உலக நாடுகள் வலியுறுத்தி வரும் இச்சூழலில், மத்திய அரசு இப்படியொரு முடிவை எடுத்திருப்பது, மனித உரிமைக்கு எதிராக இந்திய அரசு செயல்படுவதையே வெளிப்படுத்துகிறது. இந்திய அரசின் இப்போக்கு, கடும் கண்டனத்திற்குரியது.

இதில் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன்; வீரப்பன் தொடர்புடைய வழக்கில் சைமன், பிலவேந்திரன், ஞானபிரகாஷ், மாதய்யன்; இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்த பிட்டாவைக் கொல்ல முயன்ற வழக்கில் தவீந்தர் சிங் புல்லர் உட்பட 20 பேர் அடங்குவதாக உள்துறை அமைச்சகம் கூறுகிறது. பச்சின் சிங் வழக்கில் ''அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்க வேண்டும்'' என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த மூன்று வழக்குகளுமே 'அரிதிலும் அரிதான வழக்குகள்' எனக் கருத முடியாது என சட்ட வல்லுநர்கள் கூறியிருப்பது நினைவுகூரத்தக்கது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் காலாவதியான 'தடா' சட்டத்தின்படி, காவல்துறை அதிகாரிகளால் கட்டாயமாகப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் அப்படியே சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேயே - பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை வழங்கி 'சாதனை' புரிந்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் 19 பேரை விடுதலை செய்ததோடு, நான்கு பேருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

தமிழகத்தில் மரண தண்டனைக்கு எதிராகத் தொடர் பிரச்சாரங்கள், போராட்டங்கள் நடைபெற்றன. ராஜிவ் காந்தி வழக்கில் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென பல தரப்பினரும் கோரியதன் விளைவாக, சோனியா காந்தி நளினிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையைக் குறைக்க வேண்டுமென வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து அப்போதைய தி.மு.க. அமைச்சரவை, நளினிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. அப்போது சோனியா காந்தி, 'என் கணவர் மரணத்திற்காக எந்த ஒரு உயிரும் பலியாவதை நானோ, என் குடும்பத்தினரோ விரும்பவில்லை' எனக் குறிப்பிட்டார்.

தற்போது குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டுமெனக் கூறியிருப்பதைத் தொடர்ந்து, ''ராஜிவ் காந்தி வழக்கில் உடனடியாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்'' என அவ்வழக்கின் விசாரணை அதிகாரியான கார்த்திகேயன் கூறியுள்ளார். ராஜிவ் காந்தி வழக்கில் வழங்கப்பட்ட மரண தண்டனை குறித்து சட்ட ரீதியான நடவடிக்கைகள்

## ''மரண தண்டனை வேண்டாம்''

**உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஒய்.கே. சபர்வால்**



''இன்று இந்திய குற்றவியல் சட்டம், அரிதிலும் அரிதான வழக்குகளில் மரண தண்டனை அளிக்கலாம் என்று கூறுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இது நிலைப் பெற்றிருக்கும்வரை, நமக்கு சொந்தக் கருத்துகள் இருப்பினும் - அதை ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். இந்தத் தன்மையின் கீழ் வழக்குகள் இருக்கும் தருணத்தில், மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனில் - அது விதிக்கப்பட்டாக வேண்டும். மரண தண்டனை குறித்த எனது சொந்தக் கருத்துகளை முன்னிறுத்தி - சட்டத்திற்குப் புறம்பாக, அது வேண்டாம் என்று சொல்ல மாட்டேன்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இல்லாமல், இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் என் கருத்தைக் கேட்டால், நான் மரண தண்டனை வேண்டாம் என்றுதான் வலியுறுத்துவேன். அதற்குப் பதில் வாழ்நாள் முழுவதும் ஆயுள் தண்டனை அளிக்கலாம். அய்ரோப்பா முழுவதும் மரண தண்டனை இல்லை. அமெரிக்காவின் பல மாநிலங்களில் மரண தண்டனை இல்லை. வேறு பல நாடுகளிலும் அது இல்லை. இது, ஒட்டுமொத்தமாக சமூக - அரசியல் கேள்வி சார்ந்ததாகும். இது தொடர வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து இந்திய நாடாளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும்.''

*'தி இந்து' - 21.10.2005*



**புதுச்சேரியில் மரண தண்டனை ஒழிப்பு மாநாடு**

**டிசம்பர் 10, 2005**

மனித உரிமைகள் நாளில்

மரண தண்டனை எதிர்ப்புக் குழு - புதுச்சேரி

தொடர்புக்கு :
கோ. சுகுமாரன்
பேசி : 98940 - 54640

www.padippakam.com

**“ மரண தண்டனை கூடாது என்பதே மனிதநேயமுள்ளவர்களின் கோரிக்கை. இதன் பொருள் தண்டனையே கூடாது என்பதல்ல. ”**

நிலுவையில் உள்ளபோது, ஓய்வுபெற்ற அதிகாரியான கார்த்திகேயன், இதுபோன்று கூறுவது கண்டனத்திற்குரியது.

1999 முதல் கடந்த ஆறு ஆண்டுகளாக முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் மரண தண்டனையைச் சுமந்து கொண்டு சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர். ''ஒருவர் மரண தண்டனையை எதிர் நோக்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல், அந்த அச்சத்திலேயே இருக்க நேரிட்டால் அவரைத் தூக்கிலிட முடியாது; தண்டனையைக் குறைத்தாக வேண்டும்'' என உச்ச நீதிமன்ற நீதிபதி சின்னப்ப (ரெட்டி) கூறியிருப்பது, இங்கு கடைப்பிடிக்கப் படவில்லை.

வீரப்பன் தொடர்புடைய வழக்கில், மைசூர் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய ஆயுள்தண்டனையைக் குறைக்க வேண்டு மென மேல்முறையீடு செய்தபோது, உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து சைமன், பிலவேந்திரன், ஞானபிரகாஷ், மாதையன் ஆகியோருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. மேல்முறையீடு மனுவின் மீது மரண தண்டனை விதித்து தீர்ப்பளிப்பது, சட்டப்படி தவறானது என்பதை உச்ச நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானபிரகாஷ் வீரப்பனை நேரில் பார்த்ததுகூட கிடையாது என்பதும், அவர்தான் தூக்கிலிடப்படுவதற்கு முன்பு வீரப்பனை ஒரு முறையாவது பார்க்க வேண்டுமெனக் கூறியுள்ளதும், மரண தண்டனை வழங்குவதன் நியாயத்தை உடைத்தெறிகிறது.

நாகர்கோயில் நீதிமன்றத்திற்குள் அய்யாவு என்பவர் கொல்லப்பட்ட வழக்கில் ஷேக் மீரான், செல்வம், ராதா கிருஷ்ணன் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் மரணதண்டனையை உறுதி செய்ததால், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றமும் மரண தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது. இவ்வழக்கு விசாரணைக்காக நீதிபதிகள் செலவழித்த நேரம் எவ்வளவு தெரியுமா? மூன்று பேரின் உயிரைப் பறிக்கும் இந்தத் தீர்ப்பை வழங்க, நீதிபதிகள் செலவிட்டது சில நிமிடங்கள் மட்டுமே.

'ஒருவருக்கு மரண தண்டனை வழங்கும்போது, அவர் தொடர்பான வழக்கின் அனைத்து அம்சங்களும் மிகவும் ஆழமாக ஆராயப்படுகிறது. அதன்பிறகே, மரண தண்டனை வழங்கப்படுகிறது' என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.சி. லகோத்தி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற நாளன்று (31.10.2005) பேசியுள்ளார். மரண தண்டனையை நீக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். லகோத்தியின் கருத்து மிகவும் அபத்தமானது என்பதற்கு, மேற்சொன்ன வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தனித்தனியே வழங்கிய தீர்ப்புகளே சான்று.



அப்துல் கலாம்

குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்ட கருணை மனுக்களின் எண்ணிக்கை

| ஆண்டு | பெறப் பெற்றவை | தண்டனைகுறைக் கப்பட்டவை | நிராகரிக்கப் பட்டவை |
|---|---|---|---|
| 1945 | 768 | 56 | 712 |
| 1946 | 438 | 13 | 425 |
| 1947 | 283 | 7 | 276 |
| 1948 | 167 | 23 | 144 |
| 1949 | 217 | 43 | 174 |
| 1950 | 183 | 46 | 137 |
| 1951 | 195 | 75 | 120 |
| 1952 | 164 | 41 | 123 |
| 1953 | 263 | 58 | 205 |
| 1954 | 221 | 55 | 166 |
| 1955 | 199 | 45 | 154 |
| 1956 | 192 | 68 | 124 |
| 1957 | 200 | 80 | 120 |
| 1958 | 175 | 48 | 127 |
| 1959 | 257 | 56 | 201 |
| 1960 | 263 | 47 | 216 |
| 1961 | 262 | 88 | 174 |
| 1962 | 188 | 62 | 126 |
| 1963 | 154 | 41 | 113 |
| 1964 | 194 | 66 | 128 |
| 1965 | 188 | 97 | 91 |
| 1966 | 142 | 97 | 45 |
| 1967 | 100 | 16 | 84 |
| 1968 | 225 | 154 | 71 |
| 1969 | 7 | 7 | — |
| 1970 | 33 | 7 | 26 |
| 1971 | 58 | 9 | 49 |
| 1972 | 119 | 80 | 39 |
| 1973 | 69 | 49 | 20 |
| 1974 | 93 | 27 | 66 |
| 1975 | 49 | 23 | 26 |
| 1976 | 42 | 15 | 27 |
| 1977 | 13 | 4 | 9 |
| 1978 | 22 | — | 22 |
| 1979 | 18 | 4 | 14 |
| 1980 | 7 | — | — |
| 1981 | 23 | 7 | 16 |
| 1982 | 7 | — | — |

எந்த நீதிமன்றமும் தாமாகவே உண்மைகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்க முடியாது. குற்றத்தைப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, காவல்துறை நீதிமன்றத்தின் முன் வைக்கும் ஆவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே நீதிபதிகள் தீர்ப்பளிக்க முடியும். காவல் துறை பதிவு செய்யும் வழக்குகளில் 75 சதவிகிதம் பொய்யானவை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீதிபதிகள் தீர விசாரித்து தண்டனை வழங்கினால்கூட, தவறு நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதற்கு பாண்டியம்மாள் வழக்கே மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

மதுரை அருகேயுள்ள கிராமத்தைச் சேர்ந்த பாண்டியம்மாள் கொல்லப்பட்ட வழக்கில், அவரது கணவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது காவல்துறை. அவர் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையும் நடைபெற்றது. விசாரணை முடிந்து, தீர்ப்புச் சொல்லப்பட இருந்த நேரத்தில், கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்ட பாண்டியம்மாள் திடீரென நீதிபதி முன்பு ஆஜரானார். ஒட்டுமொத்த நீதித்துறையே வெட்கித் தலைகுனிந்தது. ஒருவேளை பாண்டியம்மாள் கணவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டிருந்தால், இக்குற்றத்திற்கு யார் பொறுப்பேற்பது?

''நீதிபதிகள் பொதுவாகப் பிற்போக்கு எண்ணம் உடையவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்'' என உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் கூறியுள்ளது உண்மைதான் என்பதை, இத்தீர்ப்பு வழங்கிய முறை தெளிவாக்குகிறது.

இந்நிலையில் அப்துல் கலாம், எட்டு



படிப்பகம்

www.padippakam.com

# ''மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்''

## டாக்டர் அம்பேத்கர்

''...நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே ஒரு வரையறுக்கப்பட்ட பகுதியாக 'உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யும் உரிமை' நிர்ணயம் செய்யப்பட வேண்டுமா? அல்லது எத்தகைய கிரிமினல் மேல் முறையீடுகளை உச்ச நீதிமன்றம் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை, நாம் நமது நாடாளுமன்றத்திடமே அளித்து விடலாமா? இந்தக் கேள்விகளை, தவிர்க்க இயலாத ஒரு நியதியாக உருவாக்க நான் விரும்பவில்லை. மேலும், கேள்விகளுக்கான எனது தீர்மானமான பதில் என்று எதையும் இந்தச் சூழலில் நான் கூற விரும்பவில்லை.

எனக்கென்று தனிப்பட்ட கருத்துகள் உள்ளன. பிரச்சனைகள் எழும்போது, எனது கருத்துகளை நான் அதன் மீது திணிப்பதில்லை. குறை நிறைகளை சீர்தூக்கி, திறந்த மனதுடன்தான் பிரச்சனைக்கான தீர்வினைத் தருகிறேன். கிரிமினல் மேல் முறையீடுகளை விசாரிக்கப் போதுமான அதிகாரத்தை, உச்ச நீதிமன்றத்திற்கு நமது நாடாளுமன்றமே வழங்கிவிடலாம்.



உச்ச நீதிமன்றத்திற்கானப் பணியின் அளவையும், உச்ச நீதிமன்றத்தால் எவ்வளவு வேலை செய்ய முடியும் என்பதையும், அங்கு பணியாற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கையையும், அதற்கானப் பொருளாதார செலவுகளையும், நமது நாடு சந்திக்க முடியுமா என்பதற்கானப் புள்ளிவிவரம் திரட்டப்பட்டு, அதை நமது நாடாளுமன்றம் ஆய்வு செய்ய வேண்டும்.

மரண தண்டனை மேல் முறையீட்டு வழக்குகளை உச்ச நீதிமன்றமே விசாரிக்கலாம் என்பதற்கு மாறாக, மரண தண்டனையை முழுவதுமாக ஒழித்து விடுவதை நான் ஆதரிக்கிறேன் (கேளுங்கள், கேளுங்கள்). இந்த முடிவைப் பின்பற்றுவதே சரியானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதனால் பல முரண்பாடுகள் முடிவிற்குக் கொண்டு வரப்படும்.

நமது நாடு அகிம்சையில் நம்பிக்கை கொண்ட நாடு. அகிம்சை நமது நாட்டின் பண்டைய கலாச்சாரம். மக்கள் தற்போது தங்களின் வாழ்வியல் நெறியாக இதனைப் பின்பற்றாமல் இருந்தால்கூட, அகிம்சையை ஒரு நியாயத் தீர்ப்பாக மக்கள் முடிந்தவரை பின்பற்ற வேண்டும் என விரும்புகின்றனர். இந்த உண்மைக்கு மதிப்பளிக்கும் வகையில், நாம் இந்த மக்களுக்கு ஆற்ற வேண்டிய சரியான பணி - மரண தண்டனையை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதுதான்.''

- *'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 13, பக்கம் 639*

ஆண்டுக் காலமாக குடியரசுத் தலைவர் மாளிகையில் உறங்கிக் கிடந்த கருணை மனுக்களைத் தூசி தட்டி எடுத்து பரிசீலனை செய்து முடிவெடுத்திருப்பது, மனித உரிமைகளுக்குக் கிடைத்த வெற்றியே. 'மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட 50 பேரில் 20 பேர் கொடிய குற்றம் புரிந்தவர்கள் எனக் கூறி அவர்களுக்கு மன்னிப்பு வழங்கக் கூடாது' என உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது. அதன் பிறகும் உள்துறை அமைச்சகத்திற்கு அனைவருடைய மரண தண்டனையையும் குறைக்க வேண்டுமென குறிப்பு எழுதியுள்ளது, அப்துல் கலாமின் மனித நேயத்தையே காட்டுகிறது.

மரண தண்டனை கூடாது என்பதே மனிதநேயமுள்ளவர்களின் கோரிக்கை. இதன் பொருள் தண்டனையே கூடாது என்பதல்ல. ஏற்றத்தாழ்வு நிறைந்த, சாதியப் பாகுபாடுகள் நிலவும் இச்சமூகத்தில், விளிம்பு நிலையில் வாழும் மக்கள் தங்களின் வாழ்க்கைக்காக கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது. போதிய அளவில் கல்வியறிவு அளிக்கப்படாமல், வேலைவாய்ப்பு எட்டாக் கனியாகி, வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் நிலை இருக்கிறது. குற்றவாளிகள் உருவாவதை இப்படியான சமூகப் பின்னணியிலிருந்து பார்க்க வேண்டும். குற்றம் புரிபவர்கள் திருத்தப்பட வேண்டுமென்பதே நோக்கம் என அரசாங்கம் ஒருபுறம் கூறிக் கொண்டே - மறுபுறம் மரண தண்டனையை வலியுறுத்துவது மிகப் பெரிய முரண்பாடாகும்.

இந்தியாவில் 1950 முதல் மரண தண்டனை வழங்கப்பட்ட 75 வழக்குகளை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அமெரிக்காவில் 1973 முதல் 119 பேர் மீது விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. 1990 முதல் இன்று வரை 40 நாடுகள் மரண தண்டனையைக் கைவிட்டுள்ளன. ஆனால், இந்திய அரசு மரண தண்டனை குறித்து இரட்டை நிலைப்பாடு கொண்டுள்ளது. பாகிஸ்தானில் இந்தியாவைச் சேர்ந்த சரப்ஜித் சிங்கிற்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்ய, இந்திய அரசு கடும் முயற்சி எடுத்தது. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங், மனித நேய அடிப்படையில் இப்பிரச்சினையை அணுகுவதாகக் கூறினார். அதே நேரத்தில், குடியரசுத் தலைவர் - இந்தியாவிலுள்ள 50 பேருக்கு மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று கூறியிருப்பதை மட்டும் இந்திய அரசு எதிர்ப்பது ஏன்?

மரண தண்டனையை ரத்து செய்து மன்னிப்பு வழங்க வேண்டுமென அப்துல் கலாம் கூறியுள்ளதை - பாரதிய ஜனதா, காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த ஒரு சிலர் எதிர்த்துள்ளனர். நாடாளுமன்றத்தில் விவாதித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டில் கூறியுள்ளார். 'மரண தண்டனையைக் குறைப்பது குறித்து நாடாளுமன்றம் கூடி விவாதித்து நல்ல முடிவு எடுக்கும் என நம்புகிறேன்' என அப்துல் கலாம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ளார். தமிழகத்திலுள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., சி.பி.அய்., சி.பி.எம். போன்ற மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள், மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய சரியான தருணமிது.

மரண தண்டனையை எதிர்நோக்கி உள்ள 50 பேரின் உயிரைக் காப்பதோடு, இந்திய அரசியல் சாசனப் புத்தகத்திலிருந்தே மரண தண்டனை நீக்கப்பட வேண்டும். மனித உரிமை அமைப்புகள், மனித நேயமுள்ளவர்கள், நீண்ட காலமாகக் கோரிவருவதை நிறைவேற்ற அனைவரும் பாடுபட வேண்டும். குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மரண தண்டனை ஒழிப்புக்கு ஆதரவுக் கரம் நீட்டியிருப்பதைப் பற்றிக் கொண்டு, மனித உரிமைக்கானப் போராட்டத்தைத் தொடர வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



நவம்பர் 17, 2005

## போராளி செகுடந்தாளி முருகேசன் நினைவு நாள்

# வீரவணக்க அணிவகுப்பு



• நேரம்: காலை 10 மணி • இடம் : செகுடந்தாளி சோமனூர்

தொடர்புக்கு: 93448 - 04468; 93631 - 27202

தலைமை
**ஊ.பி. ராசு**
மாநில அமைப்புச் செயலாளர்

முன்னிலை
**மா. பத்திரன்**
மாவட்ட அமைப்பாளர் கோவை (வ)

தொடக்கி வைப்பவர்
**கருப்பாத்தாள் முருகேசன்**

### நினைவேந்தல் உரை

**கோவை இரவிக்குமார்**
மாநில அமைப்பாளர்

**விநாயக மூர்த்தி**
தலைவர்
மதுரை வீரன் மக்கள் கட்சி

**அரக்கோணம் தயாளன்**
பொதுச் செயலாளர்
அருந்ததியர் விடுதலை முன்னணி

**எஸ்.கே. பழனிச்சாமி**
மாநில அமைப்பாளர் TADF

**வலசை ரவிச்சந்திரன்**
தலைவர் - அருந்ததி மக்கள் கட்சி

**கே.ஜி. ராசமாணிக்கம்**
பொதுச் செயலாளர்
தீண்டாமை ஒழிப்பு முன்னணி, கோவை

**மதுரை ரமேசு**
தலைவர்
அருந்ததியர் சமூகப் பாதுகாப்பு இயக்கம்

**தமிழ்நாடு செல்வம்**
பொதுச் செயலாளர் - த.அ.அ.து. சங்கம்

**க. திலீபன்**
அமைப்பாளர் - சேரிப்புலிகள், மதுரை

**நெல்லை மனோகரன்**
தலைவர்
அருந்ததியர் விடுதலை முன்னேற்ற இயக்கம்

**குருதனராசன்**
மாநிலச் செயலாளர்
தலித் விடுதலை இயக்கம், தாரை

**இரா. முருகவேள்**
வழக்குரைஞர் பி.யு.சி.எல்

**ஆதித்தமிழர் விடுதலை முன்னணி, கோவை மாவட்டம்**


## உன்னதம் - 14

நவம்பர் - டிசம்பர் 2005
விலை: ரூ. 15

தலித்துகளும் நிலமும்
**ரவிக்குமார்**
கற்பும் கலாச்சாரக் காவலும்
**அம்பை**
மீண்டும் புதுவகை எழுத்து
**கவுதம சித்தார்த்தன்**
சாதிவாரியாக வீடு கட்டும் உரிமைகள்
**தொ. ப.**
தொழுகையின் அரசியல்
**சாரு நிவேதிதா**
சொல்லப்படாத தமிழிசை
**நா. மம்மது**
தமிழ் - சிங்கள உறவு ஆவணம்
**மெக்கன்ஸி**
பெண்மொழி விவாதம்
**குட்டி ரேவதி**
குரோட்டோவ்ஸ்கி அரங்கம் -
**சண்முகராஜா**
மதுரை நாடக விழா
**ச. நந்தினி**
**அழகிய பெரியவன், இமயம், கு. உமாதேவி, உமா மகேஸ்வரி, தபசி, இசை, சிவகாமி...**

உன்னதம், ஆலத்தூர் அஞ்சல்,
கவுந்தம்பாடி - 638 455, ஈரோடு மாவட்டம்
• 04256 - 243125 • 9443224945


## மேலவளவு வழக்கு நிதி வேண்டுகோள்

நண்பர்களுக்கு, வணக்கம்!



மேலவளவு வழக்கில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் கட்டத்தில் உள்ளது. கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 6 தலித் மக்கள், எவ்வித தவறான காரியத்திலும் ஈடுபட்டதாக கொலை செய்தவர்கள் தரப்பில்கூட சொல்ல முடியவில்லை. தலித் மக்கள் மீதான கொடூரப்போக்குகள் சாதியக் கட்டுமானத்தால் கடைப்பிடிக்கப்படுகிறது என்ற கசப்பான உண்மையை குறைத்துப் பார்க்க முடியாது. இதன் விளைவே 25.12.1968 இல் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது கீழ்வெண்மணியில் 44 தலித் மக்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து தமிழகத்தில் கொடூரங்கள் நடந்து கொண்டு தானிருக்கின்றன. எனவேதான் பாதுகாப்பு நடவடிக்கையாக வழக்குகளில் தளர்வற்ற கவனம் காட்ட வேண்டி உள்ளது. ஒடுக்கப்பட்டோர் - அடித்தட்டு மக்கள் போன்றோரது விடுதலையை மய்யப்படுத்துகிற சமூக மாற்றத்தையே சமூக அக்கறையாளர்கள் விரும்புகிறார்கள். இதனைச் சாதிக்க குறிப்பாக தலித் மக்களது வழக்குகளையும் சரியாகக் கையாள வேண்டியுள்ளது.

அக்கறையாளர்கள் பணத்தை அஞ்சல் (Money Order) மூலம் அனுப்பலாமா எனத் தொலைபேசியில் கேட்கிறார்கள். ரூ. 100க்கும் குறையாத தொகையை அனுப்ப வாய்ப்புள்ள உணர்வாளர்கள் பண அஞ்சல் மூலம் அனுப்பலாம். அஞ்சல் உறையில் ரூபாய் நோட்டை வைத்து அனுப்பிவிடக்கூடாது. சற்று கூடுதல் தொகையாக அனுப்ப வாய்ப்புள்ளவர்கள் P. RATHINAM என்ற பெயருக்கு வங்கி ட்ராப்ட் எடுத்து அனுப்பலாம்.

சமூக நீதியை செயல்படுத்த உணர்வுப்பூர்வமான பங்கேற்பும், இதனை வலுவாக்கும் ஒருங்கிணைப்பும் சாத்தியமே என்பதை உணர்வாளர்கள் நிரூபிக்கிறார்கள். இந்த ஆதரவு எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறது. உற்சாகம் குறையாமல் ஆதிக்கமில்லா சமுதாயம் கட்டுகிற பணிகளைத் தொடர்ந்து செய்வோம்.

*முகவரி :* இரண்டாம் மாடி, 183 தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001 • பேசி : 94434 58118

- பொ. ரத்தினம்
வழக்கறிஞர் குழுவுக்காக



படிப்பகம்

www.padippakam.com

# தலித் இலக்கியம் :

# அழித்தலில் இருந்து திமிறி எழுதல் வரை




ஆங்கில நூல் முகப்பு

இந்தியாவின் இலக்கிய வரலாறும், கொள்கை - கோட்பாடுகளும் அதன் படிப்பினைகளும், தலித் இலக்கியங்களைப் பற்றிப் பேசும்போது, ஒரு தனித்தன்மையான அணுகுமுறையில் அமைதி காக்கின்றன. இருப்பினும், தலித் இலக்கியப் பண்பாட்டுப் பதிவுகளும் அதன் செயல்பாடுகளும் - இந்திய சமூகம், வரலாறு மற்றும் இலக்கியத் தளத்திலும், எழுத்துகளிலும் ஒரு திறனாய்வு மதிப்பீட்டுடன் குறுக்கீடு செய்துள்ளன. மகாத்மா ஜோதிபா புலேயின் ஆழ்ந்த தாக்கங்களைப் பெற்ற பாபாசாகேப் அம்பேத்கர், இந்திய அடையாளத்தின் ஆதிக்க, சாதிய அமைப்புகள் மீது பல கேள்விகளை எழுப்புகிறார். இந்திய வரலாறு, புராணங்கள், இந்து மதத்தின் புனித நூல்களாகக் கருதப்படுகின்றவை அனைத்தையும் படித்து, ஆய்வுக்குட்படுத்தி - அதன் பிறகுதான் தலித்துகளுக்கு ஒரு தனி அடையாளம் தேவை என விவாதிக்கிறார்.

அம்பேத்கருக்குப் பிறகு எழுச்சி அடைந்த இளம் தலித் தலைமுறையினர், தங்களின் அரசியல் செயல்பாடுகளுக்கும், அமைப்புகளை உருவாக்குவதற்கும், எழுத்துகள் மூலம் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் அம்பேத்கரின் நூல்கள் பெரிதும் உதவின. சரண்குமார் லிம்பாலேவும் அம்பேத்கரின் எழுத்துகளால் எரியூட்டப்பட்டவர். அவரைப் போன்ற பல தலித் எழுத்தாளர்கள், தலித் மக்களின் உண்மையான வாழ்வியலையும் - அவற்றின் அனுபவங்களையும் நூல்களாகப் பதிவு செய்துள்ளனர்...

இந்திய சுதந்திர இயக்கத்தின் செயல்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோதும் அல்லது அதற்குப் பின்பும் அன்றைய நடுத்தர தேசியவாதிகளும், மார்க்சியவாதிகளும், தலித் தலைவர்களை காலனியாதிக்க ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் என்றும், அம்பேத்கரை ஆங்கிலேயரின் கைக்கூலி என்றும் கடுமையாக விமர்சித்தார்கள். 1970 களில் எஸ்.ஜி. சர்தேசாய் என்கிற பொதுவுடைமை இயக்கத் தலைவர், சாதியக் கட்டமைப்பை மீளாய்வு செய்தார். அவ்வாறு மீளாய்வு செய்யும் போது, தலித்துகள் தங்கள் நிலையிலிருந்து மாற்றத்தை நோக்கிச் செல்வதை, சாதி இந்துக்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை மிக நுட்பமாகப் பதிவு செய்தார்.

...தலித்துகளின் விடுதலைக்குப் பல தோழமை அமைப்புகளின் ஆதரவு தேவை என்பதை அம்பேத்கர் உணர்ந்திருந்தார். சுரண்டல் தன்மை கொண்ட, தீண்டத்தக்கத் தொழிலாளர் கூட்டம்தான் தலித்துகளுக்கேற்ற தோழமைக் கூட்டாளிகள் என்பதையும் உணர்ந்திருந்தார். இந்த இருபிரிவுகளுக்கிடையே ஒரு பிணைப்பையும், அமைப்பையும் உருவாக்க முயன்றார். அதே சமயத்தில் நம் மூச்சைத் திணறடிக்கின்ற சாதிய, இந்து சமூக அமைப்புக்கு எதிராக ஆழ்ந்த கசப்புணர்ச்சி கொண்டிருந்தார் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. அவர், சாதி இந்துக்களை மிகக் கடுமையாகச் சாடுகிறார். குறிப்பாக, மக்கள் போராட்டங்களில் சாதி இந்துக்களுக்கு எதிராக தீண்டத்தகாதவர்களை எழுச்சியுறச் செய்கிறார். அதே போன்று, ஒரு தேசியவாதியாகவும் அவர் எழுந்து நிற்கிறார். ஆங்கிலேயரின் கைக்கூலியாகத் தன்னை ஒருபோதும் அவர் அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனாலும் ஆங்கிலேயர்களை ஒரு மூன்றாவது அணியாகவும், சாதி இந்துக்களுக்கு எதிரான ஆதரவாளர்களாகவும் பார்த்தார். சாதி இந்துக்களின் மேலாதிக்கத்துக்கு எதிராக சில உதவிகள் கிடைக்கும் என்றும் நம்பினார். இந்த எண்ணம் அம்பேத்கருக்கு மட்டுமல்ல, அவரைப் போன்ற தீண்டத்தகாத மற்றும் சூத்திரத் தலைவர்களிடமும் இருந்தது...

தொடக்க கால மராட்டிய இலக்கியங்கள், தலித்துகளை அழிக்க முயன்றது. மறைக்க முயன்றது. ஆனால், தற்கால நவீன படைப்பில் தலித்துகளை ஒரு கட்டுக்குள் வைக்க முயல்கிறது. இந்தத் தீண்டத்தகாத 'பிறன்' என்பவர், இப்போது வெளியே, அனைவர் கண்ணுக்கும் தெரிகிறார். ஆனால், இரக்கம் அனுதாபம் என்கிற பின்புலத்தோடுதான் இப்போது அவர் கண்ணுக்குத் தெரிகிறார். வாய்திறந்து பேசும்போது தெரிவதில்லை. லிம்பாலே கூறுவதுபோல, அவர்கள் தன் அடையாளம் பெற்ற மக்களாகக் காட்டப்படுவதில்லை. அவர்களை இரக்கத்திற்குரியவர்களாக, பரிதாபத்திற்குரியவர்களாகக் காட்டுவதுதான் தொடர்கிறது...

**❝ சாதி அமைப்புக்கு எதிராக சவால்விட்டுச் செயல்படுவதாலும், இதனைத் தீவிரவாத இலக்கியங்கள் என்றும் சொல்லலாம். அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட இலக்கியங்கள். இந்தத் தீவிரவாதத்தின் மூலாம்பர ஊற்றாக பாபாசாகேப் அம்பேத்கரின் சிந்தனைகளும், செயல்பாடுகளும் அமைந்துள்ளன. ❞**

இந்து சமூகம் எப்படி அடித்தட்டு தலித்தை உருவாக்கி, அவரை 'பிறன்' என்பவராக ஆக்கியுள்ளது என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். தலித்தின் தன்மைக்கும், தலித்தின் நிலைக்கும் இணையான தன்மையை, நிலையை வேறெங்கும் காண முடியாது. பல ஒற்றுமைகள் இருந்தாலும் இணை என்பது எங்குமில்லை. தலித் உணர்வு நிலையை லிம்பாலே ஒரு அடிமையின் நிலையோடு ஒப்பிடுகிறார். மற்ற தலித் எழுத்தாளர்கள் தலித் உணர்வுநிலையை ஆப்பிரிக்க - அமெரிக்கர்களின் நிலையோடும், பெண்களின் நிலையோடும் ஒப்பிடுகின்றனர். சர்தேசாய் போன்ற பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள், வர்க்கப் போராட்டத்திற்கும் சாதிப் போராட்டத்திற்கும் இடையே தொடர்பு வேண்டும் என்கின்றனர். தலித் தலைவர்கள் இதனை மறுத்து, வெறுத்தனர். இதனால் கண்டனத்திற்குள்ளாயினர். இக்கண்டனத்திற்கு எதிர்வினையாக லிம்பாலே, தலித் என்பதற்கு பொருள் விளக்கம் கொடுக்கிறார். இவ்விளக்கம், இந்தியாவில் ஒடுக்கப்பட்ட, உடைமை - உரிமைகள் பறிக்கப்பட்ட எல்லோரையும் உள்ளடக்கிய ஒரு பரந்த பார்வை கொண்ட விளக்கமாகும்...

தலித் இலக்கியங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சவால் என்னவென்றால், தலித் தன்மையின் தனித்துவமான அனுபவங்களை அச்சு மாறாமல் அப்படியே பதிவு செய்வதுதான். இது ஒரு வகையில் முதல்படியான ஊமை இலக்கியங்களை வெளிக்கொணர்ந்துள்ளது. தலித் இலக்கியங்களின் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பகுதியானது, ஒவ்வொரு தலித்தைப் பற்றிய வாழ்க்கைப் பதிவாக இருக்கின்றது. மற்றவைகளைவிட, தலித்துகளின் தன்வரலாற்று அனுபவங்களே பெருமளவு இடத்தைப் பூர்த்தி செய்து நிற்கின்றது. கற்பனை சார்ந்த எழுத்துகளில்கூட, தலித்துகளின் வாழ்க்கை வரலாறும், தன் வரலாறும்தான் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தானாக எடுத்து இயம்புகின்ற முறையானது, தலித் அனுபவங்களை மாறாமல் எடுத்துக்கூறும் ஒரு முயற்சியாகும்.

தலித்துகளின் வாழ்க்கை, கவிதை மற்றும் கற்பனைப் படைப்புகளில் வெளிப்படும் அனுபவங்கள் எதையும் மறைப்பதில்லை. கற்பனையைப் புனைந்தும் படைப்பதில்லை. இப்படைப்புகளில் உயிர் வாழ்கின்ற மக்கள் - கருணையை, இரக்கத்தைத் தேடி நிற்கும் பாத்திரங்கள் அல்ல. இவர்களின் வாழ்வு பரிதாபமானது. அவமானத்தைத் தரக்கூடியது. தாங்கள் தீட்டானவர்கள், அசுத்தமானவர்கள் என்பதை நாள்தோறும் நினைவுபடுத்தக்கூடியது. சட்டங்களை மீறி குற்றங்களைச் சுமக்கும் தன்மை கொண்டது. சாதி இந்துக்களின் மேலாதிக்கப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், இவர்களின் வாழ்விலும் உள்வாங்கிக் கொள்ளப்பட்டுள்ளன. தலித் இலக்கியங்களில் இவை எல்லாம் கற்பனைகளால் அழகுபடுத்தப்படாமலும், நியாயப்படுத்தப்படாமலும் அப்படியே பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற பதிவுகளின் மூலம் தலித்துகள், தங்களின் கொடுமைகளை எடுத்துக்கூறி, தங்களைப் பற்றித் தாங்களே இரக்கப்பட்டுக் கொள்கிறார்கள் என்பதை வெளிக்காட்டவில்லை. இயங்க முடியாத அவல நிலையை எடுத்துக்கூறி வருத்தப்படவில்லை. தலித்துகளிடம் இதுபோன்ற காரணங்கள் இருப்பதால், சாதி இந்துக்களின் இலக்கியங்கள் இதைப் பதிவு செய்யாமல் தங்கள் பார்வையைப் பதிவு செய்துள்ளன.

**❝ தலித் இலக்கியங்கள் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது என்கிறார் லிம்பாலே. இந்தக் குறிக்கோள்கள் புரட்சிகரமானது. மாற்றங்களை உருவாக்கக்கூடியது. விடுதலை கொடுப்பது. ❞**

இவ்விலக்கியங்களில் நிறைந்து காணப்படுகின்ற தலித்துகள் நற்பண்புகளின் உச்சாணிக் குன்றுகளல்ல. ஆனால், அவர்களிடம் உயிர், வாழ்க்கை, போராட்டம், வெற்றி ஆகியவை உள்ளன. அவர்களிடம் இருக்கின்ற தலித் தன்மை மறைவதில்லை. இந்தச் சிக்கல் நிறைந்த பதிவுகள்தான் தலித்துகளின் உண்மையான அனுபவமாக இருக்கின்றது. தலித் இலக்கியங்கள் வரலாறு இல்லாதவை அல்ல. அதற்கென வரலாறு உண்டு. காலம், இடம், சூழல் ஆகியவற்றுக்கு உட்பட்டது. நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப் போல, தலித் அனுபவங்களின் வரலாற்றுப் படிமமும், தலித் எழுத்துப் பதிவுகளும் பிற இலக்கியங்களைச் சுட்டுவதிலிருந்து வெளிப்படுகின்றன. தலித்துகள் தங்கள் வரலாற்றில் பயன்படுத்துகின்ற புராண, இதிகாச கதாபாத்திரங்களை சாதி இந்துக்களின் இலக்கியச் சிறையிலிருந்தும், பேய்த்தனமான உடும்புப் பிடியிலிருந்தும் தங்களை விடுவித்துக் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இணைக்கப் பயன்படுத்துகின்றனர்.



சரண்குமார் லிம்பாலே

தலித் இலக்கியங்கள் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது என்கிறார் லிம்பாலே. இந்தக் குறிக்கோள்கள் புரட்சிகரமானது. மாற்றங்களை உருவாக்கக்கூடியது. விடுதலை கொடுப்பது என வர்ணிக்கின்றார். குறிப்பாக, தலித் இலக்கியம் பார்ப்பனிய இலக்கியத்தை எவ்வாறு தடை செய்கின்றது என்பதை நிறுவுகின்றார். அவ்வாறு நிறுவுவதற்கு சில காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார். பார்ப்பனிய இலக்கியம் மிகத் தொன்மை வாய்ந்த இந்திய அழகியல் தத்துவங்களைப் பின்பற்றவில்லை என்கிறார். கலை இலக்கியம் என்பது இரக்கம், அன்பு, பயம், கோபம் ஆகிய உணர்வுகளைத் தூண்ட வேண்டும். ஆனால், தலித் இலக்கியம் கடந்த காலங்களில் பக்தி இலக்கியங்களின் மறு உலக சிந்தனைகள், நடுத்தர சிற்றுடைமை வர்க்கத்தினரின் ஆசைகள், ஆகியவற்றில் பங்கேற்பதில்லை. கடைசியாக, தலித் இலக்கியங்கள் இன்ப உணர்ச்சிகளையோ, மென்மை உணர்வுகளையோ, அல்லது தன்னைத்தானே வெறுத்து இரக்கம் கொள்கிற உணர்வுகளையோ கொடுப்பதில்லை...

தலித் இலக்கியங்கள் புரட்சிகரமானது. மாற்றம் உண்டாக்கக் கூடியது என்கிற நிலையை அடைகிறது என்றால், இதனைப் படைத்த எல்லா தலித் எழுத்தாளர்களும் முற்போக்குச் சிந்தனையாளர்களோ, சமத்துவ சமூகப் பார்வை உடையவர்களோ, அல்லது மார்க்சியவாதிகள் என்பதாலோ அல்ல. இந்த இலக்கியங்கள் எல்லாம் தலித்துகளின் அவலநிலையை மாற்ற உதவுவதாலும், சாதி அமைப்புக்கு எதிராக சவால்விட்டுச் செயல்படுவதாலும், இதனைத் தீவிரவாத இலக்கியங்கள் என்றும் சொல்லலாம். அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட இலக்கியங்கள். இந்த தீவிரவாதத்தின் மூலாம்பர ஊற்றாக பாபாசாகேப் அம்பேத்கரின் சிந்தனைகளும், செயல்பாடுகளும் அமைந்துள்ளன.

தலித்துகளின் உண்மை நிகழ்வுகளை, அன்றாட வாழ்வியலை அப்படியே, அப்பட்டமாகப் பதிவு செய்வதால், தலித் இலக்கியம் தீவிரச் செயல்பாடு கொண்டிருக்கின்றது என்று லிம்பாலே கூறுகிறார். இவ்வாறு படைப்பதன் மூலம் தீண்டத்தகாத 'பிறன்' என்பவர், சாதி அமைப்பை அத்துமீறி உரக்கக் குரல் எழுப்புகிறார். அவ்வாறு குரல் எழுப்புவதன் மூலம் ஆதிக்கச் சாதியினரின் தூய்மையையும், சுத்தத்தையும் அழிக்கிறார். இனி தலித்துகளை கண்ணுக்குத் தெரியாமல் எங்கேயும் மறைக்க முடியாது என்கிற கருத்தானது, ஏற்கனவே தீட்டுப்படாமல், அசுத்தப்படாமல் இருப்பதாக சொல்லப்படுகின்ற சாதி இந்துக்களின் அனைத்து இடங்களையும் தீட்டுப்பட வைத்தது. அந்த வெற்றிடங்களில் தன் மக்களைக் கொண்டு நிரப்பியது. ஆதிக்கச் சாதியினரின் இடங்களில் உள்ளவர்களின் உண்மை நிலையை நேருக்கு நேர் சந்திக்க வைத்தது. இது ஒருவிதமான எதிர்க் கூட்டமைப்புச் செயல்பாடாகும்.

செயற்கையாக வடிவமைக்கப்பட்ட வரலாற்றுச் செய்முறைகளையும், சாதியச் சமூக அமைப்பை சட்ட அடிப்படையில் நியாயப்படுத்துகின்ற முயற்சிகளையும் தலித் எழுத்தாளர்களின் அனுபவங்களால் படைக்கப்படுகின்ற ஒரு புரட்சிகர சமூகத்தின் சாயல் இது. இதன் மறுபக்கம் முற்றிலும் மாறுபட்டது. மிகவும் முக்கியமானது. அதாவது, தலித்துகளின் முழுமையான மனிதத் தன்மையை நிலைநாட்டுகின்ற செயலாகும். இந்த இலக்கியங்கள் தலித்துகளின் தன் அடையாளம், தனக்குரியத் தன்மை, வரலாறு ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. இவர்கள் செயல்வீரர்களோ, நடிகர்களோ அல்ல. தாராள சீர்திருத்த எண்ணம் கொண்ட ஆதிக்கச் சாதி எழுத்தாளர்கள் படைத்த முகப்போலிகள் அல்ல. ஆதிக்கச் சமூகத்தின் உதவியை நாடி நிற்கின்ற, அவர்களின் இரக்கத்தைச் சார்ந்து நிற்கின்ற கோழைகள் அல்ல. தனக்கென வரலாறு இல்லாத அனாதைகள் அல்ல.

அரக்கர்களாக சித்திரிக்கப்பட்ட ராவணனோ, பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்ட அங்குலி மாலாவோ, கட்டைவிரல் வெட்டப்பட்ட ஏகலைவனோ, சூர்ப்பனகையோ அல்ல. தங்கள் வரலாற்றைத்



படிப்பகம்

www.padippakam.com

தாங்களே கட்டமைக்கின்ற வரலாற்றின் நாயகர்கள். தாங்கள் மீட்டுருவாக்குகின்ற, கட்டமைக்கின்ற வரலாற்றில் இருந்து நம்பிக்கையையும், மானுடத்தை அழுத்திக் கூறும் உரிமையையும் பெறுகிறார்கள். இந்த அணுகுமுறைகளில் பார்க்கும்போது, தலித் இலக்கியத்தின் மய்யக்கரு தென்படுகின்றது...

தலித் இலக்கியங்களைப் பற்றி இடதுசாரி இலக்கிய மதிப்பீட்டாளர்களும், மிகவும் முற்போக்கான இடதுசாரிகளும்கூட எதுவும் பேசுவதில்லை. பேசாமல் அமைதியாக இருந்தே சாதிக்கிறார்கள். பெரும்பான்மையான தலித் இலக்கியங்கள் ஆங்கில மொழியில் கிடைப்பதில்லை. பல தலித் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை அவரவர் தாய்மொழியில் எழுதியிருக்கிறார்கள். தற்போதுதான் சில ஆங்கில மொழிபெயர்ப்புகளில் தலித் இலக்கியங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது ஒருபுறம் இருந்தாலும் இன்னொரு முக்கியக் காரணமும் உண்டு.

இந்த படைப்புகள் அனைத்தும் இரட்டைப் பிரிவுக்குள் அடங்குவதில்லை. அது மட்டுமல்ல, பிரச்சனைகளை சிக்கலுக்குள்ளாக்குகின்றன. ஓர் அடிமைப்படுத்தப்பட்ட சமூகம், சுதந்திரத்துக்கு முன்பு ஒரே நேரத்தில் எப்படி அடிமைப்படுத்துகின்ற சமூகமாக இருக்க முடியும்? அது எப்படி சுதந்திரத்திற்குப் பின்னும் தொடர்ந்து இருக்க முடியும்? கடைசியாக, இதில் இன்னொரு சிக்கலும் உண்டு.

கருத்தியல் அடிப்படையில் தலித் எழுத்தாளர்களை ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள் அடக்கமுடியாது. அவர்களின் படைப்புகளில் தலித் என்பவர் மய்யக் கருவாகச் சுழலுவதால், தலித் எதிர்நோக்குதலைப் பலவீனப்படுத்துகிற எல்லா முயற்சிகளையும் மிக வன்மையாக எதிர்க்கிறார்கள். தலித் எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும்கூட அதன் மய்யமாக இருக்கிறார்கள்.

தலித் இலக்கியங்களைத் தள்ளி வைப்பதன் மூலம் தலித் அல்லாதவர்களுக்குத் தேவையான சித்தாந்தங்களை உருவாக்கவும், காலனியாதிக்கத்துக்குப் பிந்தைய காலத்தின் அடிப்படையில் கருத்துகளைத் தோற்றுவிக்கவும் காரணிகள் உருவாகலாம். ஆனால், இந்தத் தள்ளிவைப்பு அல்லது புறக்கணிப்பு என்பது நீடிக்கும் வரை - அவர்கள் உருவாக்குகின்ற சித்தாந்தங்களும், கருத்துகளும் முழுமை பெறாத ஒரு அரைகுறைதான். இந்த இந்தியாவைப் போல!

சரண்குமார் லிம்பாலே, மகாராட்டிராவின் புகழ்பெற்ற தலித் எழுத்தாளர். அவருடைய 23 ஆவது நூல் Towards an Aesthetic of Dalit Literature. இந்நூலை, தமிழில் 'தலித் இலக்கியம் : விடுதலையின் திசைகள்' என்ற தலைப்பில் 'புத்தா வெளியீட்டகம்' விரைவில் வெளியிட இருக்கிறது. இந்நூலை அறிமுகப்படுத்தி கனடாவின் 'யார்க் பல்கலை' மானுடவியல் பேராசிரியர் அலோக் முகர்ஜி எழுதியவற்றில் இருந்து சில பகுதிகளை மட்டும் இங்கு வெளியிட்டுள்ளோம்.


சுப. வீரபாண்டியன் எழுதிய

**பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்**

இரண்டாம் பதிப்பு

**வெளிவந்து விட்டது**

⌘ தந்தை பெரியார் தன் இறுதி நாட்களில் தமிழ் பயிற்று மொழி ஆவதற்கு ஆதரவு தெரிவித்த அறிக்கை

⌘ மக்கள் கவிஞர் இன்குலாப்பின் முன்னுரை முதலான சில புதிய சேர்க்கைகளுடனும் கூடுதல் பக்கங்களுடனும்...

மக்கள் பதிப்பு : ரூ.100/-

நூலகப் பதிப்பு : ரூ.140/-

தமிழ்முழக்கம்

345, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 6
• 2432 3546 • 94442 82430





1997 இல் வெளிவந்த முதல் இதழ்

## 10 ஆம் ஆண்டில் 'தலித் முரசு'

பிப்ரவரி 2006 இல் 'தலித் முரசு' 10 ஆம் ஆண்டில் நுழைகிறது. ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் சிறப்பிதழைவிட, கூடுதல் பக்கங்களுடனும் / செய்திகளுடனும் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். வாசகர்கள் / ஆர்வலர்கள் / எழுத்தாளர்கள் அனைவரின் - அனைத்து வகை பங்களிப்பையும் எதிர்நோக்குகிறோம்.

## இறந்தவர்களைப் பற்றி சரியாக எழுத வேண்டும்

*"அக்டோபர் 2 மாலை உங்களை மருத்துவமனையில் பார்த்தேன். எல்லோரும் போன பிறகு உங்களுடன் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்... நீங்கள் நடக்க சிரமப்பட்டீர்களே தவிரப் பேச்சில் மிகுந்த தெளிவு இருந்தது. கடந்த ஒரு மாதத்துக்குள் நீங்கள் எழுதியிருந்த (செப். 7) 'ஜகதி' கதையைப் பற்றி மீண்டும் பேசினோம். 'ஏற்கனவே திருவனந்தபுரம் விமான நிலையத்தில் போலிஸ் எனக்காகக் காத்திருக்கிறார்கள்!' என்று சிரித்தீர்கள். நான் சொன்னேன், 'நல்ல வேளை 'ஜகதி' தமிழ் நாட்டில் வெளியாகவில்லை. இல்லையென்றால் இதிலிருந்தும் ஏதாவது பூதம் கிளம்பியிருக்கும்' என்று. 'நான் தமிழ் நாடு பக்கம் போகாமல் இருப்பது நல்லதுதான்' என்று சிரித்தீர்கள்."*

- 'காலச்சுவடு', நவம்பர் 2005

எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் ('சுரா') சாவு, இப்பொழுது கொண்டாடப்படுகிறது. நெகிழ்வு, கண்ணீர், நினைவுகள், அஞ்சலி, இரங்கல், எங்கும் வாசிப்பின் சுவடற்ற புகைப்படங்கள் - இழுத்து நிறுத்தப்படும் போலி பிம்பம்.

இறந்தவர்களைப் பற்றி தவறாக எழுதக் கூடாது என்றொரு கருத்து உண்டு. ஆனால்...

தன்னுடைய ஜாதிய மனப்பான்மையை, பார்ப்பனியத்தை, சுயநலத்தை, சக மனிதர்களை எள்ளலுடன் பார்த்ததை, கலை, இலக்கியம் என்ற முகமூடியில் மறைத்ததை -

எந்தவொரு உறவையும் பயன்பாடு, லாபம் ஆகியவற்றின் அடிப்படையில் வஞ்சகத்துடனும், தந்திரத்துடனும் அணுகியதை -

சந்தையில் தன் பொருள், பெயர் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சுயவிளம்பரம் என்பதைப் பின்தொடர்ந்து அலைந்ததை -

உழைப்பையும், சேவையையும் சார்ந்து நின்ற சிறுபத்திரிகை இலக்கியத்தை முழுமையான வியாபாரமாக மாற்றிக் காட்டியதை -

அரசியல், திரைப்படத்திற்கு அடுத்தபடியாக திறமை என்பதை முழுமையாகப் புறக்கணிக்கும் விதத்தில் இலக்கியத்தில், அதன் வியாபாரத்தில் வாரிசை, குடும்பத்தை, ஜாதியை நிலைநிறுத்தியதை -

90களில் உரிமைகளை நோக்கிய போராட்டத்தை உள்ளடக்கி மேலெழுந்து வந்த தலித் இலக்கியத்தை, அதன் உறுப்பினர்களை தன் அரசியலால், வியாபார நோக்கத்தால் பிளவுபடுத்தியதை -

தேடல், சமூக விமர்சனம் என்ற முகமூடியுடன் சாதிய மனப்போக்கை, நடுத்தர வர்க்க நலத்தை, கையாலாகததனத்தை நளினமான நடையில் இலக்கியமாக முன்வைத்ததை -

இறுதிவரை, தனது குற்றத்தை, தவறை நேர்மையுடன் ஒப்புக் கொள்ளாததை -

*சரியாக எழுதித்தானே ஆகவேண்டும்.*

'சுரா' இறந்திருக்கலாம். 'சுரா'வும் அவருடைய போலிகளும் ஏற்படுத்திய, ஏற்படுத்தும் சுற்றுப்புறச் சூழல் கேடு, இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

# இருப்பிடங்களைப் பறிக்கும் இந்துக்கள்

■ ரா. முருகப்பன்

ஓமந்தூர் கிராமம் - திண்டிவனத்தில் இருந்து புதுவை செல்லும் திசையில், ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இக்கிராமத்தில் 60க்கும் மேற்பட்ட இருளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் தினசரி கூலி வேலைக்குச் சென்றுதான் வாழ்க்கையை நடத்துகின்றனர். இதே கிராமத்தில் உள்ள வன்னியர் இனத்தைச் சேர்ந்த மண்ணாங்கட்டியும், இடையர் இனத்தைச்சேர்ந்த குமாரும், அவ்வப்போது 50, 100 என இருளர்களுக்கு முன் பணம் கொடுத்து அவர்களைக் கடனாளியாக்கி, அடிமைகளைப் போன்று வைத்துள்ளனர்.

குமாரிடம் பணம் பெற்றவர்கள், மண்ணாங்கட்டியிடமோ, மண்ணாங்கட்டியிடம் வேலை செய்பவர்கள் குமாரிடமோ வேலைக்குப் போக முடியாது. மீறிப் போனால் அடி, உதை மட்டுமில்லாமல் தொகுப்பு வீடுகளையும் இழுத்துப் பூட்டி விடுவார்கள். தென் சுருளூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்கிற இருளர், ஓமந்தூர் கிராமத்தில் தங்கி, மண்ணாங்கட்டியிடம் வேலை செய்துள்ளார். அவரிடம் வேலை இல்லாத ஒரு நாள் குமாரிடம் வேலைக்குச் சென்றுள்ளார். இதனையறிந்த மண்ணாங்கட்டி, ஆறுமுகம் வீட்டிற்குச் சென்று, தனக்கு வர வேண்டிய ரூபாயைக் கேட்டு, சவுக்குக் கட்டையால் ஆறுமுகத்தை அடித்துள்ளார். அதைத் தடுத்த அவர் தம்பி பாலுவையும் அடித்துள்ளார். இது குறித்து, சம்பவம் நடந்த 19.9.2005 அன்றே கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோல, மல்லிகா - தேவராஜ் குடும்பத்தினருக்கு குமார் அவ்வப்போது ரூ. 100, 200 என முன் பணமாகத் தந்து ரூ. 4000 வரை கொடுத்துள்ளார். இத்தொகையை உடனடியாகக் கொடுக்கும்படி கேட்டு, மிரட்டி, மல்லிகா குடும்பத்தினரை வெளியேற்றி தொகுப்பு வீட்டைப் பூட்டி விட்டார். பின்பு, வீட்டை எழுதிக் கொடுக்க வேண்டும் அல்லது பணத்திற்கு 10 வட்டி போட்டு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆறு மாதம் கழித்து வீட்டைத் திறந்து விட்டுள்ளார். தொகுப்பு வீடு ஒன்றில் 3 ஆண், 3 பெண் குழந்தைகளுடன் குடியிருந்த குப்பன் என்ற இருளரை, குடும்பத்துடன் அடித்துத் துரத்திவிட்டு, அவருடைய தொகுப்பு வீட்டில் இன்றுவரை குமார் குடியிருந்து வருகிறார்.

மல்லிகாவின் பெரியப்பா மகள் பவுனு, அவர் கணவர் காத்தவராயன். ஆகியோர் மல்லிகாவின் வீட்டிலேயே குடியிருந்து வருகிறார்கள். காத்தவராயன் குமாரிடம் வேலை பார்த்த வகையில் ரூ. 750 கடன் பட்டுள்ளார். ஒரு நாள் காத்தவராயன் மண்ணாங்கட்டியிடம் வேலைக்குச் சென்றுள்ளார். இதனையறிந்த குமார், அவர் மனைவி இந்திரா, மகன்கள் சுரேஷ், பிரகாஷ் ஆகியோர் மல்லிகா வீட்டிற்குச் சென்று, மல்லிகா, பவுனு, காத்தவராயன் ஆகியோரிடம் தகராறு செய்துள்ளனர். பவுனுவை அடித்துள்ளார்கள். மல்லிகா தரவேண்டிய ரூ. 4000 பணத்தையும் சேர்த்து ரூ. 10 வட்டி போட்டு உடனே கொடுங்கள் எனக் கேட்டு, மல்லிகாவின் வீட்டை மீண்டும் பூட்டி உள்ளார்கள். இச்சம்பவம் நடந்த 1.10.2005 அன்று காவல் நிலையத்தில் புகார் தந்தும் நடவடிக்கை இல்லை.

இந்நிலையில், குமார், மண்ணாங்கட்டி மீது நடவடிக்கை எடுத்து, இருளர்களின் தொகுப்பு வீடுகளை சாதி இந்துக்களிடமிருந்து மீட்டுத் தரக்கோரி, பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் 3.10.2005 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதன் பிறகு குமார், மண்ணாங்கட்டி இருவரும் கைது செய்யப்பட்டு, மல்லிகா வீட்டை போலிசார் திறந்து விட்டனர். மொத்தம் உள்ள 24 தொகுப்பு வீடுகளில், 12 வீடுகள் குமார் உள்ளிட்ட சாதி இந்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதில் குமார் தன் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளை,



பூட்டிய தொகுப்பு வீட்டின் முன்பு பவுனு

அதே ஊரைச் சேர்ந்த சாதி இந்துக்களுக்கு விற்றுள்ளார். கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்துள்ள மண்ணாங்கட்டி, குமார் இருவரும் மீண்டும் இருளர் குடியிருப்பிலேயே இருந்து வருகிறார்கள்.

தலித் மக்களுக்கு அளிக்கப்பட்ட வீடு, மனைகளை - அவர்கள் விற்கவும் முடியாது; யாரும் வாங்கவும் முடியாது. பழங்குடியினர் மற்றும் தலித் நிலவுரிமை கோரிக்கை எழுந்து வரும் இந்நேரத்தில் - அரசு அளித்த தொகுப்பு வீடு, மனைகள் இருக்குமா? சாதி இந்துக்களால் அது பறிபோகுமா? ●



படிப்பகம்

www.padippakam.com



# மந்தை ஜனநாயகம்

ஜனநாயக இருள் - 2

■ யாக்கன்

வியன்னாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற அய்க்கிய நாடுகள் அவையின் பொதுச் சபையில், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவிவரும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவும், உலக நாடுகளில் ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் - 'அய்க்கிய நாடுகள் - ஜனநாயக நிதியம் என்ற அமைப்பை அய்.நா. உருவாக்க வேண்டும்' என்றும், அந்த அமைப்பை உருவாக்க, உலக நாடுகள் தாராளமாக நிதியுதவியும் ஆலோசனையும் வழங்க வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி உருவாக்கப்பட்ட 'அய்க்கிய நாடுகள் - ஜனநாயக நிதிய'த்தின் தொடக்க விழா, கடந்த செப்டம்பர் 15 அன்று, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடந்தது. அதில் கலந்து கொண்டு பேசிய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், இந்திய ஜனநாயகத்தை வானளாவப் புகழ்ந்தார். ''எங்கள் ஜனநாயகம் வயது வந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குரிமை அளித்து, அவர்களை மதிப்பிற்குரியவர்களாக்குகிறது. தனித்துவமான நீதித்துறையும், சுதந்திரமான ஊடகங்களும், தன்னதிகாரம் கொண்ட தேர்தல் முறையும், வலுவான அரசியல் சட்டமும், எங்கள் ஜனநாயகத்திடம் இருக்கின்றன. ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக வளமான அனுபவமும் - நிறுவனக் கட்டமைப்புகளும் கொண்டுள்ள நாங்கள், எப்போது வேண்டுமானாலும் உலக நாடுகளுக்குப் பயிற்சி அளிக்கத் தயாராக இருக்கிறோம்'' என்று பெருமை பொங்க பேசிய பிரதமர், கையோடு அய்க்கிய நாடுகள் - ஜனநாயக நிதியத்திற்கு, 45 கோடி ரூபாய் நிதி உதவி அளிப்பதாகவும் உறுதியளித்துவிட்டு நாடு திரும்பினார்.

அதே அய்க்கிய நாடுகள் அவையில் ஓராண்டிற்கு முன்பு பேசிய வாஜ்பாய், 'உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடாகத் திகழும் இந்தியாவிற்கு அய்.நா. அவையில் நிரந்தர இடம் கொடுக்கப்பட வேண்டும். அது, உலக நாடுகள் இந்திய ஜனநாயகத்திற்குச் செய்யும் மரியாதையாகும்' என்றார். குடியரசுத் தலைவர் அப்துல் கலாமும் உலக நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்யும்போது, தான் செல்லுமிடமெல்லாம், 'ஜனநாயகத்திற்கு இந்தியாதான் வழிகாட்டி' என்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

இது போன்ற நடவடிக்கைகளின் மூலம் உலக அரங்கில் இந்தியாவை 'ஜனநாயக தாதா'வாகச் சித்தரிக்க இந்திய ஆட்சியாளர்கள் முயன்று வருகிறார்கள். அதன் மூலம் இந்தியா உலகின் அதிகாரப் பூர்வ வல்லரசாக மாற வேண்டும். அய்.நா. அவையில் 'தடுத்து நிறுத்தும்' அதிகாரத்துடன் கூடிய நிரந்தர இடம் வேண்டும் என்பது தான் அவர்களின் ஆசை. அந்த இடம் கிடைக்குமேயானால், தெற்காசியப் பகுதிகளில் ஏகோபித்த, எதேச்சதிகார சக்தியாக விளங்க முடியும். அதே நேரத்தில் ஆசியா முழுவதிலும் மெல்ல மெல்ல வலுவாகக் காலூன்றி வரும் அமெரிக்காவுடன் ஆதிக்கப் பேரம் பேச முடியும் என்று ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள். அதற்காகத்தான் 40 கோடி இந்தியர்கள் படிப்பறிவற்றவர்களாய் இருந்தாலும்கூட, 26 கோடி இந்தியர்கள் ஒரு வேளை உணவுடன் காலம் கழித்தாலும்கூட, வெட்கமில்லாமல் தங்களை 'வல்லரசு' என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறார்கள்.

**“ மக்களை ஏமாளிகளாக எண்ணி, ஆணவத்துடன் நடந்து கொள்ளும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் குவிந்து கிடக்கும் இந்தியாவில், இனி மக்கள் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ள வேறுவழிகளைத் தேட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ”**

இந்திய ஆட்சியாளர்கள் உலக நாடுகளிடம் சொல்லிக் கொண்டிருப்பதைப் போல், இந்திய ஜனநாயகம் உலகத்திற்கே வழிகாட்டக் கூடியதாக இருக்கிறதா? உண்மையில் அது முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் அழிவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்திய ஆட்சியாளர்களும் பகட்டு வாத மேல்தட்டு ஊடகங்களும் அதை மூடிமறைக்க முயல்கின்றன. ஆனாலும், நிலைமை இந்திய ஆட்சியாளர்களின் கை மீறிப் போய்க் கொண்டிருக்கிறது. கடந்த செப்டம்பர் மாதம் டெல்லியில் நடைபெற்ற இந்தியாவின் அனைத்து மாவட்ட



படிப்பகம்

www.padippakam.com

காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில்பேசிய இந்தியப் பிரதமர்மன் மோகன்சிங், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். அந்த அச்சுறுத்தலை உருவாக்கியிருப்பவர்கள் வேறு எந்த வெளிநாட்டு சக்தியுமல்ல; வெளிநாட்டு உதவியுடன்இயங்கும் சக்திகளும் அல்ல.

உணவு, குடிநீர், இருப்பிடம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக, கடந்த அய்ம்பதாண்டு களுக்கும் மேலாக ஊழல் மலிந்த இந்திய ஆட்சியாளர்களிடமும், குரூரமான அதி கார வர்க்கத்திடமும் கெஞ்சிக் கொண்டி ருந்த உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களே, இந்திய ஆட்சியாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறார்கள். வங்கம் தொடங்கி தமிழகம் வரை 12 மாநிலங்களில் 112 மாவட்டங்களில் நக் சல் போராளிகள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவில் மட்டும் 8 மாவட்டங்கள் நக்சல் போராளி களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன என் பதை, நாட்டின் பிரதமரே பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். 'நக்சல்களை' ஒடுக்க, அனைத்து மாநில காவல் துறையினரை யும் ஒருங்கிணைத்து, துணைநிலை ராணுவத்திற்கு இணையான ராணுவ அமைப்பை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

புதிதாக ஒரு ராணுவ அமைப்பையே உருவாக்க வேண்டிய அளவிற்கு நக்சல் போராளிகள், ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியைத் தந்து கொண்டிருக்கிறார் கள். மக்களாட்சி என்ற பெயரில் நடந்து கொண்டிருக்கும் ஊழலும் சீர்கேடுகளும் மலிந்துவிட்ட ஆட்சி நிர்வாகத்தை எதிர்த்து நக்சல்கள் ஆயுதமேந்திப் போராடுகிறார்கள். மக்களை ஏமாளிகளாக எண்ணி, ஆணவத் துடன் நடந்து கொள்ளும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் குவிந்து கிடக்கும் இந்தியா வில், இனி மக்கள் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ள வேறுவழிகளைத் தேட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

கடந்த அய்ம்பதாண்டு காலமாக விடியலைக் கொண்டு வரும் என்று ஏழை எளிய பாமர மக்களால் எதிர்பார்க்கப்பட்ட இந்திய ஜனநாயகம், அரசமைப்புச் சட்டம் மக்களுக்குக் கொடுத்த அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரதவறிவிட்டது. சாதிய ஒடுக்குமுறைகளிலும் தீண்டாமைக் கொடுமையிலும் வறுமையிலும் அறியா மையிலும் தவித்துக் கொண்டிருக்கும் இருபது கோடி தாழ்த்தப்பட்ட - பழங் குடியின மக்களை தீண்டாமையிலிருந்தும் இந்திய ஜனநாயகத்தால் இப்போது வரை விடுவிக்க முடியவில்லை. நாடு முழுவ திலும் இரண்டு கோடிகளுக்கும் மேலாக சிறார்கள் கல்வியை இழந்து, எதிர்காலத்தை இழந்து கொத்தடிமைகளாகவும் கூலிகளா கவும் அழிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் களை மீட்க இந்த ஜனநாயகத்தால் முடி யுமா? இந்திய ஜனநாயகம் வெட்கித் தலை குனிய வேண்டும். நாடு முழுவதிலும் 10 லட்சத்திற்கும் அதிகமான இந்திய மக்கள், மனிதக் கழிவை கையால் அள்ளி முகத் தில் வழிய தலையில் சுமந்து கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட மக்களாட்சியை நடத்திக் கொண்டிருக்கும் இந்திய ஆட்சி யாளர்கள்தான் - உலகத்திற்கு ஜனநாயகம் பற்றி வகுப்பெடுக்கப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

நாட்டின் விவசாயம் ஆட்சியாளர் களின் அக்கறையின்மையால் பாழடைந்து கொண்டிருக்கிறது. பன்னாட்டு விவசாய நச்சுக்கள் இந்திய வேளாண்மையின் தனித் தன்மையை அழித்துவிட்டிருப்பதால், 45 கோடி விவசாயக் கூலிகள் பட்டினி கிடக் கிறார்கள். பாதுகாப்பும் உத்திரவாதமும் இல்லாத முறைசாராத தொழில்களை நம்பி வாழும் 70 கோடி இந்தியர்களின் உழைப்பு, ஆதிக்கச் சாதி ஆண்டைகளாலும், கள்ள முதலாளிகளாலும் சுரண்டப்பட்டு வருகிறது. உலகமயமாக்கலினாலும், தனியார்மய, தாராளமயமாக்கலினாலும் இந்தியப் பொருளாதார இறையாண்மை - பன்னாட்டுப் பெருமுதலாளியத்தால் சூறை யாடப்பட்டு வருகிறது. கட்டுப்பாடற்ற, கண்காணிப்பற்ற சந்தையாகவும், உலகப் பெரு முதலாளியத்தின் மலிவு விலை மனிதக் கிடங்காகவும் வேகமாக நாடு மாறிவருகிறது. ஒரு பக்கம் படுபாதகமான வறுமைக் குழிக்குள் 75 கோடி இந்திய மக்கள் புதைந்து கொண்டிருக்கிறார்கள்; மறுபக்கம் திகைப்பூட்டும் அளவிற்கு செல்வவளம் குவிந்து கொண்டிருக்கிறது. நாட்டின் பெரும்பான்மைக்கும் அதிகமான மக்களின் வாழ்க்கையை, தனிமனித உரிமைகளை, கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகக் காத்து, வளப் படுத்தத் தவறிய இந்திய ஜனநாயக ஆட்சி முறை, வேறு யாருக்காக இயங்கிக் கொண்டிருக்கிறது? இனி மேலும் இந்த ஜனநாயகத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு என்ன கிடைத்துவிடப் போகிறது?

இந்த அவல வாழ்க்கையை வாழத் தானா இத்தனை காலம் வாக்குச்சீட்டை சுமந்து கொண்டு, நீண்ட நெடிய வரிசை யில் கால்கடுக்க நின்று வாக்களித்தார் கள் - 70 கோடி ஏழை இந்தியர்கள்? வய துக்கு வந்த ஒவ்வொரு குடிமக்களையும் வாக்குரிமை கொடுத்து மதிப்பிற்குரிய வர்களாக்குகிறோம் என்கிறார்களே! அந்த 'மதிப்பு' என்ன? அந்த மதிப்பு தந்த வாழ்க்கைதான் என்ன? வாக்குச் சீட்டு இல்லாத இந்தியர்களுக்கு இந்திய ஜன நாயகம் என்ன மதிப்புத் தரும்? வாக்குச் சீட்டுகள்தான் மதிப்பிற்குரியவைகளா? அல்லது வாக்களிக்கும் மக்கள் மதிப்பிற் குரியவர்களா? இந்திய ஜனநாயகம் என்ன

ஓவியம் : சிப்பால்



டாக்டர் அம்பேத்கர், இந்திய அரசமைப்புச் சட்டத்தை - பிரதமர் நேரு, சர்தார் பட்டேல், ராஜகோபாலாச்சாரி மற்றும் மவுலானா ஆசாத் ஆகியோர் முன்னிலையில், டாக்டர் ராஜேந்திர பிரசாத்திடம் அளிக்கிறார்



படிப்பகம்

www.padippakam.com

பதில் சொல்கிறது? சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் நாட்டில் சமச்சீர்மை நிலவும் என்று தனது முகப்புரையில் குறிப்பிடும் இந்திய அரசமைப்புச் சட்டம் என்ன பதில் சொல்கிறது? சட்டத்தை உருவாக்கியவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்?

1947 ஆகஸ்ட் 29 இல் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு, 18 மாதங்கள் சுமார் அறுபது நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை ஆய்ந்தறிந்து, 1948 பிப்ரவரி 21 இல் வரைவு அரசமைப்புச் சட்டத்தை அரசியல் நிர்ணய சபையிடம் அளித்தது. ஏராளமான விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்கொண்டது முதல் வரைவு. அவற்றைப் பரிசீலித்து பரிந்துரைகளை வரைவுக் குழுவிடம் அளிக்க வேண்டும் என்று சிறப்புக்குழு ஒன்றை அரசியல் நிர்ணய சபை உருவாக்கியது. சிறப்புக்குழு அளித்த பரிந்துரையில் சிலவற்றை சேர்த்துக் கொண்டு மீண்டும் 1948 அக்டோபர் 26 அன்று இரண்டாவது வாசிப்பிற்காக அரசமைப்புச் சட்டம் அரசியல் நிர்ணய சபையின் முன் வைக்கப்பட்டது.

1948 நவம்பர் 4 இல் அதை அறிமுகப்படுத்திப் பேசிய அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு தலைவர் டாக்டர் அம்பேத்கர், ''மற்ற நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை அப்படியே கண்மூடித்தனமாகப் பின்பற்றி இந்திய அரசமைப்பு ஆவணம் எழுதப்படவில்லை. நாட்டின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டே அரசமைப்பு ஆவணம் மிக நீளமாக உருவாக்கப்பட்டது'' என்றார். இதன் மூலம் நாட்டில் நிலவிய அனைத்து வகை ஏற்றத் தாழ்வுகளுக்கும் அரசமைப்புச் சட்டம் தீர்வைத் தர வேண்டும் என்பது, அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் நோக்கமாக இருந்ததை நாம் உணர முடியும்.

1948 நவம்பரிலிருந்து, 1949 அக்டோபர் வரை அரசமைப்புச் சட்ட வரைவின் ஒவ்வொரு பிரிவையும் தனித் தனியாக அலசி ஆராயும் பணி மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது வாசிப்பு நவம்பர் 16 ஆம் நாள் முடிவடைந்தது. மறுநாள் அரசியல் நிர்ணய சபையால் இறுதியாக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட வரைவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார் டாக்டர் அம்பேத்கர். அத்தீர்மானத்தின் அடிப்படையில், மூன்றாவது வாசிப்பு மேற்கொள்ளப்பட்டது. 1949 நவம்பர் 26 ஆம் நாள், அம்பேத்கர் கொண்டு வந்த தீர்மானம் அரசியல் நிர்ணய சபையால் நிறைவேற்றப்பட்டு, வரைவு அரசமைப்புச் சட்டம் முழுமையாக 'இந்திய இறையாண்மை மக்களாட்சிக் குடியரசின்' அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



மக்களாட்சி, சமூக நீதி, மக்கள் ஒற்றுமை, நீதிப்புனராய்வு ஆகிய அரசமைப்பு மாண்புகளைக் கொண்டு, இந்திய மக்கள் தலைமுறை தலைமுறையாக சுதந்திரம், சமத்துவம் - சகோதரத்துவம் போன்ற உயர்ந்த நெறிமுறைகளை உருவாக்கிப் பாதுகாத்து வரவேண்டும் என்பதே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை நோக்கம் என்கிறார் டாக்டர் அம்பேத்கர். விலைமதிப்பற்ற அவரது வார்த்தைகளே, இந்திய அரசமைப்பு ஆவணத்தின் முகப்புரையின் அடிநாதமாக விளங்குகிறது.

'இந்திய மக்களாகிய நாம்' இந்தியாவை ஓர் 'இறையாண்மை மக்களாட்சி குடியரசாக' உருவாக்கி, அதன் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமும் நீதியும் சமத்துவமும் கிடைக்கச் செய்வதுடன் - அவர்களிடையே சகோதரத்துவம் தழைக்க உறுதியான முடிவை மேற்கொள்கிறோம் என்று தொடங்குகிறது அரசமைப்புச் சட்ட முகப்புரை. 'நீதி' என்பதை சமூக, பொருளாதார, அரசியல் நீதி என்றும், 'சுதந்திரம்' என்பதை சிந்தனை, கருத்து வெளிப்பாடு, வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரம் என்றும் விளக்கியுள்ளது அரசமைப்புச் சட்ட முகப்புரை. சமத்துவம் என்றால், அனைத்து வாய்ப்புகளிலும் அந்தஸ்திலும் சமத்துவம் என்கிறது. 'மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் கொண்ட 'மக்களாட்சி' அமைப்பாக இந்திய அரசியல் திகழ வேண்டும் என்று மக்களுக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது' என்று பிரகடனம் செய்துள்ளது அரசமைப்புச் சட்ட முகப்புரை. ஆனால், கடந்த அய்ம்பதாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் நடைபெற்று வரும் 'மக்களாட்சி' அரசமைப்பு, முகப்புரை பேசும் எவற்றையேனும் உறுதி செய்திருக்கிறதா?

சமூக நீதி, அரசியல், பொருளாதார சமத்துவம் - என்றேனும் இந்திய நாட்டில் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறதா? இனி மேலாவது சமத்துவத்தையும் சமூக நீதியையும் இந்திய ஜனநாயகம் உருவாக்குமா? அதற்கு ஏதேனும் வாய்ப்பிருக்கிறதா? நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை, இந்திய மக்களாட்சியாளர்கள் இழந்து நிற்கிறார்கள். பொதுத் துறைப் பொருளாதாரமும் தனியார்களுக்குப் போய் சேர்ந்துவிட்ட நிலையில், இனி அரசு தன்னை இயக்கிக் கொள்ளவே தனியார்களிடம் கையேந்த வேண்டிய நிலை வரும் அல்லது 'பறிப்பு' வேலையில் ஈடுபடும். இந்திய மக்களாட்சி நடைமுறையால், நாட்டில் சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவத்தை இனி உருவாக்க முடியாது என்பது உறுதியாகிறது.

தங்களுக்கு அரசமைப்புச் சட்டம் உறுதியளித்திருக்கின்ற உரிமைகளை மறுக்கிற அல்லது உருவாக்கித் தராத 'மக்களாட்சியை' - இன்னமும் மக்கள் நம்ப வேண்டுமா? குடியுரிமை மாண்புகளைப் பெற்றுத் தராத 'மக்களாட்சி' அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக இயங்குகிறது. அதை அப்படி இயக்குபவர்கள் யார்? அரசியல் வாதிகளும் அதிகாரவர்க்கமும்தான் எனில், அந்த அரசியல்வாதிகளை உருவாக்கும் மய்யங்கள் எவை? அந்த மய்யங்களே உலகின் மிகப் பெரும் இந்திய ஜனநாயகத்தை - 'மந்தை ஜனநாயக' மாக மாற்றி வைத்திருக்கிறது. இந்திய மக்களால் இனி ஒருபொழுதும் அழிக்க முடியாதவைகளாக மாறிவிட்டிருக்கும் அந்த மய்யங்கள் எவை? மந்தை ஜனநாயகம் என்பது என்ன? ●

- 'ஜனநாயக இருள்' இன்னும் விரியும்

படம் : 'கம்யூனலிசம் காம்பட்'


## தமிழ், ஆங்கிலம் தட்டச்சு
# DTP
## ஆள் தேவை

• ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

உடனே விண்ணப்பிக்கவும்
முல்லை அச்சகம், 1, அப்பாவு தெரு
எல்லீசு சாலை, சென்னை - 2
பேசி : 5215 6320




படிப்பகம்

www.padippakam.com



# இருளர் வாழ்வு இன்னும் இருளிலா?

■ விழி.பா. இதயவேந்தன்

ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் பழங்குடியினரை கூண்டோடு சாகடித்தது போல், தமிழகத்திலும் பழங்குடியினர் வாழ்வியல் ஆதாரங்கள் தொலைந்து, நிம்மதி இழந்து அம்மக்கள் பல்வேறு நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கின்றனர். இவற்றால் பழங்குடிச்சமூகம், கடந்த 100 ஆண்டுகளில் பிற சமூகத்தினரைப் போன்று மக்கள் தொகை அடிப்படையில் அதிகரிக்காமல், மிகவும் குறைந்து கொண்டே வருவதைப் பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. பழங்குடியின இருளர் சமூகத்தைச் சேர்ந்த அத்தியூர் விஜயா என்பவர், புதுச்சேரி காவல் துறையினரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதால்தான் - 4.10.1996 அன்று 'பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்' தொடங்கப்பட்டது. சங்கம் தொடங்கிய நாள் முதல் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் உள்ள இருளர்மீதான வன்கொடுமைகள், வழக்குகள், போராட்டங்கள்எனத் தொடர்ந்து இன்று 10ஆம் ஆண்டில் சங்கம் வலுவோடு செயல்படுகிறது. இதற்கு முக்கியக் காரணம், அடக்குமுறைக்கு எதிராக இருளர்கள் ஒன்றிணைவதும் உறுதியோடு தொடர்ந்து நிற்பதும்தான்.

தமிழகப் பழங்குடியினரின் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து குறிப்பாக இழந்துபோன நிலங்களை மீட்கும் முகமாக தமிழகப் பழங்குடியினர்நிலவுரிமை மாநாடு, 15.10.2005 அன்று திண்டிவனத்தில் எழுச்சியோடு தொடங்கியது. தாரைத் தப்பட்டம் முழங்க, தலித்துகளும் பழங்குடியினரும் பெருந்திரளாகப் பங்கேற்றனர். தலித்துகள் மண்ணுரிமைக்காக பஞ்சமி நிலங்களை மீட்க வேண்டும் எனப் போராட்டங்கள் நடத்தும் இவ்வேளையில், தமிழகமெங்கும் உள்ள பழங்குடியினர் தங்களுக்கான நில வுரிமையைப் பெற கோரிக்கை வைப்பது தான் இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

காலையில் தொடங்கிய தொடக்க அரங்கத்திற்குப் பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்க மாநிலத் தலைவர் ப. இளங்கோவன் தலைமை வகித்தார். ''கடந்த 9 ஆண்டுகளில் தொடங்கிய எங்கள் சங்கம் எத்தனையோ பிரச்சினைகளை, பொய் வழக்குகளை சந்தித்தது. ஏன் என்று கேட்க ஆளில்லாத பழங்குடியினர் மீது வன்கொடுமை நிகழ்த்தப் படும்போது, அதைத் தடுப்பதற்காக உருவானதே எங்கள் சங்கம். பழங்குடியினருக்கு ஆதரவாக செயல்பட்டால் என் மீதும் போலிஸ் நடவடிக்கை எடுக்கிறது. நமது சங்கத்திற்கு மிகப் பெரும் பாதுகாப்பு, விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன் அவர்கள் இன்று நமது நிகழ்வில் கலந்து கொள்வதாகும்'' எனத் தமது அறிமுக உரையில் பேராசிரியர்கல்யாணி பேசினார்.

> “சாதி சர்டிபிகேட் கிடைக்க மனு குடுத்தா பணம் கேக்கறாங்க. ஒரு நாளைக்கி நடவு நட்டா, கள எடுத்தா 15 ரூபா கூலி. ஆர்.அய், தாசில்தாரு, மணியக்காரர் 100 ரூபா கேக்குறாங்க. எங்களால முடியல.”

மாநாட்டைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றிய தொல். திருமாவளவன், ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் இருந்தாலும், பழங்குடியினர் தொடர்பு நமக்கு அதிகம் கிடைப்பதில்லை. இன்று நில உரிமைக்கான மாநாடு நடைபெறுகிறது. விடுதலைச்சிறுத்தைகள் ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்டோர் மண்ணுரிமைக்காகப் போராட்டங்களைத் தொடங்கியது. இந்த மண்ணின் மைந்தர்களுக்கு மண்ணுரிமை இல்லை. இந்த தேசமே நமது தேசம். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின நிலமற்ற கூலிகளான நாம் - மண்ணிலிருந்து பிடுங்கப்பட்டு சிதறியிருக்கிறோம். நமக்கும் மண்ணிற்கும் உள்ள உறவு உழைப்பு ஒன்றுதான். உழைத்து யாருக்கோமூட்டை கட்டிக் கொடுக்கிறோம். இந்த மண்ணை ஆளுவதற்கு எங்களுக்கு தகுதி உண்டு என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். நம்மிடம் நிலம் இல்லை, அதிகாரம் இல்லை, இன்னும் ஆயுதங்கள் ஏதுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழங்குடியினர் பற்றி ஒரு சிலர்தான் ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆனால், புத்தகமாகவே வாழ்ந்து



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கிறாங்கள் பழங்குடி இருளர்கள். பழங்குடியினர் கோரிக்கைகளை விடுதலைச்சிறுத்தைகள் ஆதரிக்கிறது'' என்றார்.

பழங்குடியினர் பாதுகாப்புச் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் உ. மலர் : ''இந்த மாநாட்டுக்கு எல்லா இனத்தையும் சேர்ந்தவர்கள் வந்திருப்பது மகிழ்ச்சி. இந்தக் கூட்டம் எதுக்கு வெச்சாங்க, இன்னாத்துக்கு வெச்சாங்கன்னு எங்கிட்ட நாளைக்கி எங்க சனங்க கேப்பாங்க. எங்களுக்கு சாதி சர்ட்டிபிகேட் வேணும், ஏதாவது பிரச்சினை என்றால் விழுப்புரம் மாவட்டத்துல போலிசில் புகார் கொடுக்க முடியவில்லை. ஏன்னா பயம். முதல் தகவல் அறிக்கை போடுவதில்லை. அடிச்சவன் புகார் கொடுத்தா உடனே முதல் தகவல் அறிக்கை காப்பி கொடுக்கிறான். எனக்கு படிக்கத் தெரியாது. எங்க புள்ளங்களாச்சும் படிக்கனும்தான் சாதி சர்ட்டிபிகேட் கேக்கிறோம்.''

இருளப்பு செல்வக்குமார் - ஆதிவாசிகள் கூட்டமைப்பு : ''ஆதிவாசிகளின் அடையாளம், உரிமைகள் மறுக்கப்படுகின்றன. புதுவையில் ஆதிவாசிகள் அங்கீகரிக்கப்படவில்லை. நான் இருளன். நிலவுரிமைக்காக சிறை சென்றிருக்கிறேன். நமது சொந்தங்கள் தேவையற்று இன்றும் 11 பேர் கடலூர் மத்தியச் சிறையில் தண்டனை அனுபவிக்கிறார்கள். அரசு முதலாவதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள தன்னாட்சி உரிமையை வழங்க வேண்டும். அதைச் செய்யாமல் சான்று கொடுக்க நீ யார்? நிலம் கொடுக்க நீ யார்? ஓட்டு வாங்குவதற்காக அரசியல்வாதிகள் எப்படி வேண்டுமானாலும் வருவார்கள். அதன் பிறகு ஆதிவாசிகளை கவனிக்க மாட்டான்.''

கக்கனூர் 'வீர முழக்கம்' கலைக் குழுவினர் வழங்கிய கலை நிகழ்ச்சி சிறப்பாக இருந்தது. மலையகத் தொழிலாளிகள் நடனம் மற்றும் 'சிதம்பரத்தில் பத்மினி, திண்டிவனத்தில் ரீட்டாமேரி, பெண்கள் மீது வன்முறைகள் தொடருதே, காக்கிச்சட்டை வெறி நாய்கள் குதறுதே' எனும் பாடலும் கலை நிகழ்ச்சியும் வெகுவாய் மக்களைக் கவர்ந்தது. பிற்பகல் நடந்த தீர்மான அரங்கிற்கு தலைமை தாங்கிப் பேசிய பழங்குடி இருளர் பாதுகாப்புச்சங்க மாநில பொருளாளர் ஏ. ஜெகதீசன், 'நிலம் வேண்டும் நிலம் வேண்டும் என்றால் கிடைக்காது. காணி நிலமானாலும் போராடினால்தான் நமக்குக் கிடைக்கும்' என்றார். இந்நிகழ்வில் மு. பூபால் வரவேற்க, வழக்குரைஞர் கவுதமசன்னா, சு. லட்சாதிபதி காசிநாதன், பன்னீர்செல்வம், கா. பாலமுருகன் ஆகியோர் பங்கேற்றுப் பேசினார்கள்.







● பழங்குடியினர் இருப்பிடங்களை இந்திய அரசியலமைப்புச்சட்டம் அய்ந்தாவது அட்டவணையின்கீழ்க் கொண்டு வர வேண்டும் ● தங்கராஜ் அறிக்கை (1990) பரிந்துரையின்படி சிதறி வாழும் பழங்குடியினர்க்கு 5 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும் ● பழங்குடியினர்க்கு வீட்டு மனைப்பட்டா/தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் ● சாதிச் சான்று கால தாமதமின்றி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாலையில் திண்டிவனம் மீனாட்சி திரையரங்கிலிருந்து தொடங்கிய மாபெரும் பேரணியில், இரண்டாயிரம் பேருக்கு மேல் ஒன்று திரண்டு அணி வகுத்தது அந்நகரை உலுக்கியது. பேரணிக்கு கு. பூபதி தலைமையேற்க, கா. ருக்கு தொடங்கிவைத்தார். பாம்பு படம் பொறித்த சங்கக் கொடிகளுடன் ஊர்வலம் மீண்டும் பொது அரங்கில் வந்து முடிந்தது. ப. சிவகாமி எழுதிய 'தமிழகப் பழங்குடியினர் நிலவுரிமை' என்னும் நூல் வெளியிடப்பட்டது. வழக்குரைஞர் லூசிதலைமை ஏற்க, கா.வ. கன்னியப்பன் வரவேற்புரை ஆற்றினார். நூலை அத்தியூர் விஜயா வெளியிட, அமிர்தா பெற்றுக் கொண்டார். பேராசிரியர் கோச்சடை, பழங்குடியினர் வாழ்க்கை முறையை விளக்கி அதற்கு இந்நூல் தரும் எண்ணற்ற விளக்கங்களைச் சுட்டிக்காட்டினார்.

விழி.பா. இதயவேந்தன் தொகுத்த 'பழங்குடியினர் கதை, கவிதை, கட்டுரைகள்' நூலை தைலாபுரம் சந்திரா வெளியிட, ரஞ்சிதம் பெற்றுக் கொண்டார். ''பழங்குடியினரின் கலாச்சாரங்களைப் பதிவு செய்யும் இந்நூலில், தலித்துகள் மற்றும் பழங்குடியினர் எழுதிய படைப்புகளும் தலித்துகள் பழங்குடியினர் பற்றி எழுதிய படைப்புகளும் இடம் பெற்றுள்ளன. பழங்குடியினர் மட்டுமே அவர்கள் வாழ்க்கைப் பதிவுகளை எழுதி அடுத்த நூல் வெளிவர வேண்டும். 'புதிய கோடாங்கி' பல்வேறு பழங்குடியினரின் இத்தகைய வாழ்க்கை முறைகளைப் பதிவு செய்திருக்கிறது'' என்றார் ப்ரதிபா ஜெயச்சந்திரன்.

இறுதியாக நடந்த பொது அரங்கத்திற்கு, பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்க மாநிலப் பொதுச் செயலாளர் சு. ஆறுமுகம் தலைமை ஏற்க, ச.சு. ஜைனுதீன் வரவேற்றுப் பேசினார். தந்தை பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, விடுதலைச்சிறுத்தைகள் துணைப் பொதுச் செயலாளர் ஏ. விஜயராகவன், மனித உரிமை இயக்கம் வழக்கறிஞர் லூசி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மேலவளவு முருகேசன் வழக்கிற்கு, பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் தங்கள் சொந்த உழைப்பிலிருந்து - இவ்வழக்கினை நடத்தி வரும் வழக்கறிஞர் ரத்தினம் அவர்களிடம் ரூ.5,000/- நன்கொடையாகக் கொடுத்தது.

இருளர்கள் வாழ்வு இனி இருளில் இருக்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில், பழங்குடியினரின் எழுச்சிமிக்க இந்த நிலவுரிமை மீட்பு மாநாடு நடந்தேறியது. ●



படிப்பகம்

www.padippakam.com





# தங்கவயலின் தனிப் பெரும் தலைவர்

# க. பூசாமி

■ ஏபி. வள்ளிநாயகம்

தங்கம் - கோலார் தங்கவயலில் தனது இருப்பை உணர்த்திய காலத்திலிருந்தே தொல் தமிழர்களும், அய்ரோப்பிய நிபுணர்களும் நீங்க முடியாத பிணைப்புகளோடு இருந்தனர். தொல் தமிழர்களின் உழைப்பு மூலதனம்தான் கோலார் தங்கவயலில் தங்கம் எடுக்க, ஒரே உந்து சக்தியாக இருந்தது. தங்க வயலின் விளைச்சல் குறித்து அவர்களுக்குதான் தப்ப முடியாத பெரிய பெரிய உத்தேசங்கள் இருந்தன. தங்கத்தைத் தேடுவதில், தேடிக் கண்டதில், தேவையற்ற சேர்க்கைகளைக் கழித்து தனித்ததொரு தங்கமாக வார்த்தெடுப்பதில், வேட்கையும் வைராக்கியமும் நுணுக்கமும் அவர்களிடமே குடி கொண்டிருந்தன.

இதில் குறிப்பிட்டுச் சொல்லித் தீரவேண்டிய மக்கள், வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து புலம் பெயர்ந்து, தங்களின் மனித ஆற்றலுக்கு உட்பட்ட வரையில் பூமியின் மய்யத்தை நோக்கிக் குடைந்து, கோலார் தங்க வயலில் உலகத்திலேயே மிக ஆழமான தூரத்தில் இறங்கி, தங்கத்தை வெட்டியெடுத்து அதை வெற்றிகரமான தொழிலாக்கினர். தொல் தமிழர்களோடு பிணைந்து சுரங்கத் தொழில் நடத்திப் புகழடைந்தவர்கள், இங்கிலாந்து நாட்டவரான 'ஜான் டெய்லர் அண்ட் சன்' நிறுவனத்தினர். 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக, மிக அதிக அளவில் தங்கத்தை உற்பத்திச் செய்யும் சுரங்கப் பகுதி கோலார் தங்க வயலென நிலை நிறுத்தினர்.

கிராமங்களின் சாதி ஆதிக்கச் சூழலின் விளைவு என்ற வகையில், இடம் பெயர்தல் ஒரு கிளர்ச்சியாகிப் போனதில், அது மற்றவர்களுக்கு மலினப்படாமல் சுயம் காக்கும் இயக்கமானது. சேற்றில் சிதறிய சோற்றுப் பருக்கைகளை அந்தச் சேற்று நீரிலேயே கழுவி விழுங்கி, உண்ட கையைக் கோவணத்தில் துடைத்துக் கொண்டு, பரம்படித்து பயிர் வளர்த்த வேளாண்குடி மக்கள் - தங்க வயல் சூழலுக்கேற்ப மாற்றமடைந்தனர். அடிக்கடி ஏற்படும் பூமி அதிர்ச்சியிலிருந்து பாதுகாப்பளிக்கத்தான் தட்டி வீடுகள் என்று ஆங்கிலேயர் வழங்கிய எட்டடிக் குடிசைகளில் வாழ்ந்தே தங்கத் தொழிலாளர் ஆகினர்.

வைகறை முதல் அந்தி இருட்டு சாயும்வரை உழைத்த காலமான அன்று எட்டுமணி நேர வேலை என்ற வரையறுப்பு இல்லை. இருப்பினும், மக்களின் பழக்க வழக்கங்களில் மாறுதல்கள் தோன்றி அய்ரோப்பியப் பண்பாட்டிற்கேற்ப நடை, உடை, சிகையலங்காரம், வழக்கு மொழியில், உணவு முறையில் ஆங்கிலக் கலப்பு எனப் புதிய சூழ்நிலை தங்க வயலில் உருவாகியது. தொல் தமிழர்கள், பல்லாயிரம் அடிகள் பூமிக்கடியில் இறங்கி, பாறையைப் பிளந்து ரத்தம் சிந்தி - 'கீழே போனால் பிணம்; மேலே வந்தால் பணம்' என்னும் தங்க வயலுக்கே உரிய 'புண் மொழி'க் கேற்ப உயிரைப் பணயம் வைத்தே சுரங்கத் தொழிலை வளர்த்தெடுத்தனர்.

*1880* - சுரங்கத் தொழிலின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. முதல் இருபதாண்டு (1880 - 1900) சுரங்கத் தொழில் வளர்ச்சியுற்ற காலத்திலேயே, ஆதிதிராவிடர்கள் வெறும் பாட்டாளிகள்தான் என்பதைத் தாண்டி, ஒருசில சமூக ஆளுமைகள் சிந்திக்க வேண்டிய, செயல்பட வேண்டிய முன்னேற்ற கட்டத்திற்கு

**❝ சுரங்கத் தொழிலில் புகழ் பெற்ற காண்ட்ராக்டராகவும், திறமை மிக்க இஞ்சினீயராகவும் க. பூசாமி பணியாற்றியபோது, தனது தொழில் ஆற்றலில், காழ்ப்புணர்வு கொண்டு மாசு கற்பித்த ஆங்கிலேயர்க்கு அடங்கி செயல்பட விரும்பாமல், சுயமரியாதை வீரராய் பதவி விலகி, இனி வெள்ளையர் கம்பெனியின் மண் மீது கால்களை வைப்பதில்லை எனச் சூளுரைத்துத் தங்க வயலிலேயே பற்றிப் படர்ந்து, வெள்ளையருக்குத் தாம் எந்த வகையிலும் குறைந்தவரல்ல என்பதை நிரூபணம் செய்பவராய், தங்க வயலின் தெற்கே அய்ந்து கிலோ மீட்டர் தொலைவில், பிசானத்தம் பகுதியில் தனது சுய முயற்சியில் ஒரு புத்தம் புது தங்கச் சுரங்கத்தை நிறுவினார். அதன் தலைமை இஞ்சினீயராகத் தானே பொறுப்பேற்றுத் தங்க உற்பத்தி செய்து, தன்னகங்கார ஆங்கிலேயரைத் தலைகுனிய வைத்துப் பாடம் புகட்டினார். ❞**

- கே.எஸ். சீதாராமன் எழுதிய 'கோலார் தங்க வயல் வரலாறு' நூலிலிருந்து - பக்கம் : 187



படிப்பகம்

www.padippakam.com

**❝ தங்கச் சுரங்கத் தலைமைப் பொறியாளர், ஒப்பந்தக்காரர், சுரங்கத் தொழில் அதிபர், கல்வி நிறுவனர், தியேட்டர் அதிபர், போக்குவரத்துக் கழக அதிபர், தொழில் மேதை, 'திராவிடன்' இதழின் புரவலர், ஆதிதிராவிடர் மகாஜன சபை தலைவர், மைசூர் சமஸ்தான மக்கள் பிரதிநிதி எனப் பன்முக ஆளுமைப் பண்புடையாளராய் க. பூசாமி திகழ்ந்தார். ❞**

வந்தடைந்தனர். அவர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் சமுதாயத்தின் அறிவு - ஆக்கப் பரிணாமத்தை வெளிச்சமாக்கிய தொழில் விற்பன்னர்களாக வாய்த்தனர். சமூகப் பாட்டாளி வர்க்கம் உருமாற்றம் பெறுவதின் படிமங்களாயினர். இவர்களில் முதன்மையானவர், கோலார் தங்கவயல் மைசூர் மைன்ஸ் பொறியாளரும், ஆதிதிராவிடர் மகாஜனசபையின் தலைவருமான க. பூசாமி.

சுரங்கத் தொழிலியல் துறையில் தேர்ச்சிப் பெற்ற க. பூசாமி, பொறியாளராய் பொறுப்பேற்று, தங்கத்தை அடையும் ஆற்றல்களின் வாசல்களைத் திறந்து வைத்த ஒரு சிறந்த சுரங்கத் தொழிற்கலை நிபுணர் ஆவார். தொழிலறிஞர் க. பூசாமி, ஆங்கிலேயர் அடங்கிய தங்க உற்பத்தி குழுமத்திற்கும், சுதேசி விதேசி பொறியாளர்கள் அடங்கிய தங்க உற்பத்திக் குழுவிற்கும், தங்கம் எடுக்க வியூகத்தை வகுத்துக் கொடுப்பதில் பாலமாகத் திகழ்ந்தார். சுரங்கத்தொழில் பொறியியல் கல்வியில் அந்தந்த காலத்திற்கு ஏற்ற வகையில் மாறுதல்களைக் கொண்டு வந்தார். ஆங்கிலேயர்களின் சுரங்கத் தொழில் நிலைய அக மதிப்பீட்டு முறைமைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, சுரங்கத் தொழிலை நிலைப்படுத்தி, வெற்றியாக்கி, விரிவாக்கி முதன்மையானப் பங்காற்றினார்.

சுரங்கத் தொழில் மேதையான இவர், சுரங்கத் தொழிலுக்கான தொழிற்சாலைக் கட்டடங்கள், காரியாலயங்கள், ஆங்கிலேயர்களுக்கான பங்களாக்கள் முதலியனவற்றைக் கட்டும் கட்டடத் தொழிலிலும் சிறப்புற்றார். தங்கவயலின் சுரங்கத் தொழில் தேவைகளுக்கேற்ப கட்டடக் கலையைக் கட்டமைத்த ஆதர்ச சக்திகள் வரிசையில் இடம் பிடித்தார். கட்டடக் கலையின் எல்லைகளுக்குச் சென்று சஞ்சாரம் செய்த இணையற்ற கட்டடக் கலைஞரான இவர், கட்டட ஒப்பந்தக்காரர் நிலையில் பெரும் செல்வந்தர் ஆனார். அக்காலத்தில் இருந்த முன்னோடி ஆளுமையோடு ஒரு சேர அணிவகுத்து வெளிப்பட்ட மிக முக்கிய புள்ளிகளாய் எம்.சி. மதுரைப் பிள்ளை, ஆர்.ஏ. தாஸ், செல்லப்பா போன்றோர் விளங்கினர்.

இவர்கள் அனைவருக்கும் வைணவ மயக்கமிருந்த போதிலும், ஆதிதிராவிடர் சமூக நலனில் தெளிவுள்ளவர்களாக இருந்தனர். தங்கள் பணக்கார வாழ்விலும் மிகப் பெரிய சக்தியாக, தம் தாழ்த்தப்பட்ட மானுடத்தையே நேசித்தனர். தங்களுக்கான முன்னேற்றத்தை தோற்றப்படுத்திய படியே ஒரு முனையில் நகர்ந்து சென்றாலும், மறுமுனையில் சமூக முன்னேற்றமே இவர்களுடையது. இவர்கள் சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துபவர்களாகவும், சமூக வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணிப்பவர்களாகவும், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர்.

இவர்கள், தங்கள் ஆன்மீகச் சாய்மானமான வைணவத்தை, பார்ப்பனர்களின், பார்ப்பனியர்களின் குறுக்கீடு இல்லாமல் தாங்களே ஆட்சி செய்தனர். ''தங்கவயல் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குத் தொண்டாற்றும் பணியில், வைணவர்களின் சேவைக்கு ஈடுகொடுக்க ஏனையோரால் இன்று இயலாது'' என பவுத்த மார்க்க ஆளுமையான இ.நா. அய்யாக்கண்ணு புலவர் அவர்கள் அங்கீகரிக்கும் அளவிற்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான க. பூசாமி மற்றும் எம்.சி. மதுரைப்பிள்ளை, ஆர்.ஏ. தாஸ் போன்றோரின் தலைமையில் வைணவர்களின் சமூகத் தொண்டு விரிவடைந்தது.

இதில், தொண்ணூறு சதவிகிதத்திற்குமேல் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒருங்கே சேர்ந்து வாழ்ந்த ஒரே நகரமாக விளங்கிய தங்க வயலில், சமூகப் புரட்சியின் முன்னணித் தலைவர் க. பூசாமியே ஆவார். தலைவர் க. பூசாமி, பொருளாதாரத்தில் உச்சத்தில் இருந்த நிலையில் தம் தனித்துவத்தை மக்கள் வசப்படுத்தி, 'என் இன நன்மைக்கு இன்று நான் என்ன செய்தேன்?' என்ற கேள்வியை மனத்தில் இருத்திக் கொண்டு, பலனைப் பற்றி எண்ணாமல் சமூக மனிதரான மனப்பக்குவத்திற்கே தன் மனித இயங்கியலை ஒப்படைத்தார். பறிபோன அவர்களின் வாழ்வியல் உரிமைகளை மீட்டெடுக்க, எம்.சி. மதுரைப் பிள்ளையைத் தோழமையாகக் கொண்டு, 'கோலார் தங்க வயல் ஆதிதிராவிடர் மகாஜன சபை'யினைத் தோற்றுவித்து அதன் தலைவரானார். சபையின் செயலாளராக மைசூர் மைன்ஸ் வி.எம். வடுகதாசரை பொறுப்பேற்கச் செய்தார். சபையின் செயலாளரை ஆசிரியராகக் கொண்ட 'திராவிடன்' இதழும் வெளிவருமாறு செய்தார். இருக்கும் நிலையிலிருந்து ஏற்றமிகு நிலைக்குச் செல்ல கொந்தளிப்புகளை 'திராவிடன்' இதழ் உண்டாக்கியது.

தனிநபர் வளர்ச்சிக்கும், சமூக மாற்றத்திற்கும், மூலதனமே இல்லாத தாழ்த்தப்பட்டோருக்கு கல்விதான் மூலதனம் என்பதை உணர்ந்த தலைவர் பூசாமி, 1900 ஆம் ஆண்டு வரை கல்வி கற்க வாய்ப்பின்றி, வயது வந்தோரில் பெரும்பாலோர் 'கை நாட்டு'வைக்கும் நிலையில் மாரிக்குப்பத்தில் சிறீ ஆண்டாள் பள்ளியை நிறுவினார். இதில், ஆரம்பக் கல்வியை முடித்த ஆதிதிராவிடர்கள், கடைநிலை ஊழியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுத் தமது சுயமுயற்சியில் அடுத்த மேல் வேலையில் அக்கறைக் காட்டி, ஆங்கில மொழியை அழகாய் வடிவமைத்து - உத்தியோக உயர்வு பெற்று எழுத்தர்களாக முன்னேறியது குறிப்பிடத்தக்கது.



ஜான் டெய்லர்

பிரிட்டிஷ் இந்தியாவின், இந்திய அமைச்சர் மாண்டேகு செம்ஸ்போர்ட் சென்னைக்கு வருகை புரிந்தபோது, அவரைச் சந்தித்து சமூக விசாரணையை க. பூசாமி ஏற்படுத்தினார். 'இந்திய அமைச்சருக்கு வரலாற்றில் ஆதிதிராவிடர்கள் யார் என்பதை விளங்கப் படுத்தி, அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சமூகத் தீமைகளை எடுத்துரைத்தார். பூர்வ குடியினரை ஆதிதிராவிடரென்றே அழைக்கும்படி, இந்திய



படிப்பகம்

www.padippakam.com

ஆளுநருக்குத் தந்தி கொடுத்தார். ஆதிதிரா விடர்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் வீச்சில் தங்கவயல், பிரம்மபுரம், சென்னை ஆகிய இடங்களில் மாநாடுகளை நடத்தினார். வட தமிழகத்தில் மாநாடுகள் நடத்த உதவினார். மைசூர் சமஸ்தானத்திலும் சென்னை மாகாணத்திலும், அரசியல் அதிகாரப்பகிர்வில் தனிப் பிரதிநிதித்துவம் தாழ்த்தப்பட்டோருக்கு வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவர்களுக்கு அரசியல் அதிகாரத் தனித்தன்மையை நிலைநாட்ட, புரட்சியாளர் அம்பேத்கர் வட்டமேசை மாநாட்டில் லண்டலின் பங்கேற்றபோது அம்பேத்கரின் எண்ணம் ஈடேற, ஆதிதிராவிடர் மகாஜன சபை சார்பில் வாழ்த்துத் தந்தியினை தலைவர் பூசாமி அனுப்பி வைத்தார்.

1924 மார்ச் 17 அன்று மைசூர் சமஸ்தானத்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அசெம்பிளி ஏற்படுத்தப்பட்டது. சமஸ்தானம் முழுமையிலுமிருந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தவருக்கு 35 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இதன் அடிப்படையில் தலைவர் பூசாமி, ஆதிதிராவிடர் மகாஜன சபையின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் முதல் காரியமாக, தாழ்த்தப்பட்டோர் இழிவான சொல்லாடல்களால் பாவிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசு 'ஆதிதிராவிடர்' எனும் பெயரில் கையாள்வதில் வெற்றி கண்டார். மக்கள்தொகை கணக்கெடுப்பிலும் அவ்வாறே விளங்கும் நடைமுறையைக் கொண்டு வந்தார்.

அவ்வப்போது நடைபெற்ற பிரதிநிதி சபைக் கூட்டங்களில், தாழ்த்தப்பட்டோருக்குக் கல்விச் சலுகை, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, தொழில் மற்றும் விவசாயத்திற்கு உதவி ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து - அரசை தாழ்த்தப்பட்டோர் நலனில் செயல்பட வைத்தார். தலைவர் பூசாமி, தன்னளவில் தன் சமூக மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் விதத்தில், வெள்ளையர்களுக்குச் சவால் விடும் வகையில் கார்கள், லாரிகள், பேருந்து வாகனங்கள் பலவற்றுடன் ராபர்ட்சன் பேட்டையில் 'கே டாக்கீஸ்' அருகில் 'சிறீ ஆண்டாள் மோட்டார் சர்வீஸ் அண்ட் ஒர்க்ஸ்' எனும் போக்குவரத்துக் கழகத்தை நிறுவி வேலை வாய்ப்பினை அளித்தார்.

சிறீ நம்பெருமாள் பள்ளியை நிறுவிய தலைவர் எம்.சி. மதுரைப் பிள்ளை காலமானதையடுத்து, 1935 இல் அப்பள்ளியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். கல்விக்கென எவ்வளவு செலவழித்தாலும் வீணில்லை என்பதே இவரது கொள்கை. அக்காலத்தில் எட்டாம் வகுப்புக்குக்கூட அரசுத் தேர்வுகள் நடைபெற்றதன் பொருட்டு, தங்கவயலில் முதன் முதலாக இரவுப் பள்ளி வகுப்புகள் நடத்தி, அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் முதல் தரத்தில் தேர்வு பெறஊக்குவித்தார். இரவுப் பள்ளி வகுப்புகள் நடந்தேற, சிறீ நம் பெருமாள் பள்ளி மேலாளர் வி.டி. பெரியாழ்வாரை பொறுப்பேற்கச் செய்தார்.

தங்கச்சுரங்கத் தொழிலாளர்களுக்கு 1929 வரை எந்தவிதப் பொழுது போக்கு அம்சமும் கிட்டாமல், அவர்கள் மன வறட்சிக்கு ஆளாகியிருந்த நிலையில், பூசாமி அவர்கள், 1930 இல் நியூ இம்பீரியல் ஹாலை ஆங்கிலேயர்களிடமிருந்து குத்தகைக்கு எடுத்து, தமிழ் பேசும் - பாடும் படமான 'சத்தியவான் சாவித்திரி'யை வெளியிட்டார். தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் புழங்கிய அரங்கம் அசுத்தமாகி விடுகிறது என்று காரணம் காட்டி, ஆங்கிலேயர்கள் குத்தகை உரிமம் தொடரத் தயக்கம் காட்டியதால், இதை மானப் பிரச்சனையாக எதிர்கொண்ட பூசாமி அவர்கள், 'சுயமரியாதையின் சின்னமாக' 'ஜுபிலி ஹால்' திரையரங்கத்தை 1936 ஆம் ஆண்டில் கட்டி முடித்து - வடதமிழகமும் புகழத் திறப்பு விழா நடத்தினார். பூசாமி அவர்களின் சுயமரியாதை வீரியத்தைப் புகழ்ந்து இ.நா. அய்யாக்கண்ணு புலவர், வி.எம். தாவீதுப் புலவர், வி.எம். வடுக நம்பியார், மதுரகவி சி.எஸ். அதிரூபநாதன், ஏ. பாக்கியநாதன் போன்றோர் புகழ்மாலை சூட்டினர்.



❝ ஆபத்து மிக்க சுரங்கத் தொழிலைச் செய்ய 'தேரு' 'டேடு' எனப்பட்ட 'பறையர்' சாதியினர் துணிவோடு முன் வந்தனர். பன்னிரண்டு ஆட்களை வேலைக்கு அமர்த்தி, மூன்று ஆட்களுக்குத் தினக் கூலியாக ஒரு கன்ட்டராய பணமும், சுரங்கத்தில் எரிவிக்க எண்ணெய் விளக்குகளுக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு மூன்று பணமும், கடப்பாரை, தகரக் கூடைகள் வாங்க இரண்டு பணமும், சட்டி, மூங்கிற் கூடைகள், கயிறு முதலியன வற்றிற்கு ஒரு பணம் வீதமாகவும் பன்னிரண்டு நாட்களுக்கு 4 கன்ட்டராய பகோடா மற்றும் 6 சென்னைப் பணமும் செலவழித்து, 30 பகோடா எடையுள்ள தங்கத்தை எடுத்த பின்னர் முறையோடு சுரங்கத் தொழில் நடத்தி வெற்றி காணும் நம்பிக்கை எனக்கேற்பட்டது. ❞

– சென்னை மாகாணத்தின் மேற்கு எல்லையையும், மைசூர் ராஜ்யத்தின் கிழக்கெல்லையையும் நிர்ணயித்துச் சர்வே செய்யும் பொறுப்பினை ஏற்ற ஆய்வாளர் லெப்டினண்ட் ஜான்வாரன்
- 'கோலார் தங்க வயல் வரலாறு',
கே. எஸ். சீதாராமன், பக்கம் : 23

பூசாமி அவர்களின் பெருமுயற்சியால் 1937 ஏப்ரல் 5 ஆம் நாள் அன்றைய மைசூர் திவான் ராஜ மந்த்ரப் பிரவீணா என். மாதவராவ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1938 செப்டம்பர் 7 ஆம் நாள் இளவரசர் கண்டீரவ நரசிம்மராஜா (உடையார்) அவர்களால் தங்க வயல் சானிடரி போர்டு உயர் நிலைப் பள்ளி திறந்து வைக்கப்பட்டது. குறைந்த பேச்சு நிறைந்த செயல் என்பதனை வாழ்வின் குறிக்கோளாக ஏற்றுச் செயல்பட்டு வந்த பூசாமி அவர்கள், தாம் திரட்டிய செல்வத்தின் பெரும் பகுதியை தம் மக்களின் நலனுக்குக் கொடுத்தே மகிழ்ந்தார்.

மக்கள் சேவையின் பொருட்டே, பெங்களூர் சென்று திரும்புகையில் 1941, சூன் 27 ஆம் நாள் கோலார் நெடுஞ்சாலையில் காரிலிருந்தபடியே மாரடைப்பால் மக்களை விட்டுப் பிரிந்தார். இறுதி மரியாதையைச் செலுத்த தங்கவயல் மக்கள் அனைவருமே திரண்டு வந்து கண்ணீர் வடித்தனர். இவரது இறுதி ஊர்வலத்திற்கு ஈடான ஒன்று, அதன் பிறகு தங்கவயலில் நடந்தேறியதில்லை. 26.7.1941 அன்று கோலார் தங்கவயல் ஆதிதிராவிடர் மகாஜன சபை சார்பில், மாபெரும் இரங்கல் கூட்டம், சீப் மைனிங் இன்ஸ்பெக்டர் கே. துரைசாமி அவர்கள் தலைமையில் ராபர்ட்சன்பேட்டை கிங் ஜார்ஜ் ஹாலில் நடைபெற்றது.

தனிப் பெரும் தலைவர் பூசாமி அவர்கள், தொல்தமிழர்களின் வாழ்வியல் உரிமைக்கும், சுயமரியாதைக்கும், சுதந்திரத்திற்கும், வளர்ச்சிக்கும் உத்திரவாதமாக வாழ்ந்தவர். சாராம்சத்தில் பவுத்த வாழ்வியல்படி, தானும் வாழ்ந்து உயர்ந்து, சமூகத்தையும் உயரச் செய்தவர். ●



படிப்பகம்

www.padippakam.com

# மீட்சிக்கான கலை விழா



திருவண்ணாமலை - திருவில்லிபுத்தூர் அருகிலிருக்கும் ஒரு கிராமம். இங்கு ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி, இரவு நேரங்களில் தங்களின் கலைவடிவங்களை நிகழ்த்தி வந்த நிலை மாறி, பிற்காலத்தில் திரைப் பாடல்களுக்கு ஆடுகின்ற தள மாக ஆகிவிட்டது. இச்சூழலை மாற்றி, ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்ற இடத்தை, அருந்ததியர் விடுதலைக்கானப் பிரச்சாரத் தளமாக அண்மைக்காலமாக அருந்ததியர் இயக்கங்கள் செய்து வருகின்றன. இன்று சமஸ்கிருதமயமாக்கப்பட்டு, அரசுடைமை ஆக்கப்பட்டு, பார்ப்பனர்களின் வேத, மந்திர, சடங்குகளுக்கு உள்ளாகிப் போன பெருமாள் கோயில் தங்களுக்குச் சொந்தமானது என்றும், தங்களிடமிருந்து பறிக்கப்பட்டது என்றும் அருந்ததியர்களின் வாய்மொழி வழக்காறுகள் கூறுகின்றன.

குறிப்பாக கடந்த அய்ந்து ஆண்டுகளாக 'அருந்ததியர் கலை விழா'வாகப் பரிமாணம் பெற்று ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக, கலாச்சார, அரசியலின் மீட்டுருவாக்கத்திற் கான இடமாக அது மாறிவருகிறது. 1.10.2005 அன்று மாலை 6 மணி முதல் அதிகாலை 4.30 வரையிலும் விடிய - விடிய 'அருந்ததியர் கலை விழா' மிக எழுச்சியோடு நடைபெற்றது. இக் கலை விழாவை 'அருந்ததியர் ஒருங்கிணைப் புக் குழு - தமிழ் நாடு' என்கிற அமைப்பு நடத் தியது. அண்ணல் அம்பேத்கரின் வாழ்க்கை வரலாறு, காந்தியோடு ஏற்பட்ட மோதல்கள், போராட்டங்கள் ஆகியவை பார்வைக் கூத்தாக நிகழ்த்தப்பட்டன.



கு.ஜக்கையன்

இக்கலை விழாவிற்கு, தமிழ் நாடு அருந்ததியர் சனநாயக முன் னணியின் மாநில அமைப்பாளர் எஸ்.கே. பழனிச்சாமி தலைமை தாங்கினார். இந்திய விடுதலைப் போராட்டத்தில், புலித் தேவனு டைய படையில் தளபதியாக இருந்து, வெள்ளையர்களை எதிர்த் துப் போராடி உயிர் நீத்த 'தளபதி ஒண்டிவீரன்' பெயரில் விருதும், மதுரையில் திருமலை நாயக்கரின் படையில் தளபதியாக இருந்து கள்ளர் கூட்டத்தை அடக்கி, சாதி ஒழிப்புத் திருமணம் செய்து மநு தருமத்தின் கட்டுப்பாடுகளை மீறியதால் படுகொலை செய்யப்பட்ட 'மதுரைவீரன்' பெயரில் விருதும், தமிழகத்தின் தென் மாவட்டங் களில் நையாண்டி மேளத்தில் புகழ்பெற்ற 'சம்பாரி வாத்தியார்' அவர்களின் பெயரில் விருதும் வழங்கப்பட்டன.

'தளபதி ஒண்டிவீரன்' விருதை செபமாலை ராசா வழங்க, தமிழ் நாடு அருந்ததியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் அரு.சி. நாக லிங்கம் பெற்றுக் கொண்டார். 'மதுரை வீரன்' விருதை மீசை முனி யாண்டி வழங்க, சென்னை அருள் ஒளி உறவின் முறை செயலாளர் அந்தோணிராஜ் பெற்றுக் கொண்டார். சம்பாரி வாத்தியார் விருதை கோவை 'விழுதுகள்' தங்கவேல் வழங்க, வெம்பூர் அழகர்சாமி வாத்தியார் பெற்றுக் கொண்டார். கலைவிழாவை அருந்ததியர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கு. ஜக்கையன் ஒருங்கிணைத்தார்.

வீழ்த்தப்பட்ட வீர வரலாறுகளையும், பார்ப்பனியத்தால் சிதைக் கப்பட்ட பண்பாடுகளையும், அழித்தொழிக்கப்பட்ட அடையாளங் களையும் அருந்ததியர் கலைவிழா மீட்டெடுத்திருக்கிறது என்பது மிகையல்ல. 'கலைவிழாக்கள் காட்சிக்காக அல்ல; கழுத்தறுக்கப் பட்ட எம்மக்களின் மீட்சிக்காகவே' என்கிற கலைவிழாவின் முழக் கம் தொடர்ந்து ஒலிக்கும் என்பது மட்டும் நிச்சயம். •

# அனைத்து வளங்களிலும் சமபங்கு

சமூக நீதிக்கு வேட்டு வைக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும்; தனியார் துறை நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகளில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த சட்ட மியற்ற வேண்டும்; தண்ணீரை வியாபாரப் பண்டமாக்கி, பன் னாட்டு நிறுவனங்கள் உறிஞ் சிக் கொழுப்பதைத் தடை செய்ய வேண்டும்; அனைத் துப் பொது வளங்களிலும் ஆதித் தமிழர்களுக்கு சம பங்கு வழங்க வேண்டும்; தாம்பரம் தேசிய சித்த



மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திற்குப் பண்டிதர் அயோத்திதாசர் பெயர் சூட்ட வேண்டும் என்பது உள்ளிட்டப் பல கோரிக்கைகளை வலியுறுத்தி, 5.10.2005 அன்று சென்னை நினைவரங்கம் எதிரில், ஆதித் தமிழர் விடுதலை இயக்கம் மற்றும் தலித் உரி மைக் கூட்டமைப்பு சார்பில், மத்திய - மாநில அரசுகளைக் கண்டித்தும், பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தியும் கண் டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட் டது. இவ்வமைப்பின் திரு வள்ளுவர் மாவட்டச் செய லாளர் கா. ஆனந்தன் தலைமை யில் நடைபெற்ற போராட்டத் தில், மாநில அமைப்பாளர் அ. வினோத் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார். •



படிப்பகம்

www.padippakam.com




## பஞ்சமி நிலங்களை மீட்போம்

தமிழகமெங்கும் தலித் மக்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்களை மீட்டு, தலித் மக்களிடமே ஒப்படைக்கக் கோரியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளில் தேர்தல் நடைபெறத் தடையாக உள்ள ஆதிக்க சாதிகளை, குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யக் கோரியும், வாடிப்பட்டி கச்சைகட்டியில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா உடனே வழங்கக் கோரியும் - மதுரை வாடிப்பட்டியில் 'புரட்சி வேங்கைகள்' சார்பில் 18.10.2005 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் அ. ஆனந்தன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் த. பாண்டியன் பங்கேற்று உரை நிகழ்த்தினர். மாநிலச் செயலாளர் ஆ. குருவிஜயன் சிறப்புரை நிகழ்த்தினார். •

### தேர்தலைச் சந்திக்க சிந்திப்போம்

ஆதிக்க சாதிக் கட்சிகளின் தேர்தல் திருவிழாவில், தலித் இயக்கங்களும், தலித் மக்களும், நம் தலைவர்களும் பெரும்பாலும் பார்வையாளர்களாகவும், கச்சாப் பொருட்களாகவுமே இருந்து வந்துள்ளோம். இன்னும் சில மாதங்களில், மீண்டும் தேர்தல் கூத்துக்கான ஒத்திகை முனைப்பாகத் திட்டமிடப்பட்டு வருகிறது. இச்சூழலில், கடந்த காலம் குறித்து மீளாய்வு செய்யவும், எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்வது எப்படி என்றும் கூட்டாகத் திட்டமிட வேண்டும். கலந்துரையாடல் கூட்டத்திற்கு அனைவரும் வருக.

- நாள் : 12.11.2005 சனிக்கிழமை
- நேரம் : காலை 10 மணிக்கு
- இடம் : ஓட்டல் தாசப்பிரகாக, சென்னை

ஒருங்கிணைப்பு : தமிழக தலித் இயக்கங்களின் கூட்டமைப்பு
பேசி : 98651 - 15209




## படித்தவர்களுக்குப் பாராட்டு

அன்னை சாவித்திரி தர்மலிங்கம் (எ) கவுதம் கல்வி அறக்கட்டளை சார்பில், அன்னை சாவித்திரி இல்லத்தில் மூன்றாம் ஆண்டு மழலையர் முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை - அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்வு பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசும், பாராட்டு நற்சான்றிதழும் வேலூர் கஸ்பாவில் 15.10.2005 அன்று வழங்கப்பட்டது. இந்த விழா, அறக்கட்டளை நிறுவனர் சுபேதார் டி. தர்மலிங்கம் (எ) கவுதம் தலைமையில் நடைபெற்றது. அன்னை சாவித்திரி படத்தை, தென்னக கலை பண்பாட்டுத் துறை மய்ய இயக்குநர் டாக்டர் ஏ.சி. மோகன்தாஸ் திறந்து வைத்தார். வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கோபால கிருஷ்ணன் மற்றும் தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் பாண்டுரங்கன் விழாவில் பங்கேற்று, அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளைப் பாராட்டி, நற்சான்றிதழ்களை வழங்கினர்.

போட்டிகள் நிறைந்த இந்த காலகட்டத்தில் மாணவர்கள் நன்றாகப் படிக்க, அதிக மதிப்பெண்கள் பெற இந்த அறக்கட்டளை உதவி செய்யும் என்று அறக்கட்டளை நிறுவனர் சுபேதார் டி. தர்மலிங்கம் உறுதியளித்தார். •



## விடுதலைக்கான முரசொலி

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் நகரில், அம்பேத்கர் ஆதிதிராவிடர் இயக்கத்தின் சார்பில் - தலித் கலை விழா 6.10.2005 அன்று எழுச்சியோடு நடைபெற்றது. காலங்காலமாக இந்துத்துவ, பார்ப்பனிய சனாதனிகளின் இருப்பிடமாகவும், ஆதிக்க சாதிவெறியர்களின் கோட்டையாகவும் விளங்கும் திருக்கோயிலூரின் அய்ந்துமுனை சந்திப்பில், அனைத்துக் கலைகளும், தலித்துகளின் சோகத்தைச் சொல்லி கழிவிரக்கம் தேடாமல், விடுதலைக்கான முரசொலியாகவே அமைந்தன. கலை நிகழ்ச்சிகளுக்கு நடுவே இயக்கத்தலைவர்களின் கருத்துச் செறிவான - உரை முழக்கங்களும், மக்களின் விடுதலை உணர்வுகளை உசுப்பேற்றியது. எஸ்.எம். நாதன் தலைமையில் நடைபெற்ற இக்கலை விழாவிற்கு, தலித் எழுச்சிப் பாவலர் ஏ.பி. நாயகன் தொகுப்புரை வழங்க, ஆர்.எல். ரொசாரியோ, பி. லலிதா, தலித் சுப்பையா மற்றும் முன்னணி தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் உரை நிகழ்த்தினர். •


படிப்பகம்

www.padippakam.com

# மடல்கள்




■ கொடிக்கால் ஷேக் அப்துல்லா தமது பேட்டியில், 'ஒரே நொடியில் சாதியை ஒழிப்பதற்கு இஸ்லாம் மார்க்கத்திற்கு மாறுவதுதான் மாமருந்தாகும்' என்று கூறியிருப்பது, சிறந்த தீர்வாகத் தெரிகிறது. மேலக்கால் வீரபத்திரன் அவர்களும் முகமது பிலாலாக மாறி - சமத்துவச் சமுதாயம் கண்டார் என்பது குறிப்பிடத் தகுந்தது. ஒட்டுமொத்த தலித்துகளும் இது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தருணம் இது.

**மா. முத்தையா,** *திருநெல்வேலி*

■ பேராயர் ஒ.எம். சின்னப்பாவின் தலித் கிறித்துவர்களுக்கு இடஒதுக்கீடு கட்டுரை படித்தேன். கிறித்துவ திருச்சபைகள் பாறையின் மீது கட்டப்படவில்லை; தலித் கிறித்துவர்களின் எலும்புகளாலும், ரத்தத்தாலும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், தேவாலயங்களில் அவர்களைப் புறக்கணிக்கும் போக்கே நீடிக்கிறது. அரசு, தலித் கிறித்துவர்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க மறுத்தால், திருச்சபைகளின் கோடானுகோடி சொத்தில் அம்மக்களுக்கு உரிய பங்கை ஈடு செய்யவேண்டும். அப்போதுதான் கிறித்துவம் உயிர்ப்பெறும். இல்லை எனில், கிறித்துவம் இந்தியாவில் அழிவதைத் தடுக்க முடியாது.

**எஸ். தேசா,** *திண்டுக்கல்*

■ பல்வேறு வார, மாத இதழ்களைப் படித்துக் கொண்டிருந்த நான் முதல் முறையாக 'தலித் முரசு' படித்தேன். கண்ணீர் வடித்தேன். 'தலித் முரசு' இதழ் மூலம் என் போன்றோர் சமூகத்திற்குத் தொண்டாற்றிட வழி காட்டியுள்ளீர்கள். இதழைத் தொடர்ந்து பரப்புவோம்.

**கலிய. செந்தில்,** *ஆறுபாதி*

■ அமெரிக்காவில் உள்ள கருப்பர் இன மாணவர்களுக்கு அளிக்கப்படும் பட்டமளிப்பு விழாவைப் போல - இந்தியாவில் தலித் மாணவர்களுக்கும் நடத்தப்படும் என்று 'துடி' இயக்கம் அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. 'துடி' இயக்கத்திற்கு எங்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம். தலித் கிறித்துவர்களுக்கும் இடஒதுக்கீட்டில் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அனைத்து தலித் இயக்கங்களும் போராட வேண்டும். இதைத் தேர்தலில் முக்கிய கோரிக்கையாக அரசுக்கு வைக்க வேண்டும்.

**ஜெ. மணிக்குமரன்,** *நெல்லை*

■ தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களிலும் சாதித் தாக்குதல்கள் ஊடுறுவிவிட்டன. எங்கள் பக்கத்து கிராமத்தில் அண்மையில் சாதி இந்துக்களின் சாதி வெறியாட்டம், தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீது ஏவிவிடபட்டது. தலித் இளைஞர்கள் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அதற்கு சாதி இந்துக்கள் இடையூறு செய்கிறார்கள். அம்பேத்கரின் கருத்துகளை இளைஞர்கள் அதிகம் படித்தால், சாதி இந்துக்களின் நிலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. 'தலித் முரசு' இதழை கிராமங்கள் தோறும் கொண்டு செல்ல வேண்டும்.

**நா. முருகேசன்,** *களிப்பாளையம்*

■ 'தலித் முரசு' இதழில் ஜெனிபரின் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வருகிறேன். பெண்களின் சுயமரியாதையை நசுக்கும் உயிர்நாடியான கலாச்சாரம், மதம் மற்றும் கடவுள்களின் முகத்திரையைக் கிழித்து எழுத்து களாக்குவதில் திறமையானவர் ஜெனிபர். குஷ்பு கூறிய பாலியல் கருத்துகள், ஒட்டுமொத்த உழைக்கும் பெண்களின் பார்வையில் வரும் பெண்ணியம் பற்றிய விடுதலைக் கருத்துகள் அல்ல. உலகமயமும், தனியார்மயமும் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கும் சூழலில், அதற்கு பக்கவாத்தியம் வாசிக்கும் பார்ப்பனியமும் இருக்கும்வரை, பெண்ணிய சுதந்திரம் என்பது கானல் நீர்தான். அதற்குத் தொடர்ச்சியான போராட்டம் தேவை.

**ப்பிரியதர்ஷினி,** *சென்னை*

■ சென்னையில் நடைபெற்ற 'பேஷன் ஷோ'வில் பெண்கள் 'ரிப்பன் சைஸ்' ஆடைகளுடன் மிடுக்காக நடைபோட்டதை புகைப்படங்களுடன் 'பாரதி கண்ட புதுமைப் பெண்கள்' என்று 'தினமலர்' 25.7.2005 அன்று எழுதியது. ஆனால், 12.8.05 அன்று திரைமலரில் 'குண்டக்க மண்டக்க' படத்தின் கதாநாயகி லட்சுமிராய் நடிப்பை 'பாடல்காட்சிகள் மட்டுமின்றி, சீன்களிலும் தனது பழுத்த வீங்கிய இளமையோடு வெளுத்து வாங்கியிருக்கிறார்' என்று தனது கலாச்சாரப் பற்றினைக் காட்டியுள்ளது. முரண்பாடே உன் பெயர்தான் 'தினமலரா?'

**ஆசிரியர், 'இளைய போர்க்குதிரை',** *செல்லாயிபுரம்*

■ நான் பல ஆண்டுகளாக தலித் முரசைப் படித்து வருகிறேன். இந்த இதழ் - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, ஆரோக்கியமான சிந்தனையைத் தூண்டும் இதழாகவும் மனிதர்களை முழு மனிதர்களாக்கும் இதழாகவும் இருக்கிறது. அந்த இதழுக்கு நெருக்கடி என்றால், நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். என்றும் துணை நிற்போம்.

**நாகராஜன்,** *ராமநாதபுரம்*

## ஆணாதிக்கக் 'கற்பு'

'அமைதி காக்கலாமா பெண்கள்?' - ஜெனிபர் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. தமிழ்த் தேசியர்கள் தேவையே இன்றி தங்கர்பச்சானை தூக்கிப் பிடித்துத் தங்கள் நிலையைத் தாழ்த்திக் கொள்கின்றனர். தவற்றுக்கு வருத்தம் தெரிவித்த தங்கர்பச்சானை, நடிகர் சங்கத்திற்கு நேரில் அழைத்து மன்னிப்புக் கோர வைத்தது தேவையற்றது. 'கற்பு' என்ற சொல்லாக்கம், ஆணாதிக்கச் சிந்தனை கொண்டது என்பதில் அய்யமில்லை. காலங்காலமாக இது பெண்ணின் மீதே சுமத்தப்பட்டு, அவளைக் காயப்படுத்தி வருகிறது. ஆயினும், நுகர்வுக் கலாச்சாரம், பண்பாட்டுச் சீரழிவு போன்றவற்றால் - சமூகம் தடம் மாறிச் சென்று கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். 'கற்பு' என்பதைப் 'பொது ஒழுக்கம்' என்ற பொருளுக்கு உட்படுத்தி, அதனை இரு பாலர்க்கும் கட்டாயம் ஆக்க வேண்டும். குஷ்புவின் கூற்று, தாராளமயச் சிந்தனைக்கு வாசல் திறந்து விடக்கூடாது.

**தமிழேந்தி,** *அரக்கோணம்*

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# ஒழுக்கங்கெட்டத் தனத்திற்கு ஒருதலைக்கற்பே காரணமாகும்

இந்து மதம் என்றும் இந்துக்கள் என்றும் நம்மைச் சொல்லிக் கொண்டு, இந்து மதம் சாஸ்திர புராண சம்பந்தமான விஷயங்களைத் தமிழர் தலையில் சுமத்துவதும், தமிழர்கள் அதற்குக் கட்டுப்படுவதும் நியாயமா? இந்து மதப் புராணங்களில் 'கற்பு'க்கு லட்சணம் ஒரு பெண் (நளாயினி), தனது புருஷன் குஷ்டரோகியாய் இருந்து கொண்டு தாசி வீட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னாலும், அவனைக் கழுவி எடுத்துக் கூடையில் வைத்துத் தலையில் தூக்கிக் கொண்டு போய் தாசி வீட்டில் வைத்து, விடிந்த பிறகு மறுபடியும் தாசி வீட்டிலிருந்து தன் வீட்டிற்குத் தூக்கிவர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்து மதத்தை வலியுறுத்துகிற ஒருவன், தன் மகளுக்கு இப்படிப்பட்ட புருஷன் அமைந்து அவன் தன் பெண்ஜாதியை இப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லுவானானால், ஒப்புக்கொள்ளுவானா?...

ஆண் - பெண் கூட்டு வாழ்க்கையில் இப்போது வழங்கி வரும் கருத்தமைந்த 'கற்பு' என்னும் வார்த்தையே அவசியமற்றது என்றும், அது வாழ்க்கை இன்பத்திற்குக் கேடு பயக்கின்றதே ஒழிய, அதனால் நன்மை இல்லை என்றும் சொல்லுவேன். இன்று வழங்கும் 'கற்பு' பெண்களுக்கு மாத்திரமே ஒழிய ஆண்களுக்கு இல்லை. அது, பெண்களை நிர்ப்பந்திப்பது போல் ஆண்களை நிர்ப்பந்திப்பதில்லை. சமுதாயத்தில் ஒழுக்க ஈனம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த ஒருதலைக் கற்பே யாகும். பெண்கள் அடிமையாக்கப்பட்டதற்கும் இந்த ஒரு தலைக் கற்பே காரணமாகும். இந்த ஒரு தலைக்கற்பு உள்ளவரை, சமுதாயம் சீர்படப் போவதில்லை என்பதே எனது உறுதி...

ஆண்களின் ஒழுக்க ஈனமான நடத்தைகளை இந்துமதக் கடவுள், சமயம், சாத்திரம், புராணம் ஆகியவை ஒப்புக் கொள்ளுகின்றனவா இல்லையா என்று கேட்கிறேன். இவை கூடாது என்று சொல்லுகிற ஒரு தமிழன், தன்னை இந்து மதத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? இப்படிச் சொல்லுவதன் மூலம் ஆண்களைப் போலவே பெண்களும் ஒழுக்க ஈனமாக இருக்க வேண்டுமென்று போதிப்பதாகக் கொள்ளக்கூடாது. பெண்களைப் போலவே ஆண்களும், ஒழுக்கமாக இருக்கச் செய்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் சட்டமோ, சமுதாயமோ செய்ய வேண்டும். செய்யாவிட்டால், சில பெண்களாவது முன் வந்து அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்யத் துணிவதாகவாவது காட்ட வேண்டும். உரிமையில்தான் சுதந்திர உணர்ச்சி இருக்கிறது. அது இல்லாத இடத்தில் அடிமை உணர்ச்சிதான் இருக்கிறது. அதனாலேயே நமது பெண்கள் அடிமைகளானார்கள். அப்பெண்களின் வயிற்றில் பிறந்த நாம் அடிமை வாழ்வு வாழ்கிறோம்...

அநேகம் பேர்களுக்குச் சேர்க்கையால்தான் பிள்ளைப் பேறு கர்ப்பம் உண்டாகின்றது என்பது கூடத் தெரியாது. 'ஏதோ கடவுள் கொடுக்கிறார். கடவுள் வயிற்றில் கொண்டு விடுகிறார். கடவுளே வளர்க்கிறார். கடவுளே பெற்ற பின்பும் நோய் உண்டாக்குகிறார். கடவுளே சாகடிக்கிறார்' என்று கருதிக் கொண்டு, இது விஷயங்களில் மிருகங்களைவிட கேவலமாய் நடந்து கொள்ளுகிறார்கள். சேர்க்கை விஷயம் அது சம்பந்தமான உடல்கூறு ஆகியவைகளைப் பற்றித் தெரிவது, வெகு கேவலமாக இங்கு பேசப்படுகிறது. கதைகளில், புராணங்களில் நாடகத்தில் பச்சை பச்சையாய்க் கேட்கிறபோதும், பார்க்கிறபோதும் ஆனந்தக் கூத்தாடுகிறோம்.


அந்தக் கலைகளை நமது ஆண் - பெண் இருபாலருமே ஓர் அளவுக்காவது தெரிந்து இருக்க வேண்டும். அது தெரிந்து கொள்ளாமல் வெறும் மிருகப் பிராயமாய் இருப்பதாலேயே அநேக நோய், சாவு, ஊனம், மனச்சஞ்சலம், பொருந்தா வாழ்வு ஆகியவை பெருகுகின்றன. குழந்தைகள் பெறுவதில் கர்ப்ப காலத்தில் எப்படி இருக்க வேண்டும், குழந்தை பிறந்த பிறகு எப்படி இருக்க வேண்டும், எத்தனை நாள் பொறுத்து மறுபடியும் கர்ப்பம் தரிக்க இடம் கொடுக்க வேண்டும் என்பவைகளையாவது ஒவ்வொரு பெண்ணும் தெரிந்திருக்க வேண்டும்.

சேர்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்பது தெரியாமல் நடந்து கொண்டு நோய் வந்தால், அதற்குப் 'பொம்பளை நோவு' என்று சொல்லி விடுகிறார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், பெண்களுக்கு அது சம்பந்தமான நோய் வந்தாலும், பெண்கள் அதையும் 'பொம்பளை வியாதி' என்றுதான் சொல்லுகிறார்கள். இது, பெண்கள் சமூகத்திற்கே இழிவான காரியமாகும்.

ஆண் - பெண் தன்மை, உடல்கூறு, சேர்க்கை விளக்கம், கர்ப்பம், பிள்ளைப்பேறு ஆகியவைகளைப் பற்றிச் சர்க்கார், அத்தருணம் நெருங்கிய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அல்லது மேல் வகுப்புக்குப் பாடமாகவாவது வைக்க வேண்டும். இவை நன்றாக மக்கள் அறிந்தால், இக்காரியங்களில் ஒழுக்கத் தவறுதல்கூட ஏற்படாது என்பது எனது அபிப்பிராயம். சின்ன தவறுதல் கூட ஏற்படாது என்பது எனது அபிப்பிராயம். இன்ன இன்ன பதார்த்தம் சாப்பிட்டால், உடலுக்கு ஒத்துக்கொள்ளாது, நோய்வரும் என்று கருதினால், எப்படிச் சாப்பிடாமல் விட்டுவிடுகிறானோ, அதுபோல் இன்ன மாதிரி நடந்தால் கேடுவரும் என்று தெரிந்தால், அதைச் செய்யாமல் தப்பித்துக் கொள்வான். அப்படிக்கில்லாமல் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தெரியாமல், இஷ்டப்படி நடந்து கொண்டு வந்த வினையைக் கடவுள் செயல் என்று சொன்னால் - மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?

ஈ.வெ.ரா.

*காஞ்சிபுரத்தில் 16.6.1940 அன்று நடைபெற்ற திருமண விழாவில் ஆற்றிய உரை*



**"கட்டுப்பாடு, கடவுள், சமயம், சாஸ்திரம், புராணம் என்று சொல்லி வந்ததெல்லாம், சொல்லி வருவதெல்லாம் - பெண்களை அடிமைப்படுத்தவும், பாமர மக்களை அடிமைப் படுத்தவும் பயன்பட்டனவே அன்றி, மக்களுக்கு உரிமை அளிக்கப் பயன்பட்டதா? ஓர் ஆண் பல பெண்களை மணக்க உரிமை இருந்தால், ஒரு பெண் பல ஆண்களை மணந்து கொள்ள உரிமை இருக்க வேண்டும். அது கூடாது என்றால், இருவருக்கும் ஒன்றுபோல் நீதி ஏற்படுத்த வேண்டும்."**



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவலம் போக்கிட

## நவம்பர் 28 அன்று மாநிலம் தழுவிய

# ரயில் மறியல்

மனித நேயம் உள்ள எவரும் பொறுத்துக் கொள்ள முடியாத
இழிவுகளிலிருந்து நம் சொந்தங்களை மீட்க,
உணர்வுள்ள அனைவரையும் உரிமையோடு அழைக்கிறது



## ஆதித்தமிழர் பேரவை

படிப்பகம்